

கல்கி
KALKI 25-4-1976 75 காசு

ஓரியண்ட்

காற்றிற்கு அழகூட்டும் ஃபேன்கள்



இந்தியாவில் ஃபேன்கள் தயாரிப்பதில் அனுபவமிகுந்தவர்களால் செய்த ஓரியண்ட் ஸீலிங் ஃபேன்கள் எல்லாம் நவீன காலடிஸைனும் இணையற்ற நேர்த்தியும் கொண்டவை. உங்கள் குறிப்பிட்ட தேவைகளுக்கும் நவீனகால வீடுகளின் அழகிற்கு அழகு செய்யவும் ஏற்ற பல்வேறு அளவுகளில் மி.மீ. 900 லிருந்து 1500 மி.மீ. வரை கிடைக்கின்றன - அனைத்து தயாரிப்பு நிலைகளிலும் கண்டிப்பான தரக்கட்டுப்பாடுடன் இடைவிடாத ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் செய்திருப்பதால் ஆண்டுக் கணக்கில் அசைவற்றும் அமைதியாகவும் தொந்தரவு இல்லாமலும் உழைக்கின்றன.

இரண்டுவருட உத்தரவாதம்

ஓரியண்ட்
விசிறிகள்

நீண்டகாலமிருக்கும் ஃபேன்கள் வாழ்நாள் முழுதுமான சிக்கனத்திற்கு

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

6, கோர் பீபீ லேன், கல்கத்தா-700 054

தொழிற் சாலைகள் : கல்கத்தா மற்றும் பரிதாபாத்

CC/OGI-4/76 TAM



கல்கி

அாலவு
சித்திரை 13

ஏப்ரல் 25
1976


"கல்கி" யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.

சிறை மாற்றம்!

எங்கோ இருளில்
எட்டாத் தொலைவில்
யாரும் காணு
ஆழத்தில்,
பனியும் தாண்டி,
பாலைவனத்துள்
புதைந்த என்னை —
போரிட்டு,
ஆர்வம் கொண்டு
ஆத்திரமாகச்
சேர்த்தார்.
சேர்த்துப் பின்
ஏனு

இங்கே கொணர்ந்து
எங்கும் பலமாய்க்
காவல் வைத்தார்.
கண்காணுச்
சுரங்கத்துள்ளே
யாரும் அறியா
ஆழத்தில்
புதைத்தார். ஏன்?
ஏன் இந்தச் சிறை மாற்றம்?

— அ. ஆசீர்வாதம்



ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் தயாரிப்புகள் வரிசையில்

மற்றுமொரு புதிய வகை —

3-7 பிராண்ட் குறைந்த காரமுள்ள

ஊறுகாய்கள் (எண்ணெயில்)

• ஆவக்காய் மாங்காய் • மாங்காய்
• எலுமிச்சை • கதம்ப காய்கறிகள்
• பச்சை மிளகாய் முதலியன

3-7 பிராண்ட் ஊறுகாய்களில்

குறைவான அளவில் காரமும், எண்ணெயும் சேர்க்கப்பட்டுள்ளதால் வட இந்தியர்களுக்கும், மேலை நாட்டினருக்கும் சாலச் சிறந்தது

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,

46, தம்பு செட்டித் தெரு (போன் : 20401) சென்னை - 600001







கௌசிகன்

எமபயத்தைப் போக்கிச் சாகாக்கலையைப் போதிப்பதாகவும் அற்புதங்களை நிகழ்த்துவதாகவும் கூறிய பிரமப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர் வாழ்ந்த இடம் இன்று சர்ச்சைக்கும் சங்கைக்கும் உரியதாகி விட்டது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து புதுக்கோட்டைக்குக் கீரனூர் அன்னவாசல் வழியாகச் செல்லும் நெடுஞ்சாலையில் 'மெய்வழிச் சாலை செல்லும் வழி' என்ற அறிவிப்புப் பலகை காணப்படுகிறது. பிரதான சாலையிலிருந்து பிரிந்து செல்கிறது ஒரு வண்டித் தடம். கருவேலம் மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதி. வளைந்து வளைந்து ஏறி இறங்கிச் செல்லும் பாதை. ஆள் உயரத்துக்கு எழுப்பப்பட்ட கருவேல முள் வேலியில் முடிகிறது. முப்பத்திரண்டு ஏக்கர் பரப்பளவுள்ள மெய்வழிச் சாலையை இம் மாதிரி முள் வேலி கொண்டுதான் வளைத்திருக்கிறார்கள். நாலைந்து இடங்களில் உள்ளே நுழைய வாசல்கள். மெய்வழிச் சாலைக்குள் ஒரு தபால் நிலையம் இருக்கிறது. வரிசை வரிசையாக அனந்தர்கள் வாழும் குடிசைகள். அமைதியான சூழல். ஓர் ஆழ்ந்த கனமான மௌனம் நிலவுகிறது. மனிதர்கள் யந்திரங்களாக நடமாடுகிறார்கள். இந்த நிலை சமீபத்திய விளைவுகளின் பிரதிபலிப்பாக இருக்கலாம்.


ஆயுதப் போலீசார் ஆங்காங்கே சாதாரண உடையில் காணப்படுகிறார்கள். மெய்வழிச் சாலைக்குள் மின்சார வசதி கிடையாது. ஆகவே திருச்சி, மதுரை, புதுக்கோட்டை ஆகிய நகரங்களுடன் செய்தித் தொடர்பு கொள்ள விசேஷ ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்முகத்தோடு வரவேற்ற அரசாங்க அதிகாரிகள் தோண்டிப் புதையல்களை வெளிக் கொண்டு வந்த இடங்களைக் காட்டி விளக்குகிறார்கள். தோண்டிய தேதி. கிடைத்த பொருள்களின் பட்டியல் ஆகியவற்றை ஒவ்வொரு குழி அருகிலும் ஒரு குச்சி தாங்கி நிற்கிறது.


''ஆண்டவரின் குளியலறை இது. இங்கு தோண்டியதில் மூன்றரை லட்சத்துக்கான தங்க நகைகளும், தங்க பிஸ்கட்டுகளும் கிடைத்தன.''


''ஆண்டவரின் இரண்டாம் மனைவி பனிமதி நாச்சியார் அணிந்திருந்த தங்கக் கொலுசு, முத்து மாலை ஆகியவை இங்குதான் மண்ணில் புதைத்து வைக்கப் பட்டிருந்தன.''

''ஆண்டவரின் வேலைப்பாடு மிக்க தங்கச் செங்கோல் கூரையில் உள்ள ஓர் இரும்புக்









குழாய்க்குள் ஒளித்து வைக்கப் பட்டிருந்தது இங்குதான்.''

''ஆண்டவர் தூங்கும் இடம் இங்கே...''

''ஆண்டவரின் திருமாளிகை தோண்டப் பட்டபோது கிடைத்தவை இவை....''

''ஆண்டவரின் உடலை அலங்கரித்த ஆப ரணங்கள் தங்கமும் வைரமுமாக மதிப்பு ஆறு லட்சத்துக்கும் மேலே. அவை ஒரு பையில் போட்டு ஒரு குடிசையின் சமைய லறையில் புதைக்கப்பட்டிருந்தன. அதன் மேலே ஒரு மண் கலயம். அதனுள் ஆண்டவர் அணியும் தங்கக் கிரீடம். இதன் மேல் மண்ணைப் பரப்பி ஒரு கல் உரலை வைத் திருந்தார்கள்.'' விளக்குகிறார் அதிகாரி.

''வழிபாடு, பிரசங்கம், பக்தர்களுக்குத் தரிசனம் தரும் ஆண்டவரின் பொன்னரங் கத் தேவாலயம் – இன்று புல்டோஸரால் புரட்டப்பட்டிருக்கிறது. இங்குதான் அவரது சமாதியும் இருக்கிறது – இங்கு கிடைத் தவை....'' அதிகாரிகளின் புள்ளி விவரங்கள் நம்மைத் திணற அடிக்கின்றன.

மெய்வழிச் சாலைக்கு வெளியே உள்ள அனந்தர்கள் ஆரஞ்சு வர்ணத் தலைப்பாகை யும் பிறை வடிவ புருச்சம் அணிந்து காணப் படுகின்றனர். உள்ளே ஐந்நூறு குடும்பங்கள் வாழ்கின்றன. இங்குள்ளவர்கள் காவி வண்ணத் தலைப்பாகை, காவி வண்ணவேஷ்டி யைக் கச்சம் வைத்துக் கட்டியுள்ளார்கள். அதன் மேலேயே இடுப்பைச் சுற்றி இறுக்கிய காவி வண்ணத் துண்டு. பெண்கள் காவி நிறத்தில் ஒரு கச்சையைத் தலையில் கட்டிக் கொண்டுள்ளனர்.

''முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் இந்த மெய்வழிச்சாலையில் இப்படி ஏராளமான தங்கம் பதுக்கப்பட்டுள்ள விஷ யம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்கிறோம் சுங்க அதிகாரிகளிடம்.

''இரண்டாண்டுகளாகவே எங்களுக்குச் சந்தேகம். கண்காணித்து வந்தோம். தக்க



பட விளக்கம்:

இடப் பக்கம் மேலிருந்து :

- மெய்வழிச்சாலை போகும் மார்க்கம்.
- ஆண்டவர்.
- இரண்டாம் மனைவி பனிமதி நாச்சியார்.

இங்கு - மேலிருந்து :

- மெய்வழிச்சாலையினுள் அனந்தர்கள் வாழும் குடிசைகள்.
- பொன்னரங்கத் தேவாலயத்தில் அனந்தர் களுடன் கல்கி நிருபர்.
- மெய்வழிச்சாலையில் கண்டுபிடிக்கப்பட்ட நகைகள்.

வலப் பக்கம் :

- தங்கக் கிரீடம் புதைத்திருந்த இடத்தை எக்ஸைஸ் அதிகாரி காட்டுகிறார்.

தருணத்தில் வளைத்து விட்டோம்". என்கிறார்கள் அதிகாரிகள்.

இதே சமயம் ஒதுக்கப்பட்டவர்களைப் போல நின்ற சில அனந்தர்கள் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பது நம் கவனத்தைக் கவர்கிறது. ஆண்டவரின் மறைவுக்குப் பிறகு அனந்தர்களிலே பிளவு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தக் காட்சி உணர்த்துவதாக இருக்கிறது. இந்தப் பிளவு காரணமாகத் தான் புதையுண்ட பொருள்கள் வெளிவந்தன என்பது சீக்கிரமே உரையாடலிலும் வெளிப்படுகிறது.

நம்மைப் பொன்னரங்கத் தேவாலயத்திலுள்ள அனந்தர்கள் வரவேற்கிறார்கள்.

"இந்த உலகில் எங்களுக்காகப் பார்க்க இரு கண்கள் இருந்தன; கேட்க இரு செவிகள் இருந்தன. பேச ஒரு வாய் இருந்தது. அது இன்று மறைந்து விட்டது. சிவராஜரான எங்கள் தந்தையே எங்கள் கண்ணும் காதும் வாயுமாக இருந்தார். இன்று அவர் இருந்திருந்தால் இந்த இழிநிலை ஏற்பட்டிருக்காது.

"எமனையும் எம பலத்தையும் அடக்கியாளுகின்ற சிவராஜர் எங்களுடைய தந்தை.

"தலையிலே எழுதிய விதியை மாற்றி அமைக்கும் வல்லமை பெற்றவர் எங்களுடைய தந்தை. மூக்கு வழியே மூச்சு ஓடாத தவத்தை உடையவர் எங்கள் ஆண்டவர்.

"ஊண் உறக்கம் அற்றவர் எங்கள் சிவராஜர். நூற்றி இருபது வயதுடைய இளைஞர் எங்கள் தந்தை. அறுபத்தி ஒன்பது ஜாதிகளைக் கொண்ட பல்லாயிரக்கணக்கான அனந்தர்கள் கூட்டத்தை ஈன்றெடுத்தவர்கள் எங்களுடைய தந்தை...." பக்திப் பெருக்கிலே உணர்ச்சி வசப்பட்டு ஓங்கிப் பேசிக் கொண்டிருந்தார் அவர்.

"ஆனால் ஏசுவின் புகழுக்கு ஒரு ஜூடா தேவைப்பட்டான். இராமனின் பெருமைக்கு இராவணன் வேண்டியிருந்தது. அதுபோல எங்கள் ஆண்டவனின் புகழுக்கும் இங்கு ஒரு சைத்தான் தோன்றியிருக்கிறான். கூட இருந்தே குழி பறித்து விட்டான் அந்தத் துரோகி. உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப் போல!" பதவிப் போட்டியும் பண ஆசையும் பல இரகசியங்களை வெளிக் கொண்டு வந்து விட்டன. இன்று அனந்தர்கள் இரு கட்சியாகி நிற்கிறார்கள்.

கணக்கிலடங்காச் செல்வம் இருந்தும் மெய் வழிச்சாலையில் வாழ்பவர்கள் பகட்டாக இல்லை. எவ்வித வசதிகளும் இல்லை. மண் குடிசைகள், மண்ணெண்ணெய் விளக்குகள், கீற்றுக் கொட்டகைகள், ஏழ்மை தாண்டவமாடுகிறது. ஆண்டவரின் கால் செருப்பிலிருந்து தலைக் கிரீடம்வரை தங்கமாக இருந்தாலும் அவரும்கூட நவீன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அங்கு வாழும் அனந்தர்களும் உல்லாசமாகச் சுகபோகத்துடன் இல்லை. அப்படியானால் இவ்வளவு பொருள் எதற்காக? ஏன் சேமித்தார், பதுக்கினார்?

அனந்தர்கள் கூறுகிறார்கள்:

"எங்கள் ஆண்டவரின் காலடியிலே பக்தர்கள் பொன்னைக் கொண்டு வந்து காணிக்கையாகக் குவித்தார்கள். ஆனால் அவர் அதைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார். கையாலும் தொட மாட்டார். எழுந்து போய் விடுவார். அருகிலிருப்போர்தான் அதைப் பத்திரப்படுத்துவார்கள்."

"தமக்குச் சமர்ப்பிக்கப்படும் காணிக்கைப் பொருள்களைப் பார்த்து, 'ஏய், இது பணமில்லையப்பா. பிணம். இதைக்கொண்டு போய்ப் புதைத்துவிடு' என்பார் எங்கள் ஆண்டவர். அப்படிப் புதைக்கப்பட்டவை தான் இவை."

இன்னொரு விளக்கம்:

"இந்த உலகத்திலே அமிலத்தினாலோ, நெருப்பாலோ, நீராலோ பாதிக்கப்படாதது தங்கம் ஒன்றுதான். ஆண்டவர் மெய்வழிச் சாலையை இங்கு உருவாக்கு முன்பு மதுரையிலே ஓர் இடத்திலிருந்தார். அதைப் பெருந்தொகைக்கு விற்றுப் பிறகுதான் இங்கு வந்தார். அப்படி விற்றதில் கிடைத்த கரன்சி நோட்டுக்களையெல்லாம் தங்கமாக மாற்றினார். தமக்கு அவ்வப்போது காணிக்கையாக வரும் பொருளையும் தங்கமாக மாற்றினார். அப்படி மாற்றிய தங்கத்தையும் ஆபரணங்களையும் இந்த மெய்வழிச் சாலை முழுதும் புதைத்து வைத்தார். ஏன்? தாம் மறைந்த பதினைந்தாவது மாதத்தில் இப் பூவுலகிலே இதுவரை நிகழாததோர் உத்பாதம் நிகழும். அப்போது இந்த மெய்வழிச்சாலையைத் தவிர மற்ற சுற்றுச் சூழலெல்லாம் அழியும். இத் தவ நெறித்தலம் மட்டுமே தக்கும். அப்போது இங்கு வாழும் அனந்தர்கள் புதுவாழ்வு தொடங்கப் பொருள் வேண்டுமல்லவா? அதற்காகவே இப்படிப் புதைத்து வைத்துள்ளார்."

ஆண்டவரைப் பற்றி மேலும் சொல்லுகிறார்கள்:

"எங்கள் ஆண்டவர் குளிப்பதே இல்லை. ஆனால் அவர் உடலில் இருந்து நறுமணம் வீசும். அதுமட்டுமல்ல. எங்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருப்பார். நாங்கள் அவரைச் சுற்றி உட்கார்ந்திருப்போம். ஆண்டவரின் வாயிலே அமுதம் சுரக்கும். அதை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது. திரும்பித் தம் பக்கத்திலே உள்ள மணலில் அதை உமிழ்வார். அப்போது நாங்கள் நாய்களைப் போல் பாய்ந்து அந்த உச்சிஷ்டத்துக்காகப் போராடி அப்படியே வாரி வாரி எங்கள் உடலிலே, முகத்திலே பூசிக் கொள்ளுவோம். ஆகா அந்த மணம்? அதை வருணிக்க வார்த்தைகளே கிடையாது!

"ஆண்டவரின் பூர்வாசிரமப் பெயர் காதர் பாட்சா. படிப்பு வாசனை யில்லாதவர். மாடு மேய்த்துக் கொண்டிருந்தவரை மகானாக்கினார் அவரது குரு. ஆனால் தேவாரம், திருவாசகம் முதலிய மறைகளை யாராவது தவறாக ஓதும்போது சட்டென்று 'அது அப்படி யல்ல, இப்படி' என்று தவற்றைச் சுட்டிக் காட்டும் வல்லமை பெற்றிருந்தார். பல மொழிகளைத் தெரிந்தவர். பல மதங்களின் உண்மைகளை அறிந்தவர் எங்கள் ஆண்டவர்."

ஒன்றே கடவுள் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடையவர்கள் அனந்தர்கள். பதினாறு வயதுக்கு மேலுள்ளவர்களும் திருமண

டாக்டர்கள் கூறுகிறார்கள், 3 மாதங்கள் ஆனவுடன் உங்கள் குழந்தைக்குப் பால் மட்டும் போதாது. சீரான வளர்ச்சி பெற உங்கள் குழந்தைக்குத் தேவை ஒரு திட உணவு– பாரெக்ஸ்.



இதோ, வளரும் உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் வழங்கும் நன்மைகள் :

- ஆரோக்கியமான இரத்தத்திற்கும் வளர்ச்சிக்கும் போதுமான இரும்புச் சத்து.
- உறுதியான பற்களுக்கும் எலும்புகளுக்கும் தேவையான கால்ஷியம் மற்றும் வைட்டமின் டி2.
- விரைவான வளர்ச்சிக்குதவக் கூடிய எளிதில் சீரணமாகும் புரதம்.
- அவரது வயதுக்கும் மாறிவரும் தேவைகளுக்கும் ஏற்ற போதுமான சக்தி.

வளர்ந்துவரும் உங்கள் குழந்தைக்குத் தேவையான பாரெக்ஸ் அளவு

உங்கள் குழந்தையின் வயது	பாரெக்ஸ் அளவு
3–6 மாதங்கள்	1–2 தேக்கரண்டி–தினசரி இருமுறை
6–9 மாதங்கள்	3–4 தேக்கரண்டி–தினசரி மும்முறை
9 மாதங்கள்–1 வயது	4–6 தேக்கரண்டி–தினசரி நான்கு முறை

பாரெக்ஸ்

சீரான உடல் வளர்ச்சிக்கு உங்கள் குழந்தையின் முதலாவது திட உணவு—3 மாதங்கள் ஆனபின்




இலவசம்! பாரெக்ஸ் புத்தகம். உங்கள் பெயர், முகவரியுடன் (எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவித்து) 25 பைசா தபால் தலையுடன், டிபார்ட்மெண்ட் 61, த.பெ. எண் 16558, பம்பாய் 400 025 என்ற முகவரிக்கு எழுதுக.

க்ளாக்ஸோ

CMGF-47 203. TM

டினோபால்* பெறும் புதிய பெயர்

ரானிபால்+



ரானிபால்+
(பருத்தித் துணிகளுக்கு)



ரானிபால்+-எஸ்
(செயற்கை இழை மற்றும் கலப்பு இழைத் துணிகளுக்கு)



அதே பொருள், அதே திறன், ஆனால் பெயர் மட்டும் புதிது!

சிறந்த வெண்மைச் சலவைக்கே ரானிபால்+

Suhrid Geigy
LIMITED

+ ஸுஹ்ரித் கெய்கீ லிமிடெட்டின் ட்ரேட் மார்க் ஆகும்
• ஸிபா கெய்கீ லிமிடெட்டின் லைசென்ஸ்படி முன்னாளில் விற்பனை செய்யப்பட்டது.

Shilpi SGT 6A/76 tam

மாணவர்களுமே மெய்வழிச்சாலையில் உறுப்பினராகலாம். புகைப்பிடித்தல், போதைப் பொருட்களை உபயோகித்தல், புலால் உண்ணுதல், சினிமாப் பார்த்தல் இவைகளைக் கைவிட வேண்டும். பல மதத்தினரும் அங்கத்தினராக இருக்கிறார்கள். நாடெங்கும் பரவிக் கிடக்கும் இவர்கள், மெய்வழிச்சாலையில் நிகழும் பல்வேறு விழாக்களின் போது வந்து கூடுகிறார்கள். பூணூல் அணிந்து கொள்ள வேண்டும். சுக்கலாம் பரதரம் சொல்லியே வழிபடத் தொடங்குவார்கள். ஒரு நாளைக்கு ஏழு வேளை (வணக்கம்) பிரார்த்தனை நடத்துகிறார்கள். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது தரையில் கைகளைத்தொட்டுப் பிறகு இரு கைகளையும் காதருகில் வைத்து வணக்கம் கூறிக் கொள்கிறார்கள்.

''இறந்த பிறகு இந்த உடல் நாற்ற மெடுக்குமே. ஆனால் ஆண்டவர் தரும் காஷாயத் தீர்த்தத்தை மாண்டவரின் வாயிலே ஊட்டினால் எவ்வளவோ அற்புதங்கள்நிகழும். பல்கிட்டிய நிலையிலும் பிணம் அதை வாய் திறந்து உட்கொள்ளும். உடல் ஜில்லிட்டுப் போகாது. விறைத்தும் போகாது. மண்ணில் புதைத்தாலும் மண் உடலைத் தீண்டாது! உடல் பூப்போல லேசாகிவிடும். நோயுற்றவர்களின் உடல் நோய் மறைந்து இளமையும் அழகும் தோன்றும்'' என்று ஆண்டவரின் சாகலைக்களைக் கூறுகிறார்கள் அனந்தர்கள்.

சொந்த அச்சுக்கூடத்திலே தங்களுக்கென்று வகுத்துக் கொண்ட ஒருவகையான அமைப்பிலே உபதேசங்களையும் தத்துவங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். ஞ, ங ஆகிய எழுத்துக்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலில் படிக்கச் சிரமமாக இருந்தாலும் இரண்டு மூன்று பக்கம் படித்த பிறகு இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

''ஆண்டவரைக் காண வேண்டுமானால் காணிக்கை செலுத்தாமல் காண முடியாது. தங்கள் செல்வத்தை யெல்லாம் அவர் காலடியில் கொட்டி ஆண்டியானவர்களும் உண்டு'' என்கிறார்கள். மெஸ்மரிசம் — என்ற பார்த்தவர்களை ஆகர்ஷிக்கும் சக்தி அவரிடம் இருந்திருக்கலாம்.

மெய்வழிச்சாலைப் புதையலுக்கு இன்னும் ஒரு முடிவு ஏற்படவில்லை. சக்திவாய்ந்த 'மெட்டல் டிடக்டர்' என்ற கருவியின் உதவியோடு பொன் புதைக்கப்பட்டிருக்கும் இடங்களைக் கண்டு பிடித்துத் தோண்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆண்டவர், அனந்தர்கள் சம்பந்தப்பட்ட வெளியிடங்களிலும் வேட்டை தொடருகிறது.

ஆண்டவரின் மெய்யடியார்கள் கூறுவது போல்: ''ஆண்டவர் மண்ணுக்குள் போனார். மண்ணில் புதையுண்ட தங்கமெல்லாம் வெளி வருகிறது.'' □

சுக்ராச்சாரியார் (இரண்டாம் பாகம்)

பகவான் எடுத்தவை தசாவதாரங்கள் மட்டும் அல்ல. இன்னும் பல்வேறு அவதாரங்கள். அவற்றுள் ஒன்று சுக்ரோச்சாரியார் - இது மனோகரின் கருத்து. காரணம், அவர் அசுரர்களை யெல்லாம் நல்லவர்களாகப் பார்ப்பதேயாகும்.



மனோகர் சுக்கிராச்சாரியாராக வந்து தமக்குக் கைவந்த பாணியில் சக்கைப் போடு போடுகிறார், இந்த இரண்டாம் பாக நாடகத்தில். சுக்கிராச்சாரியார் அசுர குருவானது, அவரது வளர்ப்பு மகள் தேவயானி தேவ குருவின் மகன் கச்சனிடம் மையல் கொண்டது ஆகியவற்றை இப்பாகத்தில் பார்க்கிறோம்.

கஜமுகாசுரனை விநாயகப் பெருமான் வதம் செய்தது, சூர சம்ஹாரம், இன்னும் பல அசுரர்கள் வரலாறுகள் எல்லாம் வருகின்றன. திடுக்கிட வைக்கும் துரிதமான காட்சி மாற்றங்கள். அந்த வேகத்தில் மெய்மறந்து போகிறோம்.

சுக்கிராச்சாரியாரை உயர்த்திக் காட்டுவதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் அதற்காக, வியாழ பகவான் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் தேவ குருவான பிருகஸ்பதியை இழிவுபடுத்திக் காட்டுவது சரியாகப் படவில்லை. கிரகங்களில் சிறப்பித்துச் சொல்லப்படும் சுக்கிரனைப் போலவே, குருவும் மேலான கிரகம்தான். நாடகத்தில் தேவ குருவை ஓர் உதவாக்கரையாக, சுக்கிராச்சாரியாருக்கு எதிராகச் சதி செய்வதாகக் காட்டுவது வேதனை தருகிறது.

வாமனர் திரிவிக்கிரமனாக வளர்ந்த காட்சி மேடையில் பிரமிப்பை ஊட்டியது. சுக்கிராச்சாரியார் வண்டு ரூபமாகக் கெண்டியை அடைத்துக் கொண்டது, வாமனன் தர்ப்பையால் குத்த, சுக்கிராச்சாரியார் ஒரு கண்ணை இழந்தது - ஆகிய காட்சிகள் அதியற்புத சாதனைகள்.

இருபத்தொரு நடிக, நடிகைகளை மேடையில் ஏற்றி, விறுவிறுப்பாக இயக்கி, மகத்தான நாடகத்தை நடத்தி வரும் மனோகர் இத்துறையில் வரலாறு படைப்பவர். நாடகத்தின் கதை, வசனம் எழுதியிருப்பவர் கவிஞர் பழனிசாமி.

நாடகத்தைப் பார்ப்பது ஒரு வர்ண திரைப் படத்தைப் பார்ப்பது போல் இருக்கிறது. -காந்தன்


இந்தாங்க 101 வது ரோஜா!
கலவரம்
அவங்க மாதிரி நமக்கு ஏன் நீளத் துண்டு?
தமிழக புது காங்கிரஸ்
பண்டங்களின் விலை குறைப்பு (போண்டா)
ஹோட்டல் முதலாளி
ஹோட்டல் முதலாளி கற்பனை
பண்டங்களின் தரம் அளவு
போண்டா
வாடிக்கையாளர் கற்பனை

புத்தாண்டு பரிசுகள்

மோஹிந்தர் அமர்நாத்தின் கரம் பற்றப்போகும் தீப்தி அடையும் மகிழ்ச்சி அபரிமிதமான ஒன்றாகத்தான் இருக்கும். பாரதம் வெற்றி பெற்றதற்காக இந்நாட்டின் கிரிக்கெட் ரசிகர் ஒவ்வொருவரும் ஆனந்தமடைகிறார் என்றால் தீப்தியோ கணவனாக வரப்போகிறவர் சக்கைப்போடு போட்டதற்காகக் கூடுதலான உவகை அடைகிறார்.

'எங்கள் பௌலர்களின் திறமையை அளவுக்கு அதிகமாக மதிப்பிட்டு விட்டேன்' என்கிறார் லாயிட். 'நமது பாட்ஸ்மன்களின் திறமையை லாயிட் குறைத்து மதிப்பிட்டு விட்டார்' என்கிறார் லாலா அமர்நாத்.

நமக்குத் தோன்றுவது என்னவென்றால் இரு தரப்பினருமே உண்மையான கிரிக்கெட் மனப்பான்மையுடன் ஆடியிருக்கிறார்கள் என்பதுதான்.

லாயிட் டிக்ளேர் செய்யாமல் காலம் கடத்தியிருக்கலாம். 'ரிஸ்க்' எடுத்துக் கொண்டார். நமது பாட்ஸ்மென்கள் விக்கெட் விழாமல் காத்தால் போதும் என்று டொக்கு தட்டியிருக்கலாம். 'ரிஸ்க்' எடுத்துக் கொண்டார்கள்.

எனவே இன்று நண்டு சுண்டு முதல் தொண்டு கிழம் வரை குதூகலத்தில் கூத்தாடுகிறார்கள் என்றால் அது இந்தியாவின் வெற்றி மட்டும் அல்ல. மெய்யான கிரிக்கெட் மனப்பான்மையின் வெற்றி!

பரிசு 2

நடப்பது ராஷ்டிரபதி ஆட்சி என்பதை மறந்து இந்திரா காங்கிரஸ் ஆட்சியே நடப்பதாகப் பாவித்துப் பல இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள் தமிழகத்தில் அதற்குள் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள். அரசாங்க அதிகாரிகள் சார்பிலும் கண்டிராக்டர்கள் சார்பிலும் சிபாரிசுகள் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். மெய்யாலும் இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடந்தாலே இவர்கள் செய்வது தவறு; ராஷ்டிரபதி ஆட்சியிலோ அதைவிடப் பெரிய தவறு!

இந்தத் தகவலைத் திரு பக்தவத்சலம் அவர்களே வெளியிட்டு எச்சரித்தும் இருக்கிறார். கடமை உணர்ந்து விருப்பு வெறுப்பின்றிப் பேசிய முதியவர் மீது தாபப்படுவதை விட நல்லாட்சிக்கு அவர் அளித்த பரிசாக இதனைக் கருதி இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஏற்பதே விவேகம்.

பரிசு 3

சென்னை நகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கொடுப்பதாக உடன்பாடு கையெழுத்தாகி விட்டது. கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு

விசுவநாத்



மோஹிந்தர்



கவாஸ்கர்



கல்கி
மலர் 35
இதழ் 39

ராஜாஜி சிந்தனை

அதைவிட விநோதம்!

நீங்கள் இந்தப் பூமியில் பத்திரமாக உட்கார்ந்திருப்பதாக எண்ணுகிறீர்கள். ஆனால் நாம் கற்பனைக்கு எட்டாததும் தலை சுற்றும்படியானதுமான அதிக வேகத்தோடு சென்று கொண்டிருக்கிறோம். காலால் நடப்பவரை விட எத்தனை மடங்கு அதிக வேகமாக ரயில் வண்டி ஓடுமோ அத்தனை மடங்கு வேகமாக ரயில் வண்டியைவிட பூமி சுழல்கிறது. அது நம் எல்லோரையும் தூக்கிக் கொண்டு அத்தகைய வேகத்தில் பம்பரம் போல் சுழல்வது மட்டுமின்றி சூரியனைச் சுற்றியும் ஓடிக் கொண்டிருக்கிறது. சூரியனைச் சுற்றும்போது அதன் வேகம், வேகமான ரயில் வண்டியை விட அறுநூறு மடங்கு அதிகமாகும். இவ்வாறு பூமியானது இரண்டு விதமாகத் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கும் சமயத்தில் நாம் பேசவும் விளையாடவும் போரிடவும் கனவு காணவும் செய்கிறோம். இதைவிட விநோதமான விஷயம் வேறு ஏதேனும் உண்டா? உண்டு! அது என்னவெனில், இப்படி அபாயகரமான வேகத்தோடு நாமே ஓடிக் கொண்டிருக்கும்போது பிறருக்குத் துன்பம் விளைவித்தால் நமக்கு இன்பம் விளையும் என்று எண்ணுகிறோமே, அதுதான்!

—நட்சத்திரமும் அணுவும் என்ற கட்டுரையில்

வருமுன்னர் வீராணம் விவகாரத்தில் நேர்ந்தது போன்ற பொறியியல் ரீதியான தவறுகள் மறுபடியும் தோன்றாமல் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டும். அத்துடன் வீராணம் திட்டத்தில் முடக்கப்பட்டுள்ள கோடிக்கணக்கான ரூபாய் அடியோடு பாழாகி விடாமல் வீராணம் நீரையும் சென்னை நகர மக்களுக்கு விரைவில் பயன்படும்படி செய்ய வேண்டும். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் நீரையும் சென்னை நகருக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இவையெல்லாம் உடனடியாகச் சொற்ப காலத்தில் கிடைக்கக்கூடிய பயன்களாகும். கிருஷ்ணா நதி நீர் சென்னைக்குத் தரச் சம்பந்தப்பட்ட அரசுகள் இணங்கிக் கையெழுத்திட்டாலும் அமல்படுத்தப் பத்தாண்டுகளுக்கு மேலாகும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். எனினும் ஆந்திர அரசு சென்னை வாழ் மக்களின் தாகத்தைத் தணிக்கத் தயார் என்று சொல்ல முன் வந்ததே ஒரு சிறிய பரிசு.

பரிசு 4

பிரதமர் பாத யாத்திரை செய்தார். ஆயிரக்கணக்கான மக்கள் மெய்சிலிர்த்தனர். ஏழைகளின் துயரை நேரடியாக அறியவோ உழைப்பின் அவசியத்தையும் குடும்பக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு உணர்த்தவோ இதைக் காட்டிலும் சிறந்த மார்க்கம் இருக்க முடியாது. ஒரு கிராமத்துக்குப் பிரதமர் சென்றால் நூறு கிராமங்கள் புத்துணர்வு பெறுகின்றன.

ஆனால் பிரதமருக்கோ, ராஷ்டிரபதிக்கோ அடிக்கடி பாத யாத்திரை புறப்பட மனமிருந்தாலும் நேரமிராது. இந்திரா காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்கள் பிரதமரை முன்மாதிரியாகக் கொண்டு செயல்படட்டும். சஞ்சய் கூறுவது போல் இன்று தேசத்தின் தேவை இடதுசாரி, வலதுசாரி விவாதங்கள் அல்ல; கடின உழைப்புத்தான்.

பரிசு 5

நெருக்கடி நிலைப் பிரகடனம், தேசத்தின் பொருளாதார நிலையில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்திக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஆட்சிக்கு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிர்ப்பந்தம் கொள்கைப் பிடிப்புக்களைத் தளர்த்தி யதார்த்த நோக்கில் செயல்படச் செய்கிறது. யதார்த்தப் பார்வை ராஜாஜியின் கொள்கைகளை முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்கேனும் அமல்படுத்தச் சொல்கிறது. விளைவுகள்: பட்ஜெட்டில் வரிச் சுமைகள் குறைந்தன; ஏற்றுமதிக்கு உதவும் துறைகளில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளன; தொழில் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்த பல லைசென்சு முறைகள் ஒழிக்கப்பட்டன; கைத்தறியாளருக்குச் சில ரகத் துணிகள் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளன.


இவையெல்லாவற்றையும் தூக்கியடிப்பதாக இருக்கிறது அண்மையில் பிரதமர் பேசியிருப்பது. 'அரசாங்கச் செலவினங்களைக் கணிசமாகக் குறைத்தேயாக வேண்டும்; இல்லாத போனால் மீண்டும் பண வீக்கம் விசுவரூபமெடுக்கும்' என்று அவர் எச்சரித்துள்ளார்.

இந்த யதார்த்தப் போக்கு நீடித்தால் ராஜாஜி பாதையில் நாட்டின் பொருளாதாரம் மேலும் முன்னேறுவதைக் காண்போம்.

பரிசு 6

'பகைவனுக்கருள்வாய்' என்றான் பாரதி. ஒரு கால கட்டத்தில் பகைமை பாராட்ட நேர்ந்தால் தொடர்ந்து வன்மத்தை வளர்ப்பது தனி மனிதனுக்கோ நாட்டுக்கோ நல்லதல்ல. விட்டுக் கொடுக்கவும் நட்புக் கரம் நீட்டவும் தெரிய வேண்டும். விழிப்புடனிருந்தால் பழிப்புக்கு உள்ளாக மாட்டோம்.

இந்த நோக்கில் சீனாவுக்குத் திரு கே. ஆர். நாராயணன் அவர்களைத் தூதராக அனுப்பத் தில்லி தீர்மானித்தது இந்திரா அவர்களுக்கு மற்றொரு வெற்றி. சீனம் இந்த நல்லெண்ணத்தைத் தானும் பிரதிபலித்தேயாக வேண்டும். அத்துடன் இது வேறு பல எல்லைப்புற நாடுகளுடன் நமக்குள்ள உறவை மேலும் செம்மைப்படுத்த உதவும் காரியம்.



மூஷிகர் பதில்கள்!



"எல்லாப் பத்திரிகைகளிலும் கேள்வி — பதில் வருகிறதே, கல்கியில் வேண்டாமா?" என்றார் வினாயகர்.

"நான் கேள்வி கேட்கிறேன். நீங்கள் பதில் சொல்லுங்கள்" என்றார் மூஷிகர்.

"வேண்டாமப்பா, என்னை வம்பில் மாட்டி விடாதே. கேள்விகள் என்னுடையவை. பதில்கள் உன்னுடையவை" என்றார் தும்பிக்கையார். கூறிவிட்டு முதல் கேள்வியைத் தொடுத்தார்.

● வினாயகர்: பெயர் மாற்றங்களுக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை. ஜார்ஜ் டவுன் என்பதை வ. உ. சி. நகர் என மாற்றப் போகிறார்களாமே! இப்படியே போய்க் கொண்டிருந்தால்....?

மூஷிகர்: அடுத்த கட்டத்தில் வ. உ. சி. போன்ற பெருந்தலைவர்களின் பெயர்களையே மாற்றுவார்கள்!

● வினாயகர்: திரு தேவராஜ் அர்ஸ் மூன்று ஆண்டுகளில் தம் வீட்டுக்கு அரசுச் செலவில் லட்ச ரூபாய் பெறுமானமுள்ள மேஜை நாற்காலி முதலானவற்றை வாங்கிப் போட்டிருக்கிறாராமே?

மூஷிகர்: அதற்குப் பெயர்தான் சோபா செட் சோஷலிஸம்.

● வினாயகர்: நீதித்துறை உயர்ந்ததா, நாடாளுமன்றம் உயர்ந்ததா என்று விவாதம் நடக்கிறதே?

மூஷிகர்: இது என்ன பிரமாதம்! நெய்க்குத் தொன்னை ஆதாரமா தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று விவாதம் நிகழ்த்தியவர்களாயிற்றே நாம்! நீதித்துறை, நாடாளுமன்றம், நிர்வாகம் மூன்றும் சம அந்தஸ்து உடையன. மூன்றுக்கும் தாய் அரசியல் சாசனம். தாயின் ஆரோக்கியம் காப்பது கடமை.

● வினாயகர்: இருபது அம்சத் திட்டத்தில் மக்கள் ஈடுபாடு கொள்ள வழி?

மூஷிகர்: அகில இந்திய ரேடியோவைக் கேளாமல் இருப்பது.

● வினாயகர்: வள்ளுவர் கோட்டம்....?

மூஷிகர்: விட்டுத் தள்ளுங்கள். 'காத்திருந்தவன் பெண்ணை...' என்கிற கதையாகி விட்டது!

● வினாயகர்: நீதிமன்றத் தீர்ப்புக்கள் தமிழிலே அமைவதை ஒத்திப் போடக்கூடாது என்று ம. பொ. சி. ஆளுநரிடம் முறையிடுகிறாரே?



மூஷிகர்: அவர் தமிழுக்காக மீசையைக் கூட எடுத்து விடுவார். ஆனால் நீதிபதிகள் முகங்களில் தமிழ் மீசையை ஒட்ட வைக்க முடியாது. அது தானாக வளர வேண்டும். ஆளுநர் அதற்காகக் காத்திருக்கிறார், அவ்வளவுதான்!

● வினாயகர்: வாஷிங்டனில் இரானிய தூதர் ஒரு விருந்துபசாரத்தின் போது எலிஸபெத் டெய்லர் மீது மோதிக் கொண்டாராம். அவள் காதணி கீழே விழுந்ததாம். இவர் அதை எடுத்து அணிவித்தாராம்.... 'ஜெண்டில்மே'னாக நடந்து கொண்டிருக்கிறார் இல்லையா?



மூஷிகர்: காதணியைப் பொறுக்கி எடுத்து அணிவித்த வரை கனவான்தான். ஆனால் மோதிக் கொண்டது யதேச்சையாகத்தானா என்பது தெரியவில்லையே?

● வினாயகர்: கருணாநிதி கார்ட்டூன் போடுகிறாரே?

மூஷிகர்: என்ன வேணுமானாலும் செய்யட்டும். மறுபடியும் மாண்புமிகு ஆகாதிருந்தால் சரி.

கர்நாடக மாநிலம், டாண்டேலியின் அருகிலுள்ள
காவ்லா குகைகள் சீரமைப்புப் பணி உதவி நிதிக்காக
டாண்டேலி இளைஞர் சங்க ஆதரவில்



சங்கீத கலாநிதி
எம். எஸ். சுப்புலக்ஷ்மி — பாட்டு
திரு கே. எஸ். அழகிரிசாமி — வயலின்
திரு காரைக்குடி மணி — மிருதங்கம்
திரு கே. எஸ். மஞ்சுநாத் — கடம்

○○○

25-4-76 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு
டாண்டேலி, பங்கூர் நகரில்

திருமலை செல்லும் யாத்திரிகர் கவனத்துக்கு:

வேங்கடேசப் பெருமாள் தரிசனம்

ஏழுமலையானை எளிதாகத் தரிசனம் செய்துவைப்பதாகச் சில வஞ்சகர்கள் கூறி, யாத்திரிகரை ஏமாற்றிப் பணம் பெறுவதாகத் திருமலை-திருப்பதி தேவஸ்தானத்துக்குத் தெரியவந்திருக்கிறது.

யாத்திரிகர் ஒழுங்காகவும் வரிசையிலும் சென்று பெருமாளைத் தரிசிக்க இயன்றளவு வழிசெய்திருக்கிறது தேவஸ்தானம். தினந்தோறும் சுமார் 10,000 பக்தர்கள் திருமலைக்கு வருகிறார்கள். இத்தனை மக்களும் தரிசிப்பதற்கு ஏற்ப, பெரும்பாலான நாட்களில் 14 மணி நேரம் கோவிலைத் திறந்துவைத்திருக்கிறார்கள். இதில் 11 மணி நேரம் தர்மதரிசனம். அதிகக் கூட்டம் உள்ள நாட்களில், தடுப்புகள் செய்த தனித் தனி அறைகளிலிருந்து பக்தர்கள் "கியூ"வில் வருகிறார்கள்; கூட்டம் குறைவான நாட்களில் மஹாத்வாரம் என்ற வெளிக் கோபுர வாசலிலிருந்து தகுந்த பாதுகாப்புடன் 'கியூ' தொடங்கி உள்ளே செல்கிறது.

'கியூ'வில் காத்திருக்க நேரம் இல்லாதவர்களும் உடல்நலமற்றவர்களும் தலைக்கு ரூ. 25/- கொடுத்துச் சிறப்புத் தரிசன டிக்கெட் வாங்கிக்கொண்டு கோயில் துவஜஸ்தம்பத்தின் அருகில் போய் 'கியூ'வில் சேர்ந்துகொள்ளலாம். இப்படி டிக்கெட் வாங்கியவர்கள் ஐந்தே நிமிஷத்தில் பெருமாளைத் தரிசித்துவிடலாம்.

வெளியார்மூலம் பெருமாளைத் தரிசிக்க முயற்சி செய்யாமல் இருக்குமாறு தேவஸ்தானம் யாத்திரிகரைக் கேட்டுக்கொள்கிறது. தேவஸ்தானம் ஏற்பாடு செய்துள்ள உன்னத முறைகளைவிட மிகச் சீக்கிரத்தில் யாராலும் தரிசனம் செய்துவைக்க முடியாது. எத்தர்களின் ஏமாற்று வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள்.

கலியுக வரதனான வேங்கடேசப்பெருமாளைத் தரிசிக்க நேரமாவதால் கொஞ்சம் பொறுமை தேவை. அதுவே ஒரு தபஸ் போன்றது; நம் பக்திக்கு அது ஒரு சோதனை. இவை பெருமாளின் அருளைப்பெற வழி காட்டும்.

நிர்வாக அதிகாரி,
திருமலை-திருப்பதி தேவஸ்தானம்
திருப்பதி

வைதிக மதத்தின் விசேஷ அம்சங்கள் (11)

வெளியில் ஒரே அமைப்பு மாதிரி சமூகத்தை மெழுகி வைத்திருந்தாலும், உள்ளுக்குள்ளே அன்பினால் ஏற்படுகிற கட்டுக்கோப்பு இல்லாமல் துவேஷத்தினால், பெரிய பெரிய சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகரிகங்களும் உளுத்துப் போய்விட்டன. வேற்று நாகரிகம் படையெடுத்தபோது அதற்கு எதிர் வீச்சுப் போடத் திராணி இல்லாமல் சிதைந்து விழுந்து அழிந்து விட்டன. இப்போதோ வெளி எதிரியே வேண்டாம் என்கிற மாதிரி எல்லாத் தேச சமுதாயங்களும் ஒவ்வொரு தனி மநுஷ்யனுமே உள்ளுக்குள்ளே நிம்மதி இல்லாமல் மட்கி மட்கி அழிந்து போகிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

நம் மதத்திலோ பாரம்பரியமாகத் தொழிலை வைத்த போது, அதை ஓர் இயற்கை விதி மாதிரி – காந்தி கூட rational scientific fact என்று வர்ண தர்மத்தைச் சொல்கிறார் – ஜனங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். எந்தத் தொழிலானாலும் உசத்தி தாழ்த்தி என்றில்லாமல் பரமேச்வராக்ஞையாக நமக்கு லபித்தது என்கிற திருப்தியோடு செய்தார்கள். ஒரு போட்டியில்லை; வயிற்றெரிச்சல் இல்லை. மற்ற தேசங்களிலோ இதற்கு நேர்மாறு. வெளியில் ஒன்று; உள்ளே பேதம்; இதனாலேயே வேறு கலாச்சாரத்தோடு ஓர் எதிரி வந்தால் அவர்களுடைய நாகரிகமே விழுந்துவிட்டது. நம் தேசத்திலோ அந்நிய ஆக்கிரமிப்புகள் ஓயாமல் இருந்தாலும், ஜாதி வித்தியாசத்தால் ஜனங்களுக்குள் மனோ வித்தியாசம் இருந்து ஒருத்தனை இன்னொருத்தன் காட்டிக் கொடுத்தான் என்பதே அடியோடு கிடையாது. ஒரே சமூகமாகத்தான் எதிர்த்தார்கள். அப்படி எதிர்த்தும் தோற்றுப்போன சமயங்களில்கூட அது ராஜாங்கத் தோல்வி (political defeat) யாகத்தான் இருந்ததே தவிர நமது சமுதாய அடிப்படைக்குத் தோல்வி ஏற்படவேயில்லை. நமக்குப் பண்பாட்டுத் தோல்வி (Cultural defeat) ஏற்படவேயில்லை. ''ஸோஷல் ஃபௌண்டேஷன்'' (சமூக ரீதியான அஸ்திவாரம்) ஒருபோதும் ஆடவேயில்லை. அதிலிருந்த ஸ்திரத்தன்மையால் நம் நாகரிகமும் ஆட்டம் கொடுக்காமல் இன்று வரை ''இண்டியன் கல்சரா? அது ஏதோ ஓர் அதிசயமான ஸஞ்ஜீவித்வச் சக்தி வாய்ந்தது'' என்று பிறதேச அறிவாளிகள் யாவரும் கொண்டாடும் விதத்தில் வளர்ந்து வந்திருக்கிறது. அந்தப் பிற தேசங்களுக்கும் சாசுவத சௌக்கியத்தைத் தருகிற ஆத்மிகப் பண்பாட்டைக் கொடுத்து வந்திருக்கிறது.

யார் எந்தத் தொழில் செய்தாலும் எல்லாருக்கும் சாப்பாடு, துணி, வீடு ஆகிய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து தர ராஜாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு போனால்தான் போட்டி பொறாமை எல்லாம் உண்டாகிறது. ஆனபடியால் எளிய வாழ்க்கை என்ற லட்சியமும் தொழில்களுக்குள் உயர்வு–தாழ்வு என்பது இல்லவே இல்லை என்ற எண்ணமும் வந்து விட்டால் வர்ண தர்மத்தைப் போல் உத்தமமான எந்த ஏற்பாடும் இல்லை என்று தெரியும். திருப்தியும், சௌஜன்யமும் சமூகத்தில் நிலவி, இது காரணமாக நம் நாகரிகம் மட்டும் மாளாமல் மகோன்னதமாக வளர்வதற்கு இந்த ஏற்பாடுதான் காரணம் என்பது என் தீர்மானமான அபிப்பிராயம். நிறைந்த மனசோடு அவனவனும் தன் தொழிலை ஒரு குலதனம் என்கிற பெருமிதத்தோடு (pride) ஒழுங்காகச் செய்தபோது அது ஒரே சமயத்தில் அவனுடைய சித்த சக்திக்கு உதவி ஆத்ம க்ஷேமத்தையும் லோக க்ஷேமத்தையும் உண்டாக்கிற்று.

வைதிக மதத்தின் அநேக விசேஷ அம்சங்களுக்குள், இந்த வர்ண தர்மம்தான் நம் தேசத்தை சர்வ லோகத்துக்கும் உபகாரமான ஆத்ம சம்பத்தையும், கலாசாரத்தையும் கொடுக்குமாறு உதவி செய்திருக்கிறது என்பது என் அபிப்பிராயம். என் அபிப்பிராயம் என்றால் சீர்திருத்தக்காரர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்களாதலால் முடிவாக காந்தி சொன்னதையே மேற்கோள் (quote) காட்டுகிறேன். ''நான் ஏன் ஹிந்துவாக இருக்கிறேன்?'' ("Why I am a Hindu?") என்று அவர் ஒரு கட்டுரை எழுதி, இதற்குப் பல காரணங்களைச் சொல்லிவிட்டு, முடிவில், "Finally, the discovery of the law of Varnashrama is a magnificent result of the ceaseless search for Truth." (சத்தியத்தை விடாமல் தேடித் தேடிப் போனதன் மகோன்னதமான பலனாகத்தான் வர்ணாச்ரம தர்மம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது) என்கிறார். **(முற்றும்)**



ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர என்ற வார்த்தைகளை எழுதியே வரையப்பட்ட படம். உருவாக்கியவர் : ஸ்ரீமதி சரோஜா நாகரத்னம்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ஸாண்டல்வுட் நைஸில்*

உங்கள் மேனியைப் பாதுகாக்க இதனினும் சிறந்த டால்க் இல்லை—அதுவும் இத்தனை சிறந்த நறுமணத்துடன்.

ஸாண்டல்வுட் நைஸில்—இதிலிருந்து நீங்கள் பெறும் நன்மைகளை வேறு எந்த சாதாரண டால்கம் பவுடரும் தருவதில்லை. உங்கள் மேனிக்கு ஆண்டு முழுவதும் அருமையான பாதுகாப்புத் தரவல்ல விசேஷப் பொருட்கள் அடங்கியது நைஸில் ஒன்றுதான். துர்நாற்றம் வீசச்செய்யும் கிருமிகளைக் கொல்ல வல்ல குளோர் பென்ஸீன். வியர்வையை முற்றிலும் உறிஞ்ச வென்றே விசேஷ முறையில் உருவாக்கப் பட்ட இந்த பவுடர்—உங்கள் மேனி மீது அதிக நேரம் நீடித்து நிற்கிறது. சிந்தை குளிர்விக்கும் சந்தன மணம்...புத்துணர்வை உங்கள் மீது வாரியிறைக்கிறது.

மயக்கும் சந்தன மணம். நாளெல்லாம் நீடித்த புத்துணர்வு. ஆண்டில் 365 நாட்களும் புதுமை உணர்வு.




Sista's-GN-109-876 Tam.



ஸாண்டல்வுட் நைஸில்*—உங்கள் மேனிக்கு உகந்தது

ஸாண்டல்வுட் **நைஸில்*** நன்மருந்து குணங்களடங்கிய பவுடர் **க்ளாக்ஸோ** தயாரிப்பு

*டிரேடு மார்க்



அரும்பு அம்புகள்

அமரர் கல்கி

சென்ற வாரம்.....

சென்னை நகரில் ஜப்பானியர் குண்டு போடுவார்கள் என்ற பீதி ஏற்பட்டதும் அவசரமாக நகரை விட்டு வெளியேறிய பல குடும்பங்களுள் மாசிலாமணி குடும்பமும் ஒன்று. மனைவி காமாட்சி, மகள் கமலா, குமாரன் விசுவம் ஆகியோருடன் கிராமத்துக்குப் போய்விடலாம் என்ற நோக்கில் அவர் கிளம்பினார். இவர்கள் பயணப்பட்ட பஸ் இடையில் பழுதாகி விடவே ஒரு கட்டை வண்டியில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந்தனர். கமலா உயர் கல்வி கற்கவும் சமூகத் தொண்டாற்றவும் ஆசைப்பட்டவள். ஆனால் அவளைக் குடும்பப் பாங்கான பெண்ணாகவே பெற்றோர் வளர்த்து விட்டனர். ராமப்பட்டணம் ஊர் எல்லையில் வண்டி மாடுகளில் ஒன்று படுத்து விட்டது. வண்டிக்காரன் அவர்களை இறங்கி நடக்கச் சொல்லிவிட்டான்.

சாமான்களையும் தூக்கிக் கொண்டு எப்படி, எவ்வளவு தூரம் நடப்பது? சத்திரம் ஹோட்டல் ஏதாவது இருக்கிறதா என்று யோசிக்கையில் அங்கே பவானி வந்து சேர்ந்தாள். அவள் அடக்க மாக அலங்கரித்துக் கொண்டிருந்த சிறந்த அழகி, அத்துடன் அறிவாளி, வக்கீல் தொழிலில் ஈடுபட்டிருப்பவள் என்பதெல்லாம் அவளைப் பார்த்ததுமே கமலாவுக்குப் புரிந்து போயிற்று. கமலாவின் பூர்த்தியாகாத அபிலாஷைகளை யெல்லாம் நிறைவேற்றிக் கொண்டவள் பவானி. எனவே கமலாவின் மனத்தில் மகிழ்ச்சியும் அதே சமயம் பொறாமையும் உருவாயின.

''எண்டியம்மா! இந்த ஊரில் இராத் தங்கச் சத்திரம் கிடைக்குமா?'' என்று காமாட்சி கேட்டாள்.

''ஜோமாருல் கோபாலகிருஷ்ணன் மகன் கல்யாணசுந்தரத்தைப் பாருங்கள். ரொம்பப் பரோபகாரி. நிச்சயம் உதவுவார்'' என்றாள் பவானி.

இனி மேலே.....

அத்தியாயம் 3

மர்ம மங்கை

ராமப்பட்டணம் அனுமார் வீதியில் ஒரு கட்டிடத்தின் வாசலில் 'சமூக சேவா சங்கம்' என்று தமிழிலும் அதற்கு மேலே *'Social Service Club'* என்று ஆங்கிலத்திலும் பெயர்ப் பலகை எழுதி மாட்டியிருந்தது.

பவானி இந்த இடத்துக்கு வந்ததும் சற்றுச் சுவர் கேட்டருகே தயங்கி நின்றாள். கட்டிடத்தின் முன்புறம் டென்னிஸ்கோர்ட்டில் ஆடி விட்டு வியர்வையை ஒரு டர்க்கி டவலால் துடைத்துக் கொண்டே அப்பால் புல்வெளியில் போட்டிருந்த சாய்வு நாற்காலிகளை நோக்கி நடந்தார் மாஜிஸ்திரேட் கோவர்த்தனன்.

அப்போது அவர் பார்வை வீதி ஓரமாய் நின்று பெயர்ப் பலகையை அண்ணாந்துநோக்கிக் கொண்டிருந்த பவானி பேரில் விழுந்தது. உடனே, ''உள்ளே வரலாமே?'' என்றார்.

''அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் அனுமதி 'உண்டோ' என்னவோ என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன்.'' பவானி பேசியபடியே முன்னேறி அவரை நோக்கி நடந்தாள்.

நாற்காலி ஒன்றை அவளுக்காக இழுத்துப் போட்டு விட்டு, ''அதற்கென்ன நீங்களும் அங்கத்தினராகி விட்டால் போகிறது'' என்றார் கோவர்த்தனன்.

பையனை ஜாடை காட்டி அழைத்து, இரண்டு ஸ்பென்ஸர் லெமனேட் கொண்டு வரச் சொன்னார். கூடவே, ''ஐஸ் போடலாமல்லவா?'' என்று பவானியைக் கேட்டார்.

''எனக்குப் போடலாம்; உங்களுக்கு வேண்டாம்'' என்றாள் பவானி. ''இன்னும் வியர்வை கூட அடங்கவில்லையே?''

அந்தக் கரிசனம் அவரை ஒரு விநாடி திகைக்க வைத்தது. ''தாங்க்ஸ்'' என்றார் புன்னகையுடன். அவர் அவளை அப்போது பார்த்த பார்வையில் நன்றி உணர்ச்சிக்கும் அதிகமாக ஏதோ ஒன்று இருந்தது. அவள் யோசனைப்படியே பையனுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

''பெண்களை இந்தக் கிளப்பில் சேர்த்துக் கொள்கிறீர்களா?'' என்று பவானி உரையாடலில் விட்டுப் போன இடத்துக்குத் திரும்ப வந்து சேர்ந்தாள்.


''இதுவரை சேர்த்துக் கொண்டதில்லை. ஏனெனில் எந்தப் பெண்ணும் சேர முன்வரவில்லை.''

''இத்தனை மதிப்பு என் மீது இந்த ஊர்க்காரர்கள் வைப்பதென்றால் அதற்குத் தகுதியுள்ளவளாக நான் விளங்க வேண்டுமே என்றுதான்.''

''உங்கள் தகுதிக்கு என்ன குறைச்சல்? பி.ஏ.பி.எல். படித்திருக்கிறீர்கள். கோர்ட்டில் எல்லாரும் பிரமிக்கும்படி வாதாடுகிறீர்கள். சகஜமாக எல்லாருடனும் பழகுகிறீர்கள். அதேசமயம் கண்ணியத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்கிறீர்கள். இவ்வளவும் போதாதென்று பார்ப்பதற்கும் அழகாயிருக்கிறீர்கள்!''

பவானி தன் முகம் சிவக்காமல் இருக்க ரொம்பவும் பிரயாசைப்பட்டுத் தோற்றுப் போனாள்: ''இப்படிப் புகழ ஆரம்பித்தால் சகஜமாகப் பழக வேண்டாம் என்றே தோன்றிவிடும். இந்தக் கிளப்பில் சேர்வது பற்றியும் புனராலோசனை செய்ய வேண்டியதுதான்.''

''புகழ்ச்சி பிடிக்காத ஒரு நபரை என் வாழ்க்கையில் இப்போதுதான் நான் முதல் தடவையாகப் பார்க்கிறேன். அது உங்கள் மதிப்பை மேலும் உயர்த்துகிறது'' என்று கூறிய மாஜிஸ்திரேட் கோவர்த்தனன் 'லெமனே'டைத் தட்டிலிருந்து எடுத்துப் பவானியின் கரத்தில் கொடுத்தார். பிறகு, ''நானும் இனி உங்களைப் புகழவில்லை; மற்ற அங்கத்தினர்களையும் எச்சரித்து வைக்கிறேன். கிளப்பில் சேராமல் இருந்து விடாதீர்கள். இந்தச் சூழ்நிலை கொஞ்சம் 'கலர்ஃபுல்' ஆக இருக்கட்டும்'' என்றார்.



''கிளப்பின் விதிமுறைகளில் அதற்கு இடையூறு ஏதுமில்லையே?''

''இடையூறாக' இருந்தால் விதிமுறைகளை மாற்றி விடுகிறோம்.''

''என்ன அவ்வளவு கலபமாகச் சொல்லி விட்டீர்கள்? மற்றவர்கள் சம்மதிக்க வேண்டாமா?''

''பவானிக்காக யாரும் எதையும் செய்வார்கள்!''

''இப்படிப் பேசினால் எனக்குக் கவலை அதிகரிக்கிறது.''

''என்ன கவலை?''

''இன்னும் ஒரு நிபந்தனை.''

''என்ன அது?''

''நீங்கள், போங்கள், வாருங்கள் என்று மற்றவர்கள் என்னிடம் பேசட்டும். ஆனால் உங்களைப் பொறுத்தவரை அந்த மரியாதையெல்லாம் என்னிடம் கூடாது.''

மாஜிஸ்திரேட் சிரித்தபடியே, ''இது என் வயதுக்கு நீங்கள் தரும் சலுகையா? அல்லது பதவிக்கா?'' என்று கேட்டார்.

''இரண்டுக்கும் மேலே நம் நட்புக்கு ஓர் அடையாளமாக!''

கோவர்த்தவன் தாம் உறிஞ்சிக் கொண்டிருந்த லெமனேடை மேஜையின்மேல் வைத்து விட்டு, அவளை நேருக்கு நேர் பார்த்து, ''உன்னை ஒரு மர்மமான பெண் என்று பலர் என் காதுபடக் கூறுவதில் உண்மை இருக்கிறது'' என்றார். ''உன் பேச்சிலும் மர்மம் இழையோடுகிறது.''

''அட ஆண்டவனே! நான் மர்மங்களை விடுவிக்கவே கல்வி கற்றேன். தொழிலும் பயிலுகிறேன். மர்மங்களை சிருஷ்டிக்க அல்ல. உங்களுக்குத் தெரியாததா?''

''அது சரி, ஆனால் நீ திடுதிப்பென்று ராமபட்டணத்தில் எப்படி முளைத்தாய்? எங்கிருந்து வந்தாய்? ஏன் வந்தாய்? முதலிய பல விவரங்கள் மர்மமாகத்தானே உள்ளன?''

''யாருக்கும் ஒரு மர்மமும் இதில் தேவையில்லை. ஒரு பொதுக்கூட்டம் போட்டு வேண்டுமானால் பேசி விடுகிறேன்.''



''பொதுக்கூட்டம் எதற்கு? ராமபட்டணம் அப்படியொன்றும் பெரிய ஊர் இல்லை. இங்கே வருகிறானே கல்யாணசுந்தரம் என்று ஒரு பையன் அவனிடம் சொன்னால் போதும். ஊர் முழுவதும் தமுக்கு அடித்து விட்டு வந்து விடுவான்.''

பவானி மௌனமானாள். கல்யாணத்தை அவர் சற்று அலட்சிய பாவத்துடன் ஏளனமாகப் பேசியது அவளுக்குப் பிடிக்கவில்லை.

''மர்மமான மௌனம்'' என்றார் கோவர்த்தனன்.

''மௌனத்தில் மர்மம் இருக்கலாம். ஆனால் என்னைப்பற்றி ஒரு மர்மமும் இல்லை. நான் கல்கத்தாவிலிருந்து வந்தேன். இங்கே என் தாய்மாமனுடன் தங்கியிருக்கிறேன். அவர் ரிடையரானவர். மாமி காலமாகி இரண்டு வருஷங்களாகின்றன. சமையலுக்கு ஆள் வைத்துக் கொண்டு காலம் தள்ளுகிறார். என் தகப்பனார் பாதுகாப்புத் துறையில் உயர் அதிகாரி. என்னையும் என் தாயாரையும் யுத்தத்தை முன்னிட்டு கல்கத்தாவிலிருந்து இங்கே அனுப்பிவிடத் தீர்மானித்தார். ஆனால் என் தாயார் அவரை விட்டு வரப் பிடிவாதமாக மறுத்து விட்டாள். என்னை மட்டும் இருவரும் சேர்ந்து வற்புறுத்தி ரயிலேற்றி விட்டார்கள்.''

இந்தச் சமயத்தில் கட்டிடத்தின் உள்ளே இருந்து பாட்டுச் சத்தம் கேட்டது. பக்க வாத்தியங்களின் ஓசையும் எழுந்தது.

பவானி புருவங்களை உயர்த்தி, ''ஏக அமர்க்களமாய் இருக்கிறதே?'' என்றாள்.

''ஆமாம், இந்தக் கல்யாணம் வந்து சேர்ந்ததிலிருந்து ஒரே பாட்டும் கூத்தும்தான். ஏதோ நாடகம் நடத்தப் போகிறார்களாம்; பண வசூல் செய்து ஏழைகளுக்கு உதவப் போகிறார்களாம். பேசாமல் பிரிட்ஜோ டென்னிஸோ ஆடி விட்டுப் போகாமல் இதெல்லாம் என்ன வேண்டிக் கிடக்கிறது?''

''சமூக சேவா சங்கம் என்ற பெயருக்கு ஏற்பக் கல்யாணம் ஏதாவது செய்ய நினைத்திருப்பார். நியாயம்தானே?'' என்ற பவானி, ''உண்மையில் நான்கூட அவரைத் தேடிக் கொண்டுதான் இங்கு வந்தேன். உங்களைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்ததில் வந்த காரியமே மறந்து விட்டது. இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்'' என்று கூறி விட்டுக் கட்டிடத்தை நோக்கி நடந்தாள்.

கோவர்த்தனன் அவள் போவதை முகம் சிணுங்கப் பார்த்தாலும் அந்த நடையழகை ரசித்துக் கொண்டுமிருந்தார்.

அத்தியாயம் 4

பவானி மந்திரம்!

மாடு படுத்துக் கொண்ட இடம் சாலையில் ஒரு மதகடியில். பின்னால் ஒரு பாக்கர்ட் கார் வந்து நின்றது. அதை நம் கதாநாயகன்

ஹிந்தி படங்கள்தானே? எல்லாம் நான் எடுத்தவைதான்!

ஆல்பிரட் ஹிட்சாக் கல்கத்தாவுக்கு வந்த போது 'நீங்கள் ஹிந்தி சினிமாபார்ப்பதுண்டா?' என்று கேட்டபோது 'இந்தி சினிமாவா? அவை எல்லாமே என் படங்கள்தானே?' என்றாராம்.
டைம்ஸ் ஆஃப் இந்தியா
- கே.ஆர்



கல்யாண சுந்தரம் பி.ஏ.பி.எல். ஓட்டிக் கொண்டு வந்தான். மாட்டு வண்டிக்குப் பின்னால் வந்து கார் நின்றது. மேலே முன்னேற முடியாததால் கோபத்துடன் 'ஹாரனை' அழுத்தினான் கல்யாண சுந்தரம். வண்டி நகருகிற வழியாக இல்லை.

''கொஞ்சம் கூட 'ரோட் சென்ஸே' கிடையாது. எல்லாம் 'நான் சென்ஸ்' தான்'' என்று உரக்கக் கூறியபடியே இறங்கி வண்டியை நோக்கி நடந்து வந்தான்.

''தமிழிலே திட்டுங்க சாமி'' என்றான் வண்டிக்காரன்.

அவன் நிலைமையை உணர்ந்து பரிதாபப் பட்ட கல்யாணம், ''ஏம்பா, மாடு படுத்துக்க இங்கேதான் இடம் பார்த்துதா?'' என்றான்.

''அது மதகைக் கண்டுதா? பிளஷரைக் கண்டுதா? கொஞ்சம் மாட்டைத் தூக்கி விடுங்க சாமி'', என்றான் வண்டிக்காரன்.

''தூக்கி விட்டுடுவேன். ஒண்ணும் பெரிய விஷயமில்லே. ஸில்க் சட்டை அழுக்காகி விடுமேன்னுதான் பார்க்கிறேன். இன்றைக்குத்தான் சலவை பண்ணி வந்தது.''

''அது சரி'' என்று அலுத்துக் கொண்டே, வண்டிக்காரன் மாட்டை அவிழ்க்க ஆரம்பித்தான்.

இதற்குள் மாசிலாமணி கல்யாணத்தை நெருங்கி, ''ஏன் ஸார்? ஹோம்ரூல் கல்யாணசுந்தரத்தின் மகன் கோபாலகிருஷ்ணன் வீடு இந்த ஊரில் எங்கே இருக்கிறது தெரியுமோ?'' என்று கேட்டார்.

''தெரியாதே'' என்றான் கல்யாணம்.

''அப்பா! மாற்றிச் சொல்லி விட்டீர்கள். 'கல்யாண சுந்தரத்தின் அப்பா கோபாலகிருஷ்ணன் வீடு' என்று விசாரியுங்கள்'' என்றாள் கமலா.

கல்யாணம் கமலாவைப் பார்த்தான். அவள் தன் தாயாருக்குப் பின்னால் மறைந்தும் மறையாமலும் நின்றுகொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய அழகிய, பெரிய, கரிய நயனங்கள் அவனுடைய சுந்தரமான முகத்தை வட்டமிடத் தவறவில்லை.

கல்யாணசுந்தரம் அந்தப் பார்வையில் சில விநாடிகள் கட்டுண்டவனாக நின்றான். பிறகு, ''எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்றான்.

''மதராஸிலிருந்து வருகிறோம். இந்த ஊரில் முன் பின் யாரையும் தெரியாது. அவரும் அவர் மகனும் ரொம்பப் பரோபகாரிகள் என்று கேள்விப்பட்டோம். அவர் வீட்டிலே இன்று இரவு தங்கிவிட்டு...''

''அவர் வீட்டிலே ஏற்கனவே நாலு குடும்பங்கள் வந்து தங்கியுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும் சராசரி ஆறு பேர். வக்கீல் கோபாலகிருஷ்ணன் தம்முடைய கேஸ் கட்டுக்களை வைக்கக் கூட இடமில்லாமல் திண்டாடுகிறார்.''

இதற்குள் காமாட்சி அம்மாள் ஓர் அடி முன்னால் வந்து, ''ஏண்டாப்பா நீ யாரு?'' என்றாள்.

''நான்தான் ஹோம்ரூல் கோபாலகிருஷ்ணன் மகன் கல்யாண சுந்தரம்.''

''நினைச்சேன். முகத்தைப் பார்த்ததுமே தெரிந்தது.''

''என்ன தெரிந்தது?''

''நல்ல பிள்ளை, உபகாரி என்று தெரிந்தது. என்னமோ அப்பா நீதான் கொஞ்சம் ஒத்தாசையாக இருக்கணும். வயசுப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டோம். இன்று இராத்திரி தங்க இடம் பார்த்துக் கொடுத்தாலும் போதும்.''

காமாட்சி அம்மாளுக்குப் பின்னால் மறைவாக நிற்பது போல் பாவனை செய்தபடி அதன் மூலமே தன்பால் கவனத்தை ஈர்த்த கமலாவை இரண்டாவது தடவையாகப் பார்த்தான், கல்யாணம். கொஞ்சம் யோசித்தான்.

''இந்த ஊரிலே இப்போது வேறு எது கிடைத்தாலும் கிடைக்கும். தங்க இடம் தான் கிடைக்காது. மதராஸ்காரர்களில் பாதிப் பேர் இந்தச் சின்னப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.''

''அப்படிச் சொல்லக் கூடாது அப்பா! நீதான் ஏதாவது ஏற்பாடு செய்தாக வேண்டும்.''

''ஆகட்டும் பார்க்கிறேன். எனக்குத் தெரிந்த சிநேகிதர் ஒருவர் வீடு காலியாக இருக்கிறது. வடக்கு வீதியிலே நேராக சமீபமாக வந்து சேருங்கள். அங்கே சந்திக்கிறேன்'' என்று கூறிய கல்யாணம் காரை நோக்கி நடந்தான்.

''பவானி அக்கா சொன்னது சரியாகத்தான் இருக்கு. ரொம்பப் பரோபகாரிதான்'' என்றாள் கமலா.

''என்னது! பவானி சொன்னாளா?'' சட்டென்று திரும்பிக் கமலாவைப் பார்த்துக் கேட்டான் கல்யாணம்.

கமலா திடுதிப்பென்று அவன் நேருக்கு நேர் தன்னிடம் பேசவே பதறியவளாகத் தாயாரின் பின்னால் மறைந்து கொண்டாள்.

''ஆமாம், அந்தப் பெண் பவானிதான் சொன்னாள். அதனால்தான் உங்களைப் பற்றி எங்களுக்குத் தெரிய வந்தது'' என்றார் மாசிலாமணி.

''ஏன் ஸார்! அதை முன்னாலேயே சொல்லக் கூடாது! வாங்க, வாங்க! வந்து காரிலே

சாதாரணப் பவுடர்களால் துலக்கும்போது
பிசுக்குகள் பின்தங்கிவிடக் கூடும்.



தூய்மை பளிச்சிடத் துலக்குவது விம்
50% அதிக நுரைக்கும் சக்தி படைத்தது

துலக்குவதற்கான வேறெந்தப் பவுடரையும் விட மிக அதிக அளவு டிட்டர்ஜெண்ட் அடங்கியது விம். ஆகவேதான், அளவு-கடந்த நுரைவளத்துடன் பிசுக்குகளையும் கறைகளையும் அற்ப நொடியில் அகற்று-கிறது. பொடிக் கசடுகள் ஏதும் பின்தங்க விடுவதில்லை.

மேலும், மிக மிக நைஸான பவுடராக இருப்பதால் கீறலே இல்லாத மழமழப்புக்கு உறுதிதருகிறது. தொட்டதை யெல்லாம் தூய்மை பளிச்சிடத் துலக்குவது விம்.

பிசுக்கு இல்லை ! கீறல் இல்லை !
கசடு இல்லை !



விம் மதிப்பு
உயர் மதிப்பு
இந்தப் பேக் வாங்கினால் உமக்கு 25% க்கும் அதிகமாக மிச்சமாகும்.

மாசில்லாத பளபளப்பை வீசிட வைப்பது விம்.

இந்துஸ்தான் லீவரின் இத் தரமான தயாரிப்பு 600 கிராம் மற்றும் 2.5 கிலோ பேக்கிங்குகளில் கிடைக்கிறது.
உதிரியாக ஒருபோதும் கிடைப்பதில்லை.

லின்டாஸ்-V. 47-140 TH



ஜெமினி டீ

தேயிலைச் சுவையிலே ராஜ திலகம்



இதோ, செழுமைத் தேயிலை ஜெமினி.
நாவிலே நறுமண 'தர்பார்'—
கெட்டித் தேநீர் தந்திடும் ராசி–எனவே
கோப்பைகள் அதிகம் அளித்திடும்.
கொண்டாடத் தக்க சிக்கனம் இது.
ஜமாய்த்துப் பருகுவீர் இனி—

ஜெமினி டீ

டாடா-ஃபின்லே படைப்பு

dCA/TFGT/2e Tam.

ஏறுங்க'' என்று உபசாரம் செய்தான் கல்யாணம்.

''நடந்தே போயிடலாமே, அம்மா. எதுக்காக அவருக்குச் சிரமம்?'' என்றாள் கமலா. பவானியின் பெயரைக் கேட்டதுமே கல்யாணத்திடம் ஏற்பட்ட திடீர் மாற்றத்தை அவளால் ரசிக்க முடியவில்லை.

''பேசாமே அந்தக் கறுவடக டின்னைத் தூக்கிக் கொண்டு வா, கமலா! இருட்டிக் கொண்டு வருகிறது பார்'' என்று உத்தரவிட்டாள் காமாட்சி.

ஆளுக்கொரு பொருளாகச் சுமந்து கொண்டு போய்க் கார் டிக்கியிலும் கூரைக் காரியர் மேலும் ஏற்றினார்கள். காருக்குள் அமர்ந்து கொண்டார்கள்.

வண்டிக்காரன் இதற்குள் மாட்டை அவிழ்த்து வண்டியை நகர்த்திச் சாலையோரம் விட்டிருந்தான்.

கல்யாணசுந்தரம் டிரைவர் ஆசனத்தில் அமரக் கதவைத் திறக்கப் போனபோது, அவன், ''சாமி சாமி! வாடகை!'' என்று கத்தினான்.

கல்யாணசுந்தரம் ஐந்து ரூபாய் நோட்டை அலட்சியமாய் எடுத்துக் கொடுத்துப் ''போ'' என்றான்.

காருக்குள்ளிருந்தபடி இதைப் பார்த்த காமாட்சி அம்மாள், ''இது என்ன இந்தப் பிள்ளை இப்படி ஊதாரிச் செலவு பண்ணுறானே'' என்று கமலாவிடம் கிசுகிசுத்தாள்.

''மாமா பெரிய பணக்காரர் போலிருக்கு'' என்றான் விகவம்.

'பணக்காரரானா இருந்தால் போதுமா? இப்படி வாரி வழங்க மனசு வந்து விடுமா என்ன? எல்லாம் பவானி என்கிற அந்தப் பெயர் செய்கிற மாயா ஜாலவேலை' என்று கமலாவின் அந்தராத்மா கூறியது.

(தொடரும்)

வட்ட மேஜை

அன்பே உருவான இறைவனுக்குப் பலி கொடுப்பது எவ்வளவு அநாகரிகமான செயல் என்பதைச் சென்னையைச் சுற்றியுள்ள கோயில்களுக்கு நேரில் போய் எடுத்துக் கூறினார் ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர். தமது பள்ளியில் உள்ள சிறுவர் சிறுமியரை ஜீவகாருண்யத்தைப் பற்றி நாடகங்கள் நடித்துக் காட்டச் செய்து அறியாமையில் ஆழ்ந்திருந்த மக்களை அன்புமயமாக்கினார்.



இவர்கள் பாடிப் பஜனை செய்வதைக் கேட்ட மக்கள் தாங்கள் பலிக்காக ஓட்டி வந்த ஆடுகளையும் கோழிகளையும் இவரிடமே கொடுத்துவிட்டுப் போய் விடுவார்களாம். எஸ். பி. ஸி.ஏ. முதலிய சங்கங்கள் இல்லாத காலத்தில் இந்த மாதிரி மிருகங்களையும், கோழிகளையும் தாமே பராமரித்தும், தகுந்த இடங்களில் கொண்டு போய்ச் சேர்த்தும் சேவை செய்தவர். இவரது சேவையைச் சிறப்பிக்கும் வகையில் மத்திய அரசு ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு ''பிராணி மித்ரா'' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தது.

கல்வி உலக நண்பர்களையும் குடும்பத்தினரையும் துயரில் ஆழ்த்தி விட்டு அண்மையில் காலமான இவர் சென்னையில் சாரணர் இயக்கம் பரவப் பெரிதும் காரணமாக இருந்தவர். தாம் செய்யும் சேவைகளை (Theosophical work) இறைவன் தொண்டு என்றே கருதியவர்.

சென்னை—90
10—4—76

ஆனந்தி

'இன்பத் தென்றல்' தொடர்கதையைப் படிக்கும் பொழுது சிம்லாவின் பனிச் சாரல் நிறைந்த சூழ்நிலையில் நாம் இருக்கும் நிலையை உண்டாக்கிவிடுகிறார் ஆசிரியர். கண் முன்னால் நிகழ்ச்சிகள் நடைபெறுவதைப் போல் உள்ளது. 'ரூபா' தனிச் சிறப்பைப் பெறுகிறாள். தமிழாக்கம் செய்த திரு ரா. வீழிநாதனின் நடை என் மனத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. மொழிபெயர்ப்பு என்றே நினைக்க முடியாத நடை.

சோழவரம்
6—4—76

என். சுப்பிரமணியன்

சீந்திரா அவர்கள் எழுதும் வரலாறு காணாத வரவாற்றில் ஏப்ரல் 4 இதழில் கமலா பற்றிய குறிப்பு வருகிறது. அக்காலத்தில் அவ்வளவு பேர் கமலா பெயரை வைத்துக் கொள்ளக் காரணம், பெயர் பெற்ற கமலா நேருவே. நாடே நேசித்த அவர் மறைந்து, சென்ற பிப்ரவரி 28 உடன் சரியாக நாற்பது ஆண்டுகள் ஆயின.



சென்னை — 90
6—4—76

டி. ஆர். பஞ்சாபகேசன்

நிலையங்கமான மெய்வழிச்சாலை மெய்சிலிர்க்கும் மெய்யான கருத்துக் குவியலாகும்! அறிவுலகம் போற்றும் அற்புதமான படைப்பு!

கோவை
8—4—76

வணங்காமுடி

அண்மையில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ''அண்ணா சாலை'', ''காமராஜர் சாலை'' ஆகியவற்றில் ஆங்கிலத்திலும் '' Salai '' என்று எழுதப்பட்டுள்ளது. இது, அச்சாலைகளில் அதிகமாக நடமாடும் தமிழ் தெரியாத பிற மாநில, வெளிநாட்டு வாசிகளுக்குப் புரியாததோடு, குழப்பமும் உண்டாக வழி செய்கிறது. ஆங்கிலத்தில் ''Road'' என்று ஏன் எழுதக் கூடாது?

சென்னை—28
13 — 4 — 76

ஆர். வி.


நீடித்த
அழகுக்குத் தேவை
தூய்மையான மேனி.

லாக்டோ-காலமைன் ஒன்றுதான் உங்கள் மேனியை அனைத்திலும் அருமையாகப் பாதுகாக்கும்.

உங்கள் மேனியைப் பராமரிக்க லாக்டோ-காலமைன். உங்கள் மேனியைத் தூய்மையாகவும் புதுமையாகவும் வைத்திருக்கக் கூடிய சேர்க்கைப் பொருட்கள் விசேஷ முறையில் இதில் கலக்கப் பட்டுள்ளன. எல்லாம் ஒன்றில் இணைந்த அழகுப் பராமரிப்பு-லாக்டோ காலமைன்—அஸ்ட்ரின்ஜெண்ட், மாயிஸ்சரைஸர், ∴பவுண்டேஷன் க்ரீம் மூன்றும் இணைந்த தன்னிகரற்ற அழகு சாதனம்.

அதனை முறையாக உபயோகித்து வரவும். உங்கள் மேனி இயற்கையாக மெருகேறுவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.



3 வசதியான சைஸ்களில் கிடைக்கிறது:
110 மி.லி.
60 மி.லி.'28 மி.லி.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன், ஒரு ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க். இதனைத் தவறுகப் பயன்படுத்துபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.

உண்மையான லாக்டோ-காலமைன் தானு என்று உறுதி செய்து கொள்வதற்கு, எப்போதும் இந்த க்ருக்ஸ் சின்னத்தைப் பார்த்து வாங்குவீர். அதோடு, க்ருக்ஸ் முத்திரையும் உடையாமல் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

டுஃபார்-இண்டர்ஃப்ரான் லிமிடெட்
த.பெ. எண் 6582, பம்பாய்-400 018

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன் அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

Sista's-DIL-45-P/76/Tam

''காதலர்கள் சந்திக்கும் கடற்கரையில், கண்ணகி சிலை இருப்பது பொருத்தமா?... மாதவி... பதில் சொல்லேன்.''

மாதவியின் வலது கன்னத்தை நிமிண்டியபடி கேட்டான் பிரபு.

அவள் பதில் பேசவில்லை. அவளுடைய நீண்ட கெண்டை விழிகள் பிரபுவின் ஹேர்-ஸ்டைலில் நீந்தியபடி இருந்தன! ''பிரபு, இப்படிப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் கடற்கரை மணலைத் தட்டுவது போல் கொட்டும் திறன் உங்களுக்கு உண்டு... நம்முடைய வாழ்க்கைப் பிரச்னையைப் பாருங்கள்... அதற்கு ஒரு முடிவு காண யோசியுங்கள்... அப்பாவின் அப்ஜெக்ஷனை எத்தனை தரம் சொல்றது...ம்... கேட்டுக் கொள்ளுங்கள்... ஒன்று நீங்கள் இப்படிப் பிடரி வரையில் முடி வைச்சுக்கப் படாது; இரண்டு: 'ஸைட்-பர்ன்ஸ்' இருக்கப்படாது...''

அவள் வாயைப் பொத்தினான் பிரபு.

''ஸ்டாப் இட்!... என்ன அப்ஜெக்ஷன் இது? சே! ஒரு வாலிபன் அவன் இஷ்டப்படி ஹேர் - ஸ்டைல் வைச்சுக்கப்படாது?...''

''பிரபு! வீணா கோபப் படாதீங்க. ஏதோ நம்ம காதலையே அங்கீகரிக்காமல் உதறித் தள்ளி விடுவார்னுதான் நினைச்சேன். நல்ல வேளை... அதை அப்ருவ் பண்ணினார். ஆனால் இந்த... ஹிப்பி ஹேர்-ஸ்டைலும்... கிருதாவும்....''

''மாதவி...! இக்கால நாகரிகத்துக்கு ஏற்பத்தானே நான் வைச்சிண்டிருக்கேன்... உங்கப்பாவும் ஒரு காலத்திலே 'குடுமி'தானே வைச்சிண்டிருந்தார். அப்புறம் ஏன் கிராப் வைத்துக் கொண்டார்? காலம் மாறிண்டு வரது மாதவி...''

''அது... அது... அவர் இஷ்டம்...'' தயங்கினாள் அவள்.

''மாதவி! அவருக்கு ஒரு இஷ்டம் இருக்கலாம். எனக்கு ஒரு இஷ்டம் இருக்கப் படாதா?... பதில் சொல் மாதவி... சரி... நான் இப்போ ஒரு கேள்வி கேட்கிறேன். விவாதத்துக்காக மட்டுமல்ல — உன் தாய் வழிப் பாட்டி, ஏன் உன் தாய்கூட — ரவிக்கைக்கு உள்ளே கை வைச்ச பாடீஸ்தானே போட்டுக் கொண்டிருந்தார்கள்...நீ...''

''பிரபு!...''

''ஏன் மாதவி பதற்றப்படறே? நிதானமாகக் கேளு... இப்போ நாகரிகத்தில் உங்கள் ஆடைகளே மாறிண்டு வர்றப்போ உங்க அப்பா என்ன செய்கிறார்? தாமே, மகளுக்கு — உனக்கு — இருபது முப்பது ரூபாய் செலவில் 'பிரேஸியர்ஸ்' வாங்கித் தரவில்லையா?''

''பிரபு!''

''மாதவி... இந்த ஆடையைப் பற்றி நான் தவறாகப் பேசல்லே... அதுமாதிரி அணிவதையும் நான் குற்றமாப் பேசல்லே.... இந்த மாதிரியெல்லாம் நாகரிகத்துக்கு அடிமையாகி, அதன் வழிச் செல்லும் உன் அப்பா, இந்த ஹிப்பி ஹேர் ஸ்டைலுக்கும், ஸைட்-பர்ன்ஸுக்கும் ஏன் வெறுப்பு விளக்குக் காண்பிக்கிறார் ?...''

''......

''மாதவி டியர்... நான் கேட்கிறது தப்புன்னு நீ, இப்ப சொன்னால்கூட, நாளைக்கு மொட்டை அடித்துக் கொள்ளச் சம்மதம்.... என்ன சொல்றே ?....'' மெதுவாக அவள் கூந்தலை வருடினான்.

''பிரபு....! நீங்க கேட்கிறது, ரொம்ப கரெக்ட்... இனி மேல் என்னாலும் அப்பாவிடம் ஆர்க்யூ பண்ண முடியும்... என் அப்பா ஒரு ஸ்கொயர்.... அதை உடைக்க முயல்கிறேன். ஆனால் பிரபு... இந்த வரதட்சிணை விஷயத்தை உங்கள் அம்மா வாபஸ் பெற என்ன செய்யறதுன்னு புரியல்லே!''

''ஆமாம், மாதவி... எனக்கு அப்பா இல்லே. ஆனால் இந்த அம்மா.... ஓ! எப்படிப் பேசி அவளை வழிக்குக் கொண்டு வரது? ம்... அம்மாவும் ஒரு ஸ்கொயர்தான்..... பார்ப்போம்.... இன்னும் டைம் இருக்கே.''

''ஹுக்கும்... டைம் இருக்கேன்னு பேசாமல் இருக்காதீங்க.... வரதட்சிணைங்கிற, 'டைம் பாம்' இருக்கே! அது வெடிக்காமல் இருக்க வழி தேடுங்கள். ச்சு... என்ன இப்படி.... ச்சு... உங்கள் குறும்புத்தனமெல்லாம் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்த பிறகு... ஓ... விடுங்கள்....''

மனமில்லாமலே இருவரும் பிரிகின்றனர்.

வடபழனி கோயில்.

புன்னகை மாறாத, விபூதி அபிஷேக உருவில் உள்ள வேலவனின் சந்நிதியில் மெய்மறந்து நின்றாள் ராஜம்மா.

''ஏய்... ராஜம்...! என்னடி இது..... 'பெண்டிர்' வரிசையில் நிற்காமல், 'ஆடவர்' வரிசையில் நிற்கிறாய்?... இப்படி உட்பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டு, இந்த வரிசைக்கு வா....''

குரல் கேட்டுக் கண் திறந்த ராஜம், எதிர் வரிசையில் பங்கஜத்தைப் பார்த்தாள்.







''ஓ...! இதோ வந்து விட்டேன்...'' அவசரம் அவசரமாக 'ஆடவரி'ன் வரிசையிலிருந்து நகர்ந்து, உட்பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, பங்கஜத்தின் பக்கத்தில் வந்து நின்றாள்.

'' அட!... இங்கேயிருந்தும் அற்புதமா தரிசனம் கிடைக்குதே...!''

அர்ச்சனை செய்த பிறகு, குருக்கள் தேங்காய், பழத்தட்டை பங்கஜத்திடம் நீட்டினார்.

''ஏண்டி ராஜம்... உன் பையனுக்கு ஏதோ பெண் பார்த்துண்டிருக்காப் போலே இருக்கு......!''

''ஆமாம்!''

இருவரும் இணைந்து நடந்து வந்தனர். மொஸைக் தரையில் சற்று நேரம் உட்கார்ந்தனர். பேச்சு மீண்டும் வரதட்சிணையில் வந்து நின்றது.

''...பங்கஜம்...! நான் அந்தக் காலத்து மனுஷிதான்..... இருந்தாலும் ஒரே பிள்ளை. அதுவும்.... தந்தையில்லாப் பிள்ளை. ஆசையைக் கெடுக்கக் கூடாதுன்னுதான் அவன் குறிப்பிட்ட பெண்ணையே கல்யாணம் செய்து வைக்கப் போறேன்... ஆனால் அந்தப் பெண் வீட்டிலே.... இந்த வரதட்சிணை விவகாரத்தைப் பிடி கொடுக்காமல் பேசுகிறார்கள்....''

''....ராஜம்மா... இப்போ இருக்கிற நிலையிலே வரதட்சிணை வாங்கினாலும், கொடுத்தாலும் தப்புத்தான். பிடி கொடுக்காமல் பேசினாலும் பரவாயில்லை.... பிடித்துக் கொடுத்துவிடப் போகிறார்கள்.... ஜாக்கிரதை.... சரி.... நான் போயிட்டு வரட்டுமா?... அதோ எங்களவர்... நிற்கிறார்... கோயில்பிரசாதம் என்றால் உயிர்...ஸ்வாமி கூட அப்புறம்தான். பிரஸாதம் ஆயிடுமேன்னு வேடிக்கையா சொல்வார்....''

பங்கஜம் சென்றுவிட்டாள். ராஜம்மாவுக்கு மனசு அலை பாய்ந்தது... அவள் சாய்ந்திருந்த தூணுக்குப் பின்புறத்தில் கேட்ட உரையாடல் அவள் கவனத்தை ஈர்த்தது.

'' என்ன குருக்கள்... இப்படி... தட்சணையைக் கேட்டு வாங்கறேளே...? நியாயமா ?''

''ஐயா! நீங்க பெரியவா...நீங்க கேட்டதுலே என்ன தப்பு? — என்னமோ மனசுக்குப் பட்டதைச் சொன்னேன்.... ம்... இப்படி நாலணா, எட்டணாவா சேர்த்துச் சேர்த்து.... ஹும்... என் பெண்ணுக்கு என்னைக்குக் கல்யாணம் பண்ணப் போறேன்?... பிள்ளையைப் பெத்தவா, பெண்ணையும் பெற்றிருந்தால் தானே.... அந்தக் கஷ்டம் தெரியப் போகிறது... வாய் கூசாமல் வரதட்சணை கேட்டுடறா... சரி சார்! போயிட்டு வாங்கோ... முருகன் பார்த்துக்குவான்...'' பழக்க தோஷத்திலே அவர் விபூதிப் பொட்டலங்களை மடித்துக் கொண்டிருந்தார்.

ராஜம்மாவுக்குப் பொட்டில் அடித்த மாதிரி இருந்தது.... 'பெண்ணைப் பெற்றிருந்தால் அல்லவா... அந்தக் கஷ்டம் தெரியும்?'

''முருகா'' என்ற முனகலுடன் அவள் எழுந்தாள். மனத்தில் உறுதி. முகத்தில் தெளிவு. வீட்டை நோக்கி நடந்தாள்.


நடேசன் டைரக்டரின் அறைக்குள் சென்றார். குளுகுளு அறை.

''என்ன மானேஜர்.... ஆபீஸிலே டிஸிப்ளின் எல்லாம் எப்படியிருக்கு?... பங்சுவாலிடி எப்படி... ஸ்டாஃப் பிஹேவியர் எல்லாம் எப்படி ?....''

''வந்து...ஸார்.... எல்லாம் திருப்திகரம்தான்... ஆனால்... ஒன்றிரண்டு ஸ்டாஃப்... ஹேர் ஸ்டைல்தான் பார்க்கச் சகிக்கல்லே.''

''....நீங்க சொல்றது... காஷியர் தம்புவையும், டெஸ்பாட்ச் பாபுவையும் தானே?.....''

''ஆமாம், சார்....! பிடரி வரை முடி



நெஞ்சை விட்டு நீங்காத காட்சி

திரு சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா நடித்த **'கிரஹப்பிரவேசம்' என்னும் திரைப்படத்தில் உங்கள் நெஞ்சை விட்டு நீங்காத காட்சி எது என்று குறிப்பிட்டுச் சுருக்கமாக ஒரு தபால் கார்டில் எழுதி யனுப்பவும். 29-4-76 தேதிக்குள் கிடைக்கும் கடிதங்களை மட்டுமே பரிசீலிப்போம். எந்தக் காட்சி அதிகமான வாசகர்கள் மனத்தைக் கவர்ந்துள்ளதோ அந்தக் காட்சி பற்றி டைரக்டர் யோகானந்த் தம் அனுபவங்களைக் கல்கி நேயர்களுடன் பகிர்ந்து கொள்வார். உங்கள் மனம் கவர்ந்த காட்சி பற்றி டைரக்டரை என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்பதையும் தெரியப்படுத்தலாம்.**



வளர்த்துண்டு... தாடை வரை கிருதா வளர்த்துண்டு...அசிங்கமா இருக்கு ஸார்...''

''....மானேஜர்...! ஒரு விஷயத்தை நாம் புரிஞ்சுக்கணும்.... அவங்க ரெண்டு பேருமே நம்ப கம்பெனியிலே ரொம்ப வருஷமா வேலை பார்க்கிறவங்க...அவங்க 'ஜாயின்' பண்ணதி லிருந்து உங்களுக்குத் தெரியும்.... உங்களை யும் அவங்களுக்குத் தெரியும்....''

''....ஆமாம், ஸார்.....''

''அவங்க ரெண்டு பேருமே இப்பத்தான் மூணு, நாலு மாசமா... இப்படி முடி வளர்த் துக்கிட்டிருக்காங்க...''

''....எஸ்ஸார்.... இமேஜ்னுதான் இப்படி— நான்கூடக் கேட்டுப் பார்த்தேன். ஏதாவது பிரார்த்தனையான்னு... அதெல்லாம் ஒண்ணு மில்லேன்னு சொல்லிட்டாங்க....''

''...மிஸ்டர் நடேசன்.... அவங்களுக்கு வந்துள்ள இமேஜ் ஆசை. வந்த மாதிரியே போயிடும்.... அதைப் பெரிசு பண்ணி, நீங்கள் கேள்வி கேட்டால்.... உங்களையே திருப்பிக் கேட்கலாம்.... குடுமி வைச்சின் டிருந்தவர், ஏன் கிராப்புத் தலையாக மாற்றிக் கொண்டார்னு!... ஸோ... சில விஷயங்களைக் கண்டும் காணாதது போலத்தான் இருக்கணும். வேலையில் அவர்கள் திறமையைக் காட்ட றாங்க. குறை கூற இடமில்லை. ஓ.கே...அது சரி...உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் எவ்வளவு தூரத்தில் இருக்கு?...''

நடேசன் மென்று விழுங்கினார். வரப் போகிற மாப்பிள்ளை பிரபுவின் ஹேர் ஸ்டை லும், கிருதாவும் பொம்மலாட்டம் ஆடின!

''அநேகமாய் முடிஞ்சுடும் ஸார்.... அந்த பிராவிடெண்டு பண்ட் லோன்....''

''சீக்கிரமே கிடைக்கும்.... பெஸ்ட் ஆஃப் லக்.''

நடேசன் அன்று வீடு திரும்பும் பொழுது ஒரு தீர்மானத்துடனே வந்தார்.

''பிரபு நல்ல பையன்... அவன் முடி வளர்ப்பு பற்றி நான் ஏன் முடிவெடுக்க வேண்டும்?.... ஆனால் இந்த வரதட்சிணை விவகாரம்...?'' என்று யோசித்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்தார்.

ஹாலில் பிரபு, பிரபுவின் தாய் ராஜம்மா அமர்ந்திருப்பது கண்டார்: திகைத்தார்.

''வாங்க... வாங்க....''

''வாங்க சம்பந்தி வாங்க'ன்னு கூப்பிடும் படியா கல்யாணம் முடியப் போகிறது'' என்றாள் ராஜம்மா.

'' அட ! ரொம்ப சந்தோஷம்தான்.... வந்து... அந்த வரதட்சணை விவகாரம்....'' நடேசன் இழுத்தார்.

ராஜம்மா பேசினாள் :

''...வரதட்சணை என்கிற பேச்சையே எடுக் கக் கூடாது!''

''அப்படியா?''

''ஆமாம்... காலம் மாறிண்டே வருது ; நாமும் மாறித்தான் ஆகணும். நம்ம காலத் துலே பொண்களை வேலைக்கு அனுப்பின தில்லே. இப்போ அனுப்பறோம். கல்யாண மான அப்புறம் அவள் சம்பாத்தியத்தை அப்பாவிடமா தரப்போகிறாள்? கணவன் மனைவி தங்கள் இஷ்டப்படி செய்யப் போகி றார்கள். .பெண் வேலைக்குப் போகவில்லை என்றாலும் வரதட்சணை என்கிற அநாகரிகச் செயலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டி யதுதான்...''

''அட ! என்ன இவ்வளவு பேசறேளே?''

''ஏன் பேசக்கூடாது ? வரதட்சணை என்கிற பெயரால் என் பிள்ளையை நான் விற்றுவிடுவதா ? தவம் செய்து கிடைத்தது போல உள்ள பிள்ளை, நான் ஏன் விற்கணும்?''

''நீங்கள் சொல்றது....'' நடேசன் இழுத் தார்.

''ஆமாம்:... நான் சொல்றது....அது தான். ஒரு வேளை நாசூக்கா சொல்லத் தெரிய வில்லையோ என்னவோ? இதுதான் பச்சை உண்மை.... குழந்தைகள் மனசு பிடிச்சுக் காதலிக்கறச்சே, இந்தச் சின்ன விஷயங்கள் எல்லாம் தடைக் கற்களாக இருக்கக் கூடாது, இல்லையா ?.... ஆனால் ஒரு விஷயம்...என் பிள்ளை என்ன சொன்னாலும், அந்தக் கிருதாவையும் ஹிப்பி முடியையும் எடுக்க மாட்டேன் என்கிறான். உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்குமோன்னுதான்....''

''சேச்சே ! அதெல்லாம் ஓர் ஆட்சேபணை யும் கிடையாது. 'அந்தக் காலத்திலே நான் கட்டுக் குடுமி வைச்சிருக்கலையா? பிறகு கிராப்புக்கு மாறலையா? இன்று ஹிப்பி கேசம் ஒரு பாஷன், நாளை அது மறுபடியும் மாறும். இதையெல்லாம் பெரிசுபடுத்தலாமோ?''

''நீங்க சொல்றது ரொம்ப சரி..... முகூர்த்தம் எப்போ வைச்சுக்கலாம்....?''

ராஜம்மா கோயிலில் தான் குருக்கள் பேசி யதைக் கேட்க நேர்ந்ததையோ, நடேசன் தாம் டைரக்டரிடம் ஞானோபதேசம் பெற்ற தையோ யாரிடமாவது வெளியிட்டார்களா? மூச் !



HC-18-140-tm

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும் :

M/s. பாரி & கோ., லிமிடெட், சென்னை, கோயமுத்தூர், மதுரை, திருச்சி, செகந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், கள்ளிக்கோட்டை, கொச்சின், பெங்களூர் மற்றும் மங்களூர்

படித்தோம் சொல்கிறோம்

மாதவி அரங்கேறினாள்

'சிறந்த பால் கன்னலொடு தேனைக் கலந்து உண்ணும் பொழுது பெறும் சுவையை எத்தனை சொன்னாலும் ஏட்டளவில் காட்டலாமேயன்றி, சுவைத்துப் பார்த்தவனுக்குத் தான் அதன் அருமை தெரியும்' என்று கமலையா சொல்கிறார் இந்த நூலிலே. அது பாலுக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம்; இலக்கியத்துக்கு அல்ல.

இலக்கியத்தை நேரடியாக நுகர்வதைவிட சிறந்த ரசிகனுடைய கண்ணோட்டத்தில் பார்க்கும் போது அதன் சுவை அதிகரிக்கவே செய்யும். ரசிகனுடைய கண்ணோட்டத்தில் தான், ஆராய்ச்சியாளனின் கண்ணோட்டத்தில் அல்ல!

'மாதவி அரங்கேறினாள்' என்ற நூல் பெரும்பாலும் இலக்கிய வளம் கொண்ட நூல்களைத் தாம் ரசித்த வகையிலே பிறருக்கும் எடுத்துக் கூறி ரசிக்க வைக்கும் முனைப்பு.

'மாதவி அரங்கேறினாள்' என்ற கட்டுரையிலே சிலப்பதிகாரம் அரங்க மேடை நுணுக்கங்களை எடுத்துக் கூறுவதோடு பரதம் கண்ட அரங்கத்தையும் ஒப்பிட்டு நோக்குகிறார்.

'தொல்காப்பியத் தொன்னூல்' என்னும் கட்டுரையில் தொல்காப்பியத்தின் பெருமையைச் சொல்ல வருமிடத்து அகஸ்தியரையும் இழுக்கிறார். அகஸ்தியரிடம் என்ன ஆத்திரமோ, 'வரலாற்றில் அகத்தியரைத் திணித்து அல்லற்படாது இருந்தால் போதுமானது' என்று கூறித் தமிழ் இலக்கியத்துக்கு அவர் பணியை ஏற்க மறுக்கிறார். 'கம்பன் போன்ற பெரும் புலவர்களும் குறுமுனி புகழ் பாடுகிறார்கள்.' என்று குறைப்பட்டுக் கொள்ளவும் செய்கிறார். என்றாலும் ஆசிரியர் கம்பன் புகழ் பாடத் தவறவில்லை என்பதைக் காணும் பொழுது படிப்பவர்கள் மனம் நிறைவுறுகிறது! 'கங்கையிரு கரையுடையான்' என்ற கட்டுரை இதற்குச் சான்று.

'பாதரவில் ஆதரவு' என்னும் கட்டுரையில் நம் தமிழ்நாட்டு ஒப்பாரி இலக்கியத்தின் பெருமையை, மேல்நாட்டு ஹோமருடன் ஒப்பு நோக்கி, 'நாகரிகம் ஒப்பாரியைப் பதம் பார்த்து விட்டது' என்று கூறுமிடத்துப் படிப்பவருக்கும் வருத்தமாகவே இருக்கும், இலக்கியத்தின் ஒரு கண் அடைபட்டு விட்டதே என்று!

இந்த நூலில் ஆசிரியர் இலக்கிய ரசனையோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், 'உத்தரப் பிரதேசம்', 'கட்டிடக் கலை'—அன்றும் இன்றும்' என்பன போன்ற சில கட்டுரைகளை இணைத்திருக்கிறார் திருஷ்டி பரிகாரமாக.

ஆனாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது, ஆசிரியர் தாம் ரசித்தவற்றை எடுத்துக்கூறும் முகமாகப் பிறரையும் ரசிகர்களாக்கிப் பண்டைய இலக்கியங்களில் ஊறித் திளைக்க வைத்து விடுகிறார். அவ்வகையில் வெற்றி கண்ட ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

—ரா. வீ.

விற்பனை உரிமை: தமிழ்ப் புத்தகாலயம்; 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-600005 விலை ரூ. 7-50.



சுவாமி விவேகானந்தர் வரலாறு

வேத காலத்து முனிபுங்கவர்களைப் போன்ற பற்றற்ற துறவு வாழ்க்கையை மேற்கொண்டு பரம பாவனமாக வாழ்ந்தவர் பரமஹம்ஸர். அவரைப் பரம குருவாக அடைந்ததுதான் விவேகானந்தரின் பாக்கியம்; அது பாரதத்தின் பாக்கியமாக வளர்ந்தது. பரமஹம்ஸரின் பாக்கியம், சுவாமி விவேகானந்தரைத் தம் அத்யந்த சீடராக அடைந்தது. பரமஹம்ஸர் என்ற அத்வைத கைவல்ய ஞான தீபத்திலிருந்து ஒளி பெற்றது விவேகானந்த தீபம். அந்த ஒளி பெரு விளக்காய், ஞான ஜோதியாகப் பரிணமித்து அகில உலகத்திலும் ஒளி வீசி விரிந்தது.

இந்நூலில் சுவாமி விவேகானந்தரின் வரலாறோடு பரமஹம்ஸரின் வரலாற்றையும் விரிவாகத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

சுவாமி விவேகானந்தரின் பிறப்பு, வளர்ப்பு பள்ளிப் படிப்பு, அவரது ஞான தாகம் முதலியனவெல்லாம் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. அயல் நாடுகளுக்கு அவர் சென்று நம் பிராசீன தர்மத்தின் குரலாகத் திகழ்ந்து,



திரு கமலேசா



திரு அ. லெ. நடராஜன்



திரு வையவன்

சென்றவிடமெல்லாம் சிறப்பான வரவேற்பைப் பெற்ற விவரங்களெல்லாம் இந்நூலில் பரவலாகக் காணப்படுகின்றன. தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பது இந்நூலின் தனிச் சிறப்பு. ''ஞான தீபம்'' பத்திரிகையில் சுவாமிகள் தம்மைப் பற்றி எழுதி வந்த குறிப்புக்களை ஆங்காங்கு எடுத்தாண்டிருப்பது பாராட்டுக்குரியது.

— லேசாமாஸ்

எழுதியவர்: அ. லெ. நடராஜன், பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14 விலை ரூ. 20.00.

இன்று புதிதாய்ப் பிறந்தோம்

இந்த நாவல் எப்படிப் பிறந்தது?

நூலாசிரியர் வையவனே விளக்கம் தருகிறார் :

''மனித குலம் என்றுமே நம்பிக்கைக்கு அல்லாடி ஒளி தேவைப்படும்போதெல்லாம் கீழ்த் திசையைத்தான் கவனித்து வருகிறது. கீழ்த் திசையின் குருபீடம் பாரதம். இந்த யுகத்தின் நம்பிக்கை வெளிச்சம் எங்கே உதிக்கப்போகிறது? அது பாரத நாட்டில் இல்லையா? அதன் பெருமைகள் எல்லாம் வெறும் பழம் பெருமைகள்தானா? இந்தப் பிரமாதமான கேள்விதான் என்னை உலுக்கி இந்த நாவல் பிறக்கக் காரணமாயிற்று.''

நொடித்துப் போன குடும்பத்தைச் சேர்ந்த கதாநாயகன் ரகுநாதன் அன்னையின் உழைப்பினால் இன்ஜினியரிங் படிப்பில் சேர முடிகிறது. விடுமுறையில் கன்யாகுமரி செல்லும்போது ராஜுவின் உயிரைக் காப்பாற்றி அவனை உயிர்த் தோழனாக அடைவதோடு இந்துமதியின் உள்ளத்திலும் இடம் பெறுகிறான். இவர்களது காதலுக்கு முட்டுக்கட்டை போட இந்துவின் தந்தை நீலகண்டம் பிள்ளை, அத்தான் வெங்கடேசன் 'வில்லர்'களாக வேலை செய்கிறார்கள். உயிர்த்தோழன் ராஜு கதாநாயகன் ரகுநாதனுக்கு உறுதுணையாயிருந்தும் காதல் தோல்வியுறுகிறது! கதாநாயகி இந்துமதி காதலனைச் சந்திக்கும் வேகத்தில் மாடியிலிருந்து உருண்டு மரணத்தின் பிடியில் சிக்குகிறாள்! இது ஒரு டிராஜடி!

நவநாகரிக நங்கை மனோரமாவுக்காவது கதாநாயகன் ரகுநாதனைக் கைப்பிடிக்க முடிந்ததா? அது மற்றொரு டிராஜடி!

ஆனால் மியூஸிக் டைரக்டர் ஆத்மநாதனின் காதலை இழந்த நடனமணி மீரா கடைசியில் ராஜுவோடு இணைவது மனத்துக்குக் கொஞ்சம் ஆறுதல் அளிக்கிறது!

இந்த நாவலில் காணப்படும் அதிகமான உபதேசங்களுக்கு ஆசிரியர் தமது முடிவுரையில் சமாதானம் சொல்கிறார்!

'' 'நாவல்' என்ற கறாரான அர்த்தத்துக்கு இந்த நாவல் பொருந்தாததாக இருக்கலாம்!... நாம் கலந்து பேசிக்கொண்ட கருத்துக்கள் உங்களைச் சிறிது சலனமுற வைத்திருந்தால் அது எனக்குப் போதும்!''

''இன்று புதிதாய்ப் பிறந்தோம்'' நாவலின் கதையோட்டத்துக்குப் பல உபதேசங்கள் இடையூறு செய்தாலும் 607 பக்கங்களையும் ஒரே மூச்சில் படித்து முடிக்க வேண்டும் என்ற ஆவலை அவை தடுத்துவிடவில்லை.

— பி. எஸ். எம்.

பிரசுரம்: குங்குமம் வெளியீடு, விற்பனை உரிமை: வானதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை—17. இரு பாகங்கள் : ஒவ்வொன்றும் பத்து ரூபாய்.

கணக்கு

கூடுகு சிறுத்தாலும் காரம் போகாது. குட்டிப் புத்தகம்தான். ஆனால் குட்டும் போது வலிக்கத்தான் செய்கிறது.

பெயருக்கேற்றபடி இந்நூலில், கணக்காகக் கால் நூறு புதுக் கவிதைகள் இருக்கின்றன. எல்லாம் புதுக் கருத்துக்கள்; புது மெருகுடன் வெளிப்படுகின்றன. 'ஏ' ரகக் கவிதைகளும் உண்டு. மனித இனத்தையே ஆட்டிப் படைக்கும் இரு பெரும் பசி (வயிற்றுப் பசி, உடற்பசி)களின் விளைவாக எழுந்த சமுதாய அவலங்களைச் சுட்டிக் காட்டிப் பரிகாசம் செய்கின்றன. அந்தப் பரிகாசத்தில் குத்தலும் இருக்கிறது — இனம் தெரியாத ஏக்கமும் இருக்கிறது. உதாரணத்துக்கு இரண்டு புதுக் கவிதைகளைப் பார்ப்போம்:

பூக்காரி

பூக்காரி
பூக்குமுன்
பொட்டிழந்தாள்
பொலிவிழந்தாள்
பூவும் இழந்தாள்

கவனம்

சாமியை
கும்பிடும்
மாமிக்கு
சங்கிலியில்
கவனம்

வெளியீட்டின் விலை: ரூ. 1. எழுதியவர்: கொ. ச. பலராமன், 207, மாப்பிள்ளை சுப்பராஜா தெரு, ராஜபாளையம் — 626117

லேசாமாஸ்

மார்கோ சோப்
சுத்தம் செய்வதோடு மட்டும்
நிற்பதில்லை — குளிர்காலத்திலும்
சருமத்தை பாதுகாக்கிறது.

ஏனெனில் மார்கோவில் மட்டுமே வேப்பெண்ணெய் சேர்ந்துள்ளது




மார்கோ சோப்
உங்கள் சருமத்தை மிருதுவாயும், மழமழப்பாயும் வைத்திருக்கிறது!

ஒரு கல்கத்தா கெமிகலின் தயாரிப்பு

CCM-4:8:-A

விநியோகஸ்தர்கள்: சிவராம் & ஸ்வாமி, சென்னை


சேரமான்
காதலி
கண்ணதாசன்
இரண்டாம்
பாகம்

முன்கதைச் சுருக்கம்

கி.பி. 754-ம் ஆண்டில் திருமால் பக்தரான இரண்டாம் சேரமான் பெருமாள் சேர நாட்டில் ஆட்சி செலுத்தி வந்தபோது, முடி துறக்கும் எண்ணம் அவருக்கு ஏற்படவே தம் புதல்வன் மார்த்தாண்டவர்மனுக்கு முடிசூட்டிவிட்டுத் தல யாத்திரை செய்யப் புறப்பட்டார். குலசேகர ஆழ்வாரானார்.

மன்னரின் மைத்துனன் மகனும், படைத் தளபதியுமான பாஸ்கர ரவிவர்மன் ஆட்சியைக் கைப்பற்றும் ரகசிய முயற்சிகளில் ஈடுபடலானான். அம்முயற்சிகளுக்குத் தன் மனைவி பத்மாவதியையே ரகசியத் தூதாக அனுப்பி மன்னர் சேரமான் பெருமானின் கைச் சாத்துப் பெறத் தீர்மானித்தான். பத்மாவதி, தந்தையைக் காட்டிலும் பேரன்புடன் பேணிக் காத்து வரும் மன்னருக்கே நம்பிக்கைத் துரோகம் செய்ய மனம் இடம் கொடாமல் தவித்தாள்.

அரசாங்க ஆலோசகர் நாராயண நம்பூதிரி பாஸ்கர ரவிவர்மனின் சதித் திட்டங்கள் பற்றி அறிந்து மாற்று நடவடிக்கைகளைச் சாமர்த்தியமாக எடுத்தார். என்றாலும் பாஸ்கர ரவிவர்மன் அவர் சாணக்கியங்களைத் தன் சூழ்ச்சிகளால் வென்றான். மக்கள் முன் தோன்றிப் பொய்க் கண்ணீர் வடித்தும் சமத்காரமாகப் பேசியும் அவர்கள் அனுதாபத்தைப் பெற்றான்.

பாஸ்கரனின் காதலி யூதப் பெண் யூதியாள். வஞ்சியை ஆளும் உரிமை தனக்குக் கிடைத்தால் சேர நாட்டுக்குக் கப்பம் கட்டுவதிலிருந்து மதுரையை விடுவித்து விடுவதாக, தூது சொல்ல யூதியாளை ஒரு நடனப் பெண்ணாகவே அனுப்பி வைத்தான் பாஸ்கரன். பிறகு சேரநாட்டு நாட்டியக்காரி மாதவியைக் கொங்கு நாட்டுக்கு அனுப்பி வைத்தான். வளம் இழந்த கொங்கு நாட்டு மன்னன் வலுவிழந்த கவுடதேவன்; அவன், மது, மங்கையர் மோகத்தில் திளைப்பவன்; அவனைத் தன் வலையில் சிக்க வைத்தாள் மாதவி.

திருவரங்கத்தில் இருந்த குலசேகராழ்வாருக்கு அவர் மகன் மார்த்தாண்டவர்மனிடமிருந்து ஓலை வந்தது. உடனே புறப்பட்டுவிட்டார்.

கொங்கு நாட்டுப் படையும், பாண்டிய நாட்டுப் படையும், சேர நாட்டில் புகுந்துவிட்டன. வஞ்சியின் கோட்டைவெளி ரணகளமாகி விட்டது. நாராயண நம்பூதிரி சிறைப்படுத்தப்பட்டார்.

மார்த்தாண்டவர்மனும், அவன் மனைவி மெல்லிளங் கோதையும் தப்பிச் செல்ல எண்ணினர். யாரை அடைக்கலம் கோருவது? பாஸ்கர ரவிவர்மனின் மனைவி பத்மாவதியையும் அவளுடைய தாவளி சகோதரியையுமே தஞ்சமடையத் தீர்மானித்தனர். அவர்கள் கருணையுடன் அவர்களுக்கு உதவி அங்கதன் என்னும் தேரோட்டியின் உதவியுடன் அவர்களை ரகசியமாக வஞ்சியைவிட்டு வெளியேற்றினர். சாலியூர்த் தாவளி உடன் சென்றாள்.

ரவிவர்மன் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றியதும் மக்கள் அவன் பக்கம் சேர்ந்துவிட்டனர். சேர நாட்டுக்கு அயல்நாட்டுப் படையெடுப்பால் நேரவிருந்த ஆபத்து தடுக்கப்பட்டுவிட்டதாக முரசறைந்து மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ரவிவர்மன் தலையில் யூதியாளே மணிமகுடத்தை எடுத்துப் புனைந்தாள்.

மார்த்தாண்ட வர்மன் தான் தந்தைக்கு அனுப்பிய ஓலை அவரிடம் போய்ச் சேர்ந்ததா என அறியத் தேரோட்டி அங்கதனை வினவினான். "ஸ்ரீரங்கத்தில் என் தந்தையைப் பார்த்தாயா?" என்று கேட்டான். "பார்த்தேன். ஓலையைக் கொடுத்தேன். வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டார். நேரே வஞ்சிக்கு வருவார் என்று நினைத்தேன். இன்னும் வரவில்லை" என்றான் அங்கதன்.

ரதம் காட்டுப் பாதையில் வெகு தூரம் ஓடி அகல் நிகவரம் காட்டை அடைந்தது.

திருவேங்கடத்தான் வல்லபன் மகா முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றது. மார்த்தண்டவர்மனையும் மெல்லிளங் கோதையையும் அங்கேயே விட்டு விட்டுச் சாலியூர்த் தாவளியும் அங்கதனும் கண்ணீருக்கிடையே விடைபெற்றுக் கொண்டனர்.

அத்தியாயம் 1

சிவப்பு மூக்குத்தி

சேர நாட்டின் சரித்திரத்தில், 'அரசன் மகன் அரசன்' என்ற வாரிசு பாத்தியதை ஒரு நூறு ஆண்டு வந்தால், அடுத்த நூற்றாண்டில் அதில் ஒரு புதிய வம்சம் குறுக்கிடும்.

மார்த்தாண்டவர்மன் முடி இழந்து செல்லும் வரையிலும், சேர நாட்டின் கதை இதுதான்.

ஆனால் கடந்த காலங்களைப் போல் ஒரு வம்சத்தில் இன்னொரு வம்சம் குறுக்கிட்ட வரலாறல்ல இது. அதே வம்சத்தில் பிறந்த உறவின் முறையோன் ஒருவன் அரசன் மகன் அரசனாகாமல் தடுத்துத் தானே அரசனாகி விட்டான். அவனே பாஸ்கர ரவிவர்மன். சேரநாடு தலைதூக்கி நின்றகாலத்தில் அவன் அரசைக் கைப்பற்றி விட்டான். ஆனால் பிற்காலத்துச் சேரர் வரலாறே அவனிடமிருந்துதான் தொடங்குகிறது. இப்போது இந்தக் கதையின் நாயகனே, சேர வரலாற்றின் கதாநாயகனாக எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பயணத்தைத் தொடங்குகிறான்.

அன்று முரசறைவோன் மீண்டும், ஒரு முடிசூட்டு விழாவைப் பற்றி முரசறைந்தது கேட்டு, வஞ்சி மக்கள் ஆச்சரியப்படவில்லை.

நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவர்களுக்குத் தெரியாதாயினும், மகுடம் தலைமாறி விட்டது என்பதை அறிந்திருந்தார்கள்.

வஞ்சி நகரெங்கிலும் புதிய மன்னனுக்கு வரவேற்பு இருப்பது போலவே காணப்பட்டது.

ஒவ்வொரு வீட்டின் நிலையிலும் சந்தனக் கோலங்கள் போடப்பட்டிருந்தன.

மார்த்தாண்ட வர்மனின் முடிசூட்டு விழாவுக்கு எவ்வளவு உற்சாகத்தோடு பந்தல் போட்டுப் பானகம் வழங்கினார்களோ, அப்படியே இப்போதும் வழங்கினார்கள்.

ஒவ்வோர் அரசு மாறும் போதும் தங்களுக்கு ஏதோ நன்மை நடக்கப் போகிறது என்று எண்ணுவது மக்களின் பழக்கம். ஆரம்ப கட்டத்தில் மளமளவென்று சில நன்மைகளைச் செய்து விடுவது மன்னர்கள் வழக்கம்.

ரவிவர்மன் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கு இப்போது தெளிவாகத் தெரியத் தொடங்கியது.

முரசறைவோன் முரசறைந்தபோது 'பாஸ்கர ரவிவர்மனுக்கு முடிசூட்டு விழா' என்று அறிவிக்கவில்லை; ''ராஜாதி ராஜ கேரள சிங்க வள நாடாகிய வஞ்சிமா புரத்து மாவேந்தர் மூன்றும் சேரமான் இன்றிலிருந்து ஆறுவது நாள் சோம வாரத்தில் உதயாதி நாழிகை ஒன்பதுக்குள் முடிசூட்டிக் கொள்கிறார். ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் கலந்து கொள்ளும் இவ் விழாவில் மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தின் தலைமை அர்ச்சகர் மகுடத்தைக் கையிலெடுத்துத் தருகிறார்'' என்றே அவன் முழக்கினான்.

ஆம்; சிவாலயத்திலிருந்து அர்ச்சகர் வருகிறார் — இது நம்பூதிரிகளை அலட்சியப்படுத்தும் நேரக்கமா? ஆனால் இந்த மரபு மாற்றம் பற்றி மக்கள் பெரிதாகக் கருதவில்லை.

'நம்பூதிரிகள் யாரும் அதற்கு இணங்க மாட்டார்களாதலின், ரவிவர்மன் இந்த ஏற்பாட்டைச் செய்தான்' என்றே விவரமறிந்தோரும் பேசிக் கொண்டனர்.

'நாள் குறித்துக் கொடுத்தது கூட மதுரைதான்' என்றும் அவர்கள் கூறிக் கொண்டனர்.

ஒன்றைப் பத்தாக்கும் மக்களின் சுபாவம், வஞ்சியையும் விடவில்லை!


முடிசூட்டு விழாவுக்கு ஆறு நாட்கள் இருந்தும் வஞ்சி நகரத்தில் திருவிழா ஆரம்பமாகி விட்டது.

மாடங்கள் உள்ள வீடுகளிலெல்லாம் நிலா முற்றத்தில் ஆண்களும், பெண்களும் கூடி உண்டு களிக்கத் தொடங்கினார்கள்.

வஞ்சியில், இரவு பகலாகவும், பகல் இரவாகவும் மாறி விட்டது.

ஒரு மாடத்தின் மீது நின்ற ஒரு புலவர் நல்ல மயக்க நிலையில் வாழ்த்துப்பா பாடினார்.

சிறிய கலயங்களைத் தோளில் சுமந்த அழகிய இளம் பெண்கள் அவருக்கும் மற்றவர்களுக்கும் நறவு ஊற்றினார்கள்.



குஷ்வந்த் சிங் படுமோசம் என்று விமர்சித்த 'ஷோலே' படத்தின் வசூல், 'பாபி' 'ரொட்டி, கப்டா, மக்கான்', 'தீவார்' இந்த 3 படங்களின் மொத்த வசூலையும் மிஞ்சி விட்டதாம்! —கே.ஆர். 'ஸ்டார் & ஸ்டைல்'

''பூவினும் மெல்லியவளே, போதை நிறைந்த விழிகளோடு உன்னையும் இந்த உலகத்தையும் பார்க்கும்போது பாதை மாறினாலும் பரவாயில்லை என்று தோன்றுகிறது.

''இரண்டாம் சேரமான்பெருமாள் சொன்ன பேரின்பத்துக்கு மூன்றும் சேரமான் பெருமாள் காட்டும் சிற்றின்பமே தலைவாசல்!''

—இப்படி ஓரிடத்தில் ஓர் இளம் பெண்ணுக்கும் ஒருவனுக்கும் உரையாடல்.

ரவிவர்மன் காமக்களியாட்டங்களை ரசிப்பவனல்ல என்றாலும், கொண்டாட்டங்களுக்கு அவன் தந்த அனுமதி அவனைப் பற்றியே இப்படி நினைக்கத் தூண்டிற்று.

அங்கதன் — அவன் அரசர் குலசேகர ஆழ்வாருக்கு வாய்த்த அற்புதச் சீடன். அவனும் அவனது நண்பர்கள் சிலருமே அவர்களது இல்லங்களில் துக்கம் கொண்டாடினார்கள்.

பண்பாடுகள் பாழாகி விடுமோ என்று பல பெரியவர்கள் அஞ்சிக் கிடந்தார்கள்.

நம்பூதிரிகள் மண்டபத்தில் நாராயண நம்பூதிரி எதிரேயிருந்த பரசுராமரின் ஓவியத்தைப் பார்த்தபடி ''பழிக்குப் பழி; பழிக்குப் பழி'' என்ற வார்த்தையைத் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டிருந்தார்.

சங்கரன் நம்பூதிரி, கேசவன் நம்பூதிரி, ஜெகந்நாத நம்பூதிரி ஆகியோர் கைகளைக் கட்டிக் கண்களை மூடியபடி தியானத்தில் ஆழ்ந்திருந்தனர்.


சேனைகளிடையே ... அதிகமாக இரு...

இப்போது ... தளபதிகளாகச சேனைகளும் ரவிவர்மனோடு சேர்ந்துகொண்டு விட்டன.

சேரநாட்டு ஆடற் கணிகையரெல்லாம் உடம்பு இளைக்கும் அளவுக்கு அன்று ஆடித் தீர்த்தார்கள்.

மார்த்தாண்ட வர்மனின் முடிசூட்டு விழாவின் போது வஞ்சி நகரம் பக்திக்கோலம் கொண்டிருந்தது; இப்போது களியாட்டக் கோலம் கொண்டு இயங்கிற்று.

கொடுங்கோளூர் பகவதி அம்மன் கோயில் கவனிப்பாரின்றிக் கிடந்தது. வழக்கமாக வரும் இரண்டொரு பக்தர்கள் தங்கள் குடும்பத்தோடு அங்கே வந்து விட்டுப் போனார்கள் அவ்வளவு தான்.



நள்ளிரவில் ....

நகரம் தூங்கவில்லை, பண்பாடு மிகுந்த பெரியவர்கள் மட்டும் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

பகவதி அம்மன் கோயிலில் ஒரு சிறு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கின் ஒளியில் பகவதியின் முகம் தெரியவில்லை; ஆனால் அதன் உள்ளே நுழைந்த கம்பீரமான ஓர் உருவத்தின் முகம் தெரிந்தது. பலருக்கும் தெரிந்த முகம்தான். ஆனால் இதுவரை நாம் அறிமுகப்படுத்திக் கொள்ளாத முகம். இரண்டாம் சேரமான் பெருமானின் காலடியிலேயே கிடந்த முகம். அவன் பெயர் ராமவர்மன்; ஓர் ஏழை; அரண்மனைப் பரிசாரகன்.

உணவில் ஏதேனும் நஞ்சு கலந்திருக்குமோ என்று, தான் உண்ட பிறகே அரசருக்குப் படைப்பவன். துர்ப்பாக்கிய வசமாக அவன் ஓர் ஊமை.

அரசர் விடைபெற்றுக் கொண்ட போது நாம் அவனை அறிமுகப்படுத்தவில்லை. காரணம் அவனே தன்னை யாரிடமும் அறிமுகப்படுத்திக் கொண்டதில்லை. அரசர் அறிவித்த மானியங்களில் மட்டும் அவன் பெயர் இருந்தது.

வஞ்சகம் சூழ்ச்சியறியாத அந்த உத்தம ஊழியன், ஏதோ ஒரு முடிவில் பகவதி கோயிலுக்கு வந்திருந்தான்.

அடையா நெடுங் கதவைக் கொண்ட அந்தக் கோயில் அப்போது அவனுக்காகவே திறந்திருப்பது போல் காணப்பட்டது.

பகவதியின் முன்னால் கைகட்டியபடி சிறிது நேரம் நின்றான். பிறகு, ''தான் சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டன' என்பதுபோலக் கையைக் காட்டினான். ''உனக்குக் கருணை இல்லையே பாவி'' என்பதுபோல் இரண்டு கைகளையும் பகவதியின் முன்னால் நீட்டினான். ''அரசர் எங்கோ இருக்கிறார்; இளவரசன் எங்கோ இருக்கிறானே'' என்பது போல் கைகளை ஆட்டினான். கீழே சிதறிக் கிடந்த புஷ்பங்களை அள்ளிப் பகவதியின் மீது வீசினான். ''உன்னைக்

கும்பிட மாட்டேன்'' என்பது போல், வலது கையால் அலட்சிய பாவத்தைக் காட்டினான்.

திரும்பி அங்கே நட்டு வைக்கப்பட்டிருந்த சூலத்தைப் பார்த்தான்; ஒரு பெருமூச்சு விட்டான்.

அருகிலே தேங்காய் உடைப்பதற்காக நடப்பட்டிருந்த கல்லின் மீது ஏறினான். அப்படியே சூலத்தின்மீது நறுக்கென்று தன் மார்பைச் சாய்த்தான்.

பீறிட்டெழுந்த ரத்தம் பகவதியின் முகத்திலும் சீறிட்டு விழுந்தது.

ஓர் உத்தம ஊழியனின் கதை இங்கேயே தொடங்கி இங்கேயே முடிகிற அதே நேரத்தில் ...

அரண்மனையில் தூக்கம் பிடிக்காமல் தனியறையில் புரண்டு கொண்டிருந்தான் ரவிவர்மன்.

அந்தப்புரத்தில் பத்மாவதியும், தாவளிச் சகோதரிகளும் துயின்று கொண்டிருந்தனர்.

புகழ், பழி, வாழ்வு; இம் மூன்றும் பெருமளவில் வந்தால் தூக்கம் வராது. எழுவதும், நடப்பதுமாக இருந்தான்.

திடீரென்று அரசரது ஓலைச் சுவடிகள் அனைத்தையும் பார்க்க வேண்டும்போல் அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று.

சுவடிகள் வைக்கப்பட்டிருந்த அறைக் கதவைத் திறந்தான். திடீரென்று ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது.

''யாரது; பத்மாவதியா....?''

மங்கிய விளக்கொளியில் அங்கே யாரையும் காணவில்லை.

சுவடிப் பெட்டகத்தை நெருங்கினான்; மறுபடியும் சிரிப்புச் சத்தம் கேட்டது.


அவன் உடம்பெல்லாம் வியர்த்தது.

எரிந்த விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு அங்குமிங்கும் தேடினான்.

ஒரு மூலையில் ....

சிவப்புச் சேலை; விரிந்த கூந்தல், சிவப்பு மூக்குத்தி; நெற்றி நிறையக் குங்குமம்; கழுத்திலே அரளிப்பூ மாலை; பிரகாசமான கண்கள்; உட்கார்ந்திருந்த ஒரு பெண் ருத்திர தேவதை போல் எழுந்தாள். ''யார் நீ? யார் நீ?'' என்று கத்தினான் ரவிவர்மன். (தொடரும்)




MCA/J/Tam/1
மல்லிகைப்பூ
மணம் கமழ...
சுகபோகமிக்க
குளியல் சோப்
விலை ரூ.1.47பை.
மட்டுமே
(தலவரிகள் தனி)
Jasmine
மைசூர்
ஜாஸ்மின்
சோப்
கவர்ன்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு.
விற்பனை செய்பவர்கள்: மைசூர் சேல்ஸ் இன்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

உன்னை என்ன செய்வது?

ஒரு குறிப்பிட்ட தொழிற் துறையிலே பயிற்சி பெற்று அந்தத் துறையில், பதினறு வருஷங்கள் உழைத்து அனுபவம் பெற்றிருந்த என்னைப் பார்த்து, என் மேலாளர், திடீரென்று ''நாளையிலிருந்து இந்தப் பிரிவை மூடிவிடுவது என்று தீர்மானித்தாயிற்று. இப்போது உன்னை என்ன செய்வது?'' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?

இந்த இக்கட்டான கேள்வி இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னை நோக்கி வீசப்பட்டது.

ஏதோ ஓர் அசாதாரணத் துணிச்சலுடன், ''கவலைப்படாதீர்கள்! என்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னிடம் திறமை இருக்கிறது!'' என்று கம்பீரமாகவும், மரியாதையுடனும் என் மேலாளரிடம் சொல்லிவிட்டு, அந்தப் பெரிய ஸ்தாபனத்தை விட்டு வெளியேறி வந்தேன்.

தபால் போதனை மூலம் ஓரளவு வானெலிப் பெட்டிகளைப் பராமரித்து ரிப்பேர் செய்யும் தொழிலைக் கற்றுக் கொண்டிருந்த நான், இருபதாவது வயதில் அந்தப் பெரிய ஸ்தாபனத்தில் நுழைந்து இரு ஐரோப்பியர்களிடம் பயிற்சி பெற்றிருந்தேன். ஒருவர் எனக்கு வெகு சிரத்தையுடன் ரிப்பேர் நுணுக்கங்களையெல்லாம் சொல்லிக் கொடுத்தார். அவர் மெல்பர்ன். மற்றொரு ஐரோப்பியர் மாத்யூ. இவர் வியாபார நுணுக்கங்களை எனக்குக் கற்றுத் தந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் அம்மையார் தம் வானெலிப் பெட்டியை ரிப்பேர் முடித்து வாங்கிக் கொண்டு போக வந்திருந்தார். அந்தப் பெட்டியை வாசலில் நின்று கொண்டிருந்த அந்த அம்மையாரின் காரில் கொண்டு போய் வைக்கச் சிப்பந்திகளின் வர நான் காத்திருந்தேன். மாத்யூ வந்தார். தாமே வானெலிப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு போய் அந்த அம்மையாரின் காரில் வைத்தார். பிறகு, ''மிஸ்டர் கிருஷ்ணன்! வாடிக்கைக்காரர்கள் அனாவசியமாகக் காத்திருப்பதை விரும்ப மாட்டார்கள்'' என்று எனக்குப் பாடம் புகட்டிவிட்டுச் சென்றார்.

ஓர் ஆந்திராக்காரர், நாட்டுப்புறம், பஞ்சகச்சம், அதுவும் அழுக்கு, குடுமி, துண்டு இத்யாதி. ரேடியோகிராம்களின் விலைகளை விசாரித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொன்றும் இரண்டாயிரம், இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் விலை.

நான் அலட்சியமாகவே இருந்தேன். இதை மெல்பர்ன் துரை கவனித்துவிட்டார். தாமே இனிமையாக அந்த ஆந்திராக்காரரிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

பத்தாவது நிமிடத்தில் அந்தப் பழைய வேட்டியின் மடிப்பிலிருந்து ஆந்திராக்காரர் இருபத்து மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்து ரேடியோகிராமை ஊருக்கு அனுப்பச் சொன்னார்.

''மிஸ்டர் கிருஷ்ணன்! ஆளின் தோற்றத்தைக் கண்டு ஏழை பணக்காரன் என்று எடை போடாதீர்கள்'' என்று சொல்லிக் கொடுத்தார் திரு. மெல்பர்ன்.

இத்தகைய அனுபவங்களை விணுக்க நான் விரும்பவில்லை. சவாலை ஏற்றுக் கொண்டேன்! சொந்தத்திலேயே ரேடியோ வியாபாரம் தொடங்க முடிவு செய்தேன். என் நோக்கத்திலேயே வெளியேறிய இன்னொரு கிருஷ்ணனைக் கூட்டாளியாக்கிக் கொண்டேன். இருவரும் மௌண்ட் ரோட்டில் 'ரேடியோ சர்வீஸ்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினோம். நான் வீடு கட்டக் கொடுத்திருந்த முன் பணத்தைத் திருப்பி வாங்கிக் கடையில் போட்டேன்! அந்தக் கிருஷ்ணனும் கொஞ்சம் பணம் திரட்டினார். நாளடைவில் ஜெனரல் பாட்டர்ஸ் ரோடில் மற்றோர் இடத்தையும் பிடித்துப் போட்டு இரண்டு கடைகளாகப் பெருக்கினோம். அங்கொரு கிருஷ்ணன் இங்கொரு கிருஷ்ணன்!

இன்று டெலிவிஷனுக்குக் காத்திருக்கும் வருங்கால வரவேற்பை முன்னிட்டு, நான் ஐம்பத்தி எட்டாவது வயதிலும் டெலிவிஷன் பராமரிப்புப் பயிற்சி வகுப்புக்களுக்குப் போய் வருகிறேன்.


அனுபவம்: **கே. எஸ். கிருஷ்ணன்**
கேட்டு எழுதியவர்: **பட்டினத்தார்**



சவாலைச் சந்தித்தேன்:



முதன்முதலில் ஸ்டீல் வார்ட்ரோப்



U-G14B/6TAM

தயாரித்தளித்தது கோத்ரெஜ்

இன்றும் மிகச்சிறந்தவை கோத்ரெஜ் தயாரிப்பே!

- வழக்கமான ஸ்டோர்வெல்லை-விட கூடுதலான அகலம் மற்றும் உள் அகலம், எனவே கூடுதல் இடவசதி. ஆகவே ஆடைகள் மடிப்பு குலையாது.
- அட்ஜஸ்ட் செய்யக் கூடிய ஷெல்ப்புகள்.
- லாக்கருக்குக் கீழே (நீங்கள் விரும்பினால்) இன்னுமோர் துணி தொங்கவிடும் ராட்.
- முழு உருவம் காட்டும் ஆள் உயரக் கண்ணாடி. (நீங்கள் விரும்பினால்)
- கூடுதல் பாதுகாப்பிற்கு இறுக மூடும் லாக்கர்.
- கதவிற்கு உள்ளே, மேலும் கீழும் இண்டர் லாக் செய்து கொள்ள மும்முனை போல்ட்டிங் அமைப்பு.
- வெளிக்குத் தெரியாத கீல்கள்.
- லாக்கரிலும் கதவிலும் மாற்றுச் சாவியால் திறக்க முடியாத கோத்ரெஜ் பூட்டுகள்.
- நீடித்து நிற்கும், துருப்-பிடிக்காத, பளபளப்பு மங்காத மூன்று வண்ணங்கள்.

அத்துடன் ஈடிணையற்ற கோத்ரெஜ் தரச் சிறப்பு.

Godrej

உன்னதமான தயாரிப்புகளுக்கு ஒப்பற்றது— கோத்ரெஜ்

பொன்னியின் புதல்வர்

சுந்தா

30. மீண்டும் மெய்க்காவல்

மெய்யன்பின் வல்லமையே
மெய்யான மெய்க்காவல்



குடியரசு அமைப்பின்படி முதன் முதலாக 1952 தொடக்கத்தில் பொதுத் தேர்தல்கள் நடந்தபோது, சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. சட்டசபையின் 375 மொத்த ஸ்தானங்களில் பாதிக்கும் மிகக் குறைவாய் 152 ஸ்தானங்களைத்தான் அது அடைய முடிந்தது. இக்கட்டான அந்த நிலையைச் சமாளித்துச் சிறுபான்மை பலத்துடன் ஆட்சி நடத்த, பல விதத் திறமைகளும் தகுதிகளும் வாய்ந்த தலைவர் வேண்டும். அவ்வாறு வாய்க்கப்பெற்றவர் ராஜாஜி ஒருவரே என்று சட்டசபையில் இடம் பெற்ற காங்கிரஸ் உறுப்பினர்களில் அவரிடம் மதிப்பும் மரியாதையும்கொண்டவர்கள் எண்ணினார்கள். அவரை அவர்கள் அணுகித் தலைமை வகிக்க இணங்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

ஏற்கனவே சொன்னபடி, அண்மையில்தான் ராஜாஜி மத்திய மந்திரி பதவியைத் துறந்து, சென்னைக்குத் திரும்பி, அரசியலில் ஈடுபட விருப்பமின்றி ஒதுங்கி யிருந்தார். அதை அந்த உறுப்பினர்கள் அறிந்திருந்தும் அடுத்தடுத்து அவரை வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.

யார் எவ்வளவு வற்புறுத்தினாலும், மறுபடியும் ராஜாஜி சென்னை மாகாண ''அரசியல் சேற்றில்'' சிக்கிக் கொள்ள லாகாது என்று கல்கி கருதினார்; சிக்கிக் கொள்ள மாட்டார் என்றே அவருடன் அடிக்கடி உரையாடியதிலிருந்து நம்பினார்; அந்த நம்பிக்கையுடன் ''ராஜாஜி தலைமை-நடவாத பேச்சு!'' என்று ஓங்கியடித்து ஒரு தலையங்கமும் எழுதினார்:

சென்னை மாகாணத்தை இப்போதைய சங்கடத்திலிருந்து கை தூக்கிவிடும் ஆற்றல் ராஜாஜிக்கு உண்டு. அவரால் அது முடியும் என்பதைப் பற்றி நமக்கு யாதொரு சந்தேகமும் இல்லை. ஆயினும் ராஜாஜியின் அரசியல் தலைமையை இப்போது சென்னை மாகாணத்துக்குக் கோருவது காலங் கடந்த ஆசை என்று நாம் கருதுகிறோம். ஐந்து வருஷங்களுக்கு முன்னால் ராஜாஜியின் தலைமை இந்த மாகாணத்துக்கு ஏற்பட்டிருந்தால், சென்னையின் முன்னேற்றம் இந்தியாவுக்கு முன்மாதிரியாய் இருந்திருக்கும்; உலகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாகவும் இருந்திருக்கும். அந்தச் சந்தர்ப்பம் தவறிப் போய் விட்டது....

தற்போது அவருடைய தூய உள்ளம் பாரமார்த்திகத் துறையில் ஈடுபட்டிருப்பதை நாம் அறிவோம். ''பஜகோவிந்தம்'' கட்டுரைகளின் மூலம் நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அரசியல் துறையை மட்டும் பொறுத்திருக்கவில்லை; மற்றும் பல துறைகளும் இருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இந்தியா தேசத்துக்குச் செய்த தொண்டைப் போல் எந்த அரசியல் தலைவராவது செய்ததாகச் சொல்ல முடியுமா?

ராஜாஜியை இப்போது சென்னை அரசியல் தலைமைக்கு அழைப்பது, ரமண ரிஷியை, ''முனிசிபல் கமிஷனர் வேலையை ஒப்புக் கொள்ளுங்கள்'' என்று கூறுவது போலாகும். (கல்கி இதழ் 30—3—52)

ஆனால் என்ன ஏமாற்றம்! இந்தத் தலையங்கத்தை வாசகர்கள் படித்துக் கொண்டிருக்கையில், ராஜாஜி மனம் மாறி, தலைமைப் பதவி ஏற்க இணங்கி விட்டார். வேறு யாராவது அப்படி மாறியிருந்தால் கடுமையாய்க் கண்டனம் செய்திருப்பார் கல்கி. தமது பெருமதிப்புக்கு உரிய ராஜாஜியே அப்படி மாறியதால், தமது மன நிலையை அதற்குத் தக்கபடி மாற்றிக் கொண்டார். அந்த மாற்றத்தை ''நடவாதது நடந்து விட்டது!'' என்ற வியப்புத் தலைப்புடன் அடுத்த இதழில் வெளியிட்டார்:

சென்ற பல ஆண்டுகளில் பல முறைகளில் ''நாம் அன்றைக்குச் சொன்னோம்; அந்தப் படியே இன்றைக்கு நடந்திருக்கிறது'' என்று பெருமையுடன் இந்தப் பத்திரிகைத் தலையங்கத்தில் நாம் எழுதியதுண்டு. இன்றைக்கு முதல் முறையாக, ''நாம் சொன்னபடி நடைபெறவில்லை; அதற்கு மாறாக நடந்தது பற்றி அளவிலா மகிழ்ச்சி அடைகிறோம்'' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம்.

சென்ற இதழின் தலையங்கத்தில் ''ராஜாஜியின் தலைமை நடவாத வெறும் பேச்சு!'' என்று நாம் எழுதிய பிறகு பல காரியங்கள்

வெகு துரிதமாக, மூச்சுத் திணறும் வேகத்தில் நடந்தேறின. சென்னைச் சட்டசபையின் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் கூடினார்கள். ராஜாஜியின் தலைமையைக் கோரி ஒருமுகமாகத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். ராஜாஜியிடம் தூதுக் கோஷ்டியை அனுப்பினார்கள். அவருடைய பதிலுக்காகக் காத்திருக்கவும், கூட்டத்தைத் தள்ளிப் போடவும் முன் வந்தார்கள். பண்டித ஜவாஹர்லால்ஜியிடம் இருவர் பறந்து சென்றார்கள். அவரிடமிருந்து கடிதம் பெற்று வந்தார்கள்.


இம் மாகாணத்தின் நன்மையில் என்றும் சிரத்தை கொண்ட ராஜாஜி, ''முடியாது'' என்று பதில் சொல்வதற்கு முடியாத சூழ்நிலையை மேற்கூறிய நிகழ்ச்சிகள் உண்டாகி விட்டன. முதலையின் வாயில் சிக்கிய கஜேந்திரனுடைய அபயக் குரலைக் கேட்டு பகவான் ஓடி வந்ததாகப் புராணம் சொல்கிறது. அந்தப் பகவானுடைய பக்தர்களில் தலை சிறந்தவரான ராஜாஜியும், இன்று சென்னை மாகாணத்தை அபாயத்திலிருந்து தப்புவிப்பதற்காக ஓடி வரவேண்டியது இன்றியமையாததாயிற்று.

(கல்கி 6—4—52



விரைவிலேயே கவர்னர் ஸ்ரீபிரகாசா விடுத்த அழைப்பின் பேரில் பதினைந்து பேர் கொண்ட மந்திரிசபை ஒன்றை ராஜாஜி அமைத்து, முதன் மந்திரியாகப் பதவி ஏற்றார். அதைப் பற்றிக் கல்கி எழுதுகையில், ''எல்லாருடைய இதயங்களிலும் புதிய உற்சாகமும் நம்பிக்கையும் உதயமாகி யிருக்கின்றன'' என்றார். அதே சமயம் ஓர் எச்சரிக்கையும் செய்தார்:

- ராஜாஜி மனம் மாறியதால் தமது மன நிலையை அதற்குத் தக்கபடி மாற்றிக் கொண்டார் கல்கி.
- கல்கி எழுதியதைப் படித்துவிட்டு ராஜாஜி, ஒரு கார்டில் பாராட்டி எழுதினார்.
- கல்கிக்கு ஒப்பான ஆர்வத்துடன் ராஜாஜியின் கல்வித் திட்டத்துக்காகப் பிரசாரம் செய்தார் ம.பொ.சி.



ராஜாஜியின் தலைமையும் சரி, இந்த மந்திரி சபையும் சரி, வெகு காலம் நீடித்திருக்க முடியாது என்பது வெளிப்படை. இப்போதுள்ள சட்டசபையில் காங்கிரஸ் கட்சியானது சிறுபான்மையானது. எத்தகைய மாய வித்தையினாலும் சிறுபான்மையைப் பெரும்பான்மை ஆக்கிவிட முடியாது. உத்தியோகம் கொடுப்பதாகச் சொல்லியோ, வேறு வித ஆசைகள் காட்டியோ மாற்றுக் கட்சியாரைக் காங்கிரஸில் சேர்ப்பதற்கு முயலக் கூடியவர் ராஜாஜி அல்ல...

''நாங்கள் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் பொதுநலத்தைக் கருதி நிர்வாகம் நடத்துகிறோம். ஆதரிப்பதும் நிராகரிப்பதும் உங்கள் மனச்சாட்சியைப் பொறுத்தது'' என்றுதான் ராஜாஜி மற்றக் கட்சியாரையும் சுயேச்சையாளரையும் பார்த்துச் சொல்லுவார்.



மனச்சாட்சியைப் பொறுத்து நடப்பவர்கள், எதிர்த்தரப்பில் ஐம்பது பேர் இருந்தார்கள் என்பது சட்டசபையின் முதல் நாள் கூட்டத்தில் நடந்த சபாநாயகர் தேர்தலில் காங்கிரஸ்கார

மர்மச் சிறுகதைப் போட்டி

இந்த மர்மச் சிறுகதைப் போட்டியில் அறிமுக எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். அதாவது போட்டிக்குக் கதையை அனுப்பும்போது இவர்களது கதை, கட்டுரைகள் அச்சில் வந்திருக்கக் கூடாது. இதற்கான உறுதிமொழியுடன் தழுவலோ மொழிபெயர்ப்போ அல்ல என்பதற்கான உறுதிமொழியையும் சிறுகதையுடன் இணைக்கவும்.

முதல் பரிசு ...	... **ரூ.**	**250.00**
இரண்டாவது பரிசு ...	... **ரூ.**	**150.00**
மூன்றாவது பரிசு		
இரு கதைகளுக்கு ரூ. 100 விதம்	... **ரூ.**	**200.00**

முடிவு தேதி: ஏப்ரல் 30உ

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலைகள் இணைக்க வேண்டும். கடிதப் போக்குவரத்து கிடையாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 031

ரான சிவஷண்முகம் பிள்ளை வெற்றி பெற்றதிலிருந்து புலனாயிற்று. மீண்டும் அதே கூட்டத்தில் ராஜாஜியின் மந்திரி சபை மீது அவநம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்று தோல்வியுற்றதிலிருந்தும் அது புலனாயிற்று.

அந்தப் பலப் பரீட்சைகளின் நல்ல பலன்கள் பற்றி விரிவான தலையங்கம் ஒன்றை மே 18ம் தேதிய இதழில் கல்கி எழுதினர். அதை ராஜாஜி படித்துவிட்டு, ''பொன்னே போல் எழுதியிருக்கிறீர்கள்'' என்று ஒரு கார்டில் பாராட்டி எழுதினர். கையொப்பத்துக்கு மேலே அந்த ஓரே வாக்கியம் தான். கீழே, பின்குறிப்பாக இன்னொரு வாக்கியம்: ''அகம்பாவம் அடைந்து விடாமல் ஆண்டவனுக்கு வந்தனை செலுத்தி மனத்தை அடக்கி நடத்துவோமாக.'' (23—5—52)

மனத்தை அடக்கி நடந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகவே இருந்தது — பங்கமுற்றவர்கள் மதி இழந்து நடந்து கொண்டபோது. எப்படி என்பதைக் கல்கியின் ஜூன் முதல் தேதிய இதழில் வெளியான, துணைத் தலையங்கம் ஒன்றிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்:

காங்கிரஸ் எதிரிகள் சிலர் பிரசார மேடையில் ஏறியதும் அடியோடு நிதானம் இழந்து அறிவுள்ள மனிதர்கள் பேசத் தகாத வார்த்தைகளையெல்லாம் பேசுகிறார்கள். காங்கிரஸ் மந்திரிகளையும், மற்றும் காங்கிரஸை ஆதரிப்பவர்களையும் 'அடா! புடா!' என்று கூவி அழைத்து, எதிரில் அவர்கள் நிற்பதுபோல் பாவித்துக் கொண்டு, ஆபாச வசைச் சொற்களைக் கொட்டுகிறார்கள். ''நாய், நரி, பயல், பரட்டை'' என்பவை சர்வ சாதாரணம். ''குடலைப் பிடுங்கி மாலை போட்டுக் கொள்வேன்'' என்பது போன்ற கோர பயங்கர சவால்கள் விடுவோர் சிலர்; மேடையிலேயே காறித் துப்பித் தங்கள் வீரத்தையும் சூரத்தனத்தையும் நிலைநாட்டிக் கொள்வோர் இன்னும் சிலர்.

இப்படியெல்லாம் ஆபாசமாகப் பேசுகிறவர்கள் தங்களைத் தமிழர்கள் என்று கூறிக் கொள்வது, தமிழர் சமூகத்துக்கு அவமானமாகும்.

அந்த வசை மாரிகளையும் பின்னர் மூண்ட வன்முறைச் செயல்களையும் ராஜாஜி பொருட்படுத்தாமல், நல்லாட்சி நடத்துவதில் ஈடுபட்டார். பதவி ஏற்கையில் வாக்களித்தபடி முதல் காரியமாக நிர்வாகத்தை நேர்மையாக்குவதில் கவனம் செலுத்தினர். இரண்டாவதாக, உணவை உண்போருக்கும் உற்பத்தி செய்வோருக்கும் பெருந் தொல்லையாய் இருந்து வந்த உணவுக் கட்டுப்பாடு — பங்கீடு முறைகளை ஓரே வீச்சில் அகற்றினர். தைரியமான அச்

OBM/5800 A TM

"எனது சின்னஞ் சிறிய செல்வி
துடிதுடிப்பாக ஆரோக்கியமாக மற்றும்
சுறுசுறுப்பாக வளர வேண்டும்.
ஆகையால்தான் அவளுக்கு
நாள்தோறும் போர்ன்விடா தருகிறேன்."



"அவளுடன் ஈடுகொடுக்க இப்போது எனக்கு போர்ன்விடா தேவை!"

"...எங்கள் குடும்பத்தினர் அனைவருமே தினமும் இரண்டு வேளை போர்ன்விடா அருந்துகிறோம். என் கணவர் அதுதான் வேண்டுமென்கிறார். ஏனெனில், போர்ன்விடாவில் மால்ட், பால், க்ளுகோஸ் மற்றும் சர்க்கரையோடு, கோகோவும் சேர்ந்துள்ளது. கோகோ மிகவும் ஒன்று திரண்ட சக்தியுள்ள உணவுகளில் ஒன்று என்கிறார் அவர். தவிர, மற்ற மால்ட் கலந்த உணவுப் பானங்களைவிட, போர்ன்விடாவில் அதிக அளவில் கோகோ உள்ளது. கோகோ, போர்ன்விடாவுக்கு அதிக சுவையும் தருகிறது. என் கண்மணிக்கு போர்ன்விடா என்றால் உயிர். அவளது தசைகள், எலும்புகள் மற்றும் மூளை வளருவதற்குத் தேவையான எல்லா போஷாக்குச் சத்துக்களையும் அது தருவதற்கு உதவுகிறது என்பது எனக்குத் தெரியும். அதோடு, மற்ற உணவுப் பானங்களைவிட போர்ன்விடா மிகவும் சிக்கனமானது. நான் தினமும் கோப்பை ஒன்றுக்கு 2 தேக்கரண்டி நிறைய போர்ன்விடா சேர்க்கிறேன். (மற்ற எல்லா உணவுப் பானங்களைப்போல்) என்னுடைய போர்ன்விடா டின் அதிகமான நாட்களுக்கு நீடிக்கிறது.

நீங்களும் வாங்கிப் பாருங்கள் தெரியும்!




காட்பரிஸ்
போர்ன்விடா
சக்தி, வலிமை மற்றும்
இன்சுவை கிட்டும்
உன்னத உணவு பானம்.

ஒவ்வொரு டின்னிலும் அதிக கோப்பை,
ஒவ்வொரு கோப்பையிலும் அதிக சுவை!

லக்மே லவெண்டர் டால்க்

கொஞ்சி மணக்கும்...
பிரெஞ்சு மயக்கம்.





தரித்துக் கொள்வீர்
லக்மே லவெண்டர் டால்க்.
பூத்த புது பிரெஞ்சு
லவெண்டர் பூக்களின்
நேர்த்தியான மணம்.
லக்மே லவெண்டர் டால்க்

**உங்கள் எழில்:
எங்கள் தொழில்.**

dCAIL-VC-LT/1N TAM.

செயலே ''வரப்பிரசாதம்'' எனக் கல்கி குறிப்பிட்டார் :

சென்னைப் பொது மக்களே! ராஜாஜியிடம் நீங்கள் வைத்திருந்த திட நம்பிக்கை இன்று நிறைவேறி விட்டது. உங்களை நீங்களே வாழ்த்திக் கொள்ளுங்கள்!

சந்தேகப் பிராணிகளே! ''இன்றைய நிலைமையில் ராஜாஜி முதன் மந்திரியாக வந்துதான் என்ன பிரமாதமான காரியத்தைச் சாதித்துவிட முடியும்?'' என்று ஐயமுற்றீர்கள் அல்லவா? உங்கள் சந்தேகம் இவ்வளவு சீக்கிரத்திலேயே தீர்ந்து விட்டது. நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்பதில் சந்தேகம் என்ன?

காங்கிரஸை எதிர்த்த அருமைச் சகோதரர்களே! உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களுடைய எதிர்ப்பினாலேதான் சென்னை மாகாணத்தின் முதல் மந்திரிப் பொறுப்பை ராஜாஜி ஏற்கும்படி நேர்ந்தது. அதனாலேதான் சென்னை மக்களுக்கு இந்த எதிர்பாராத அற்புதமான வரப்பிரசாதம் கிடைத்தது. நீங்கள் அடியோடு வாழ்வீர்களாக!

(கல்கி இதழ் 15—6—52)

இதை எழுதிய கையோடு ராஜாஜியுடன் கல்கி திருநெல்வேலிக்குச் சென்று அங்கே சுற்றுப் பயணங்களிலும் வெவ்வேறு விழாக்கள், கூட்டங்களிலும், முதன் மந்திரி அடைந்த பெருமைகளைக் கண்டும், ''உணவுக் கட்டுப்பாட்டை ஒழித்த ராஜாஜி வாழ்க'' என்ற கோஷங்களைக் கேட்டும் மகிழ்ந்தார்; தாம் அடைந்த மகிழ்ச்சியைத் ''திருநெல்வேலித் திருவிழா'' என்ற நெடிய கட்டுரை ஒன்றின் மூலம் வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

மக்களின் நம்பிக்கையை நன்கு புலப்படுத்திய அந்தப் பயணத்திலிருந்து சென்னைக்குத் திரும்பிய ராஜாஜி, துணிவுடன், மேலும் நல்ல காரியங்கள் செய்வதற்குச் சட்டசபையில் தமக்கு எவ்வளவு ஆதரவு கிடைக்கும் என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காக உணவு-நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியத்தைக் கொண்டு, நம்பிக்கைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரச் செய்தார்.

அதன் மீது நாலு நாள் விவாதம் நடந்தது. அதன் இறுதியில் உண்டான நல்ல விளைவு பற்றிக் கல்கி எழுதிய தலையங்கம் — ''சிசுபால வதம்'':

விவாதத்தின் முடிவில் ராஜாஜி நிகழ்த்திய ஒன்றரை மணிப் பிரசங்கம், எதிர்க் கட்சியார் பலரும் ஏன்றோ மூக்கால் நான் மூக்க [illegible]

விவாதமேடை :

தொழிலாளர் ஆரோக்கியப் பாதுகாப்பு இன்ஷ்யூரன்ஸ் (E. S. I.) திட்டம் திறம்பட இயங்குகிறதா?

நேயர்களிடமிருந்து கடிதங்கள் வந்து சேர முடிவு தேதி : ஏப்ரல் 29ம் தேதி

தவிடு பொடியாக்கி, அவர்களுடைய அபத்த வாதங்களைச் சக்கு நூறாக்கி, அவர்களுடைய எதிர்ப்பைச் சின்னாபின்னமாக்கி விட்டது. எதிர்க் கட்சியாரின் எதிர்ப்புக்கு ஓர் உருவம் கொடுத்து அதைச் சிசுபாலன் என்று வைத்துக்கொண்டால், ராஜாஜி அன்று சிசுபால வதம் செய்து விட்டார் என்றே சொல்லி விடலாம்.

முடிவில் வோட்டு எடுத்தபோது, ராஜாஜி மந்திரி சபையிடம் நம்பிக்கை இருப்பதாக இருநூறு அங்கத்தினரும், அதற்கு எதிராக நூற்று ஐம்பத்தோரு அங்கத்தினர்களும் வோட்டுக் கொடுத்தார்கள்...

இது குறித்து நாம் திருப்தி அடைய வேண்டியதுதான். ஆனால் குதூகலம் அடைவதற்கில்லை. பிரச்னை ஒரு வழியாகத் தீர்ந்து விட்டது என்று உறுதி சொல்வதற்கில்லை. எந்த நிமிஷத்திலும் எந்த ரூபத்திலும் மறுபடியும் நெருக்கடி ஏற்படலாம். (13—7—52)

எதிராக வோட்டுச் செய்த 151 பேர்களில் பெரும்பாலோர் ஆந்திர உறுப்பினர்கள்—தென்னட்டி விசுவநாதனின் தலைமையில் இயங்கிய ஐக்கிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்தவர்கள். தமிழர்கள் சிலரும் அந்த முன்னணியில் இருந்தார்கள்.

ஆந்திரர்களின் தனி மாகாணக் கோரிக்கை, ராஜாஜியின் அந்தப் பதவிக் காலத்தில் டி. பிரகாசத்தின் தலைமையில் வலுப்பெற்று, பெரும் கிளர்ச்சியாகி, மத்திய அரசின் ஒப்புதலை அடைந்தது. ராஜாஜியோ பெரும்பாலான தமிழர்களோ அந்தக் கோரிக்கையை எதிர்க்கவில்லை. ஆந்திரர்கள் தனியாகப் பிரிந்து போவதையே வெகுவாக விரும்பினார்கள். ஆனால் ''மதராஸ் மனதே'' என்று சென்னை நகரம் தமக்கு வேண்டும் என்று ஆந்திரர்கள் கோரியதைத் தான் எதிர்த்தார்கள். அந்தக் கோரிக்கை ஈடேறாதபடி செய்து, சென்னை நகரைத் தமிழகத்தின் தலைநகராக உறுதிப்படுத்தியவர் ராஜாஜி.

இடையே ராஜாஜி, மக்கள் நலக் காரியங்களை அடுத்தடுத்துச் செய்து கொண்டிருந்தார். அவற்றில் சிறப்பாய்க் குறிப்பிட வேண்டியவை — தஞ்சை விவசாயிகள்—பண்ணையாட்கள்

பாதுகாப்புச் சட்டமும், விவசாயிகள் கடன் ஒத்தி வைப்புச் சட்டமும்.

அவற்றுடன், குடியரசுச் சட்டத்தின்படி, எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாயும், இலவசமாயும் கல்வி புகட்ட வேண்டியதை முன்னிட்டு, புதிய தொடக்கக் கல்வித் திட்டம் ஒன்றை ராஜாஜி இயற்றுவித்து, 1953 மத்தியில் முதற் படியாகக் கிராமப் பகுதியில் அதை அமுல் செய்தார். அந்தத் திட்டத்தின்படி கூடுதலான பள்ளிக்கூடங்களோ, ஆசிரியர்களோ இல்லாமலே ''ஷிப்ட்'' முறையில் எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி வசதி அளிக்க முடியும்.

அந்தத் திட்டத்தைக் ''குழந்தைக் குலத்துக்கு விடுதலை!'' என்று கல்கி வரவேற்று எழுதினர். அதை எதிர்த்தவர்களுக்குப் பதில் சொன்னர் :

இத்தகைய புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி, ''இது பழைய சாதிப் பிரிவினையை நிலைநாட்டும் முறை'' என்று சிலர் ஆட்சேபம் கூறும் விந்தையைக் காண்கிறோம். உண்மையில் புதிய கல்வி முறை பழைய சாதிப் பிரிவினையை அடியோடு ஒழிப்பதற்கு வகை செய்கிறது. வேளாளக் குழந்தைகள், பிராமணக் குழந்தைகள், ஹரிஜனக் குழந்தைகள் எல்லாரும் புதிய முறையின்படி ஒரு வேளை ஏட்டுக் கல்வி கற்க வேண்டும்; இன்னொரு வேளை ஏதேனும் ஒரு தொழிற் பயிற்சி பெற வேண்டும்...

புதிய முறையின்படி கன்னாரத் தொழிலாளியின் மகன் கன்னாரத் தொழிலாளியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கன்னாரத் தொழிலாளியின் மகன் ஹைகோர்ட் ஜட்ஜ் ஆகலாம். இது போலவே ஏழை உழவனின் மகன் இராஜ்யத்தின் பிரதம மந்திரியாகலாம். சில்லறைக் கடை வியாபாரியின் மகன் பாங்கி டைரக்டர் ஆகலாம். தச்சு வேலைத் தொழிலாளியின் மகன் பெரிய தொழிற்சாலையின் டைரக்டர் ஆகலாம்.

ஏட்டுக் கல்வியும் தொழிற் கல்வியும் சேர்ந்து பயில்வதிலுலேதான் மேனுடுகள் சமீப காலத்தில் புதிய விஞ்ஞான வசதிகளைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டு மகோந்நதமான தொழில் வளர்ச்சியை அடைந்திருக்கின்றன... அத்தகைய மகோந்நதத்தை நமது சுதந்திரப் பாரத நாடும் அடைவதற்கு நம் சந்ததிகளைத் தயார் செய்யும் திட்டம் புதிய கல்வித் திட்டம்.

(கல்கி இதழ் 10—5—53)

இதுபோல் இன்னும் பல கட்டுரைகளையும் கல்கி அப்போது எழுதினர். அந்தக் கல்வித் திட்டத்துக்கு ஒரு பக்கம் ஆதரவு இருந்தும், இன்னொரு பக்கம் எதிர்ப்பு வலுத்துக் கொண்டிருந்ததால் அவ்வாறு அவர் எழுதிப் பிரசாரம் செய்யும்படி நேர்ந்தது. பேராசிரியர் பருலேகர் தலைமையில் மத்திய அரசு நியமித்த நிபுணர் குழு ஒன்று, அந்தத் திட்டத்தை ஆராய்ந்து, அதன் அடிப்படை அம்சங்களை ஆமோதித்த பிறகும்கூட எதிர்ப்பு ஓயவில்லை. புது டெல்லியில் மத்திய கல்வி ஆலோசனை போர்டார் அதைப் பாராட்டியும்கூட ஓயவில்லை. ஏன் அப்படி என்பதை, தமிழரசுக் கட்சியின் தலைவர் ம.பொ. சிவஞானம், ''எனது போராட்டம்'' என்ற தமது சுய வரலாற்றில் விளக்கி இருக்கிருர்.

ராஜாஜி புகுத்திய கல்வித் திட்டத்தில் அதுவரை போதிக்கப்பட்டு வந்த பாடங்களில் எதுவும் குறைக்கப்படவோ கைவிடப்படவோ இல்லை என்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, தமது திட்டத்தில் இல்லாத ஒன்றை தமது பேச்சிலே ராஜாஜி வற்புறுத்தி வந்தார். ஆம்; ''அப்பன் தொழிலை மகன் செய்ய எனது திட்டம் வகை செய்கிறது'' என்று பேசி வந்தார். இதைப் பயன்படுத்தி ராஜாஜி திட்டத்திற்குக் ''குலக் கல்வித் திட்டம்'' என்று பெயர் தந்தது தி. மு. க....

என்ன செய்யப்படுகிறது என்பதை விட யாரால் செய்யப் படுகிறது என்பதற்கே முதன்மை தரப்பட்டது. அதனால், வகுப்பு வாத அரசியல் நோக்குடன், ராஜாஜியின் கல்வித் திட்டம் தி. மு. க. வால் எதிர்க்கப் பட்டது. கொஞ்சம் தாமதித்துத் திராவிடக் கழகமும் புதிய கல்வித் திட்டத்தை எதிர்க்கத் தொடங்கியது. தி. மு. க. ஜூலை 14ல் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டது. அதனால் மாநிலம் முழுவதும் ஆயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர்...

இந்த நிலையில், கல்வித் திட்ட எதிர்ப்பானது, பிராமண எதிர்ப்பாக, காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியாக மாறியது. ஆரம்பக் கட்டத்தில் இவ்வளவையும் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தது தமிழ் நாடு காங்கிரஸ். ஒரு கட்டத்தில் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசவும் முற்பட்டார் திரு கு. காமராசர். தூத்துக்குடி—டால்மியாபுரம் துப்பாக்கிச் சூடுகளினால் பொதுமக்கள் அனுதாபம் தி. மு. க. பக்கம் திரும்பியது. அந்த நேரம் பார்த்துப் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசினர் காமராசர். கல்வித் திட்டம் சரியா தவருு என்பதில் அவருக்குக் கவலை இல்லை. ராஜாஜி ஆட்சியை வெளியேற்றி, தான் அதிகாரத்துக்கு வர அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். (பக். 668-9)

கல்கிக்கு ஒப்பான ஆர்வத்துடன் ராஜாஜியின் கல்வித் திட்டத்துக்காகப் பிரசாரம் செய்தவர் ம. பொ. சி.

வெள்ளமும் அணையும்

வரையறையில் அடங்கும் அலைகள்
கரை புரண்டு ஓடும் அன்பு
சிறகடித்துப் பரவும் ஆனந்தம் — அதனைச்
சிறைப்படுத்தும் புகைப்பட ஓவியம்

மேலட்டை வண்ணப்படம்: **வித்யாசங்கர்**



ஒரு சமயம் மாயூரத்தில் அத்திட்டத்தை ஆதரித்துப் பேசிவிட்டு ஒரு சாலை வழியே ம. பொ. சி. சென்று கொண்டிருக்கையில், கத்திக் குத்துக்கு இலக்காகிக் காயமுற்றார். அச் செய்தி கேட்டுக் கல்கி மிகவும் வேதனைப் பட்டார். அந்த வேதனை, உணர்ச்சி மிக்கதொரு தலையங்கமாக 20—9—53 கல்கி இதழில் வெளியாயிற்று. ''தமிழ் மொழி சொல் வளம் மிகுந்த ஆற்றல் நிறைந்த மொழி; ஆயினும், ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியாரைத் தாக்கிக் காயப்படுத்திய கயவர்களின் செயலைக் கண்டிப்பதற்கு வேண்டிய ஆற்றல் உள்ள சொற்கள் தமிழிலே கூட இல்லையென்றே சொல்ல வேண்டும்'' — என்பதாக அது தொடங்கிற்று.

தாம் ''விழுப்புண்'' அடைந்ததை, அதே தலைப்புக் கொண்ட அத்தியாயத்தில் ம. பொ. சி. வர்ணித்துவிட்டு, அதன் இறுதியில் சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே ராஜாஜியின் கல்வித் திட்டத்துக்கு எதிர்ப்பு எழுந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அக்கல்வித் திட்டத்தை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு ராஜாஜியைப் பதவியிலிருந்து வீழ்த்துவதற்குக் கட்சிக்குள் நடந்த சதி பற்றிக் கல்கியும் வெகுவாக எழுதினார். வெளிப் பகையுடன் உட்பகை; முன்போலவே மீண்டும் ராஜாஜி ''வேண்டும்'', ''வேண்டாம்'' என்ற கோரிக்கைகள், கோஷங்கள், கிளர்ச்சிகள்.

ராஜாஜி வேண்டும் என்று விரும்பியவர்களிலும் சிலர், அவருடைய நல்லாட்சி நீடிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், புதிய கல்வித் திட்டத்தைக் கைவிடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர் இணங்கவில்லை. அதைப் புறக்கணிப்பதை விடப் பதவியைத் துறக்கத் தயாராயிருந்தார்.

1954 மார்ச்சு மாதத்தில் ராஜாஜி நோயுற்று, படுத்த படுக்கையாய் இருந்த நிலையில் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

சரியாக இரண்டு ஆண்டுகள் ராஜாஜி பதவியில் இருந்தார். அவற்றை ''அற நெறி தவறாத ஆட்சி நடந்த இரண்டு பொன் வருடங்கள்'' எனக் கல்கி 'வர்ணித்தார்.

ராஜாஜி விலகியதை அடுத்து காமராஜ் முதல் அமைச்சர் பதவி ஏற்றார்.

ராஜாஜி கொண்டு வந்திருந்த கல்வித் திட்டம் என்ன ஆயிற்று? இயல்பாக எழும் இந்தக் கேள்விக்குக் கல்கியின் சொற்களிலேயே விடை கூறலாம்:

> சென்னை சர்க்கார் ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தைக் கடலில் போட்டு விட்டுக் கூவம் நதியில் கையைக் கழுவிக் கொண்டார்கள். அந்தப் புதிய திட்டத்தில் லவலேசமும் கையில் ஒட்டாதபடி நன்றாகக் கையைக் கழுவி விட்டார்கள்!...
>
> புதிய மந்திரி சபை ராஜாஜியின் கல்வித் திட்டத்தைக் கைவிட்டது. ராஜாஜிக்கு ஒரு தோல்வி என்று சிலர் கருதலாம். ஏன்? ராஜாஜிக்கு அது ஒரு மகத்தான தோல்வி என்று சொல்வதும் மிகையாகாது.
>
> ஆனால் ராஜாஜி தம் வாழ்க்கையில் எத்தனையோ மகத்தான வெற்றிகளையும் கண்டிருக்கிறார்; தோல்விகளையும் கண்டிருக்கிறார். வெற்றியும் தோல்வியும் அவரைச் சிறிதும் பாதிப்பதில்லை. வெற்றியைக் கண்டு அவர் மகிழ்வதும், பெருமை அடைவதும் கிடையாது; தோல்வியைக் குறித்து வருந்துவதும் கிடையாது. தேச முன்னேற்றத்துக்கும் பொது மக்களின் நலத்துக்கும் உகந்த காரியங்களைச் செய்வதிலேதான் அவருக்கு உற்சாகம், மகிழ்ச்சி எல்லாம்.
>
> அவருடைய தோல்விகள் பல, பிற்காலத்தில் மகோந்நதமான வெற்றிகளாக முடிந்திருக்கின்றன என்பதை நினைவு கூர்ந்தால் போதுமானது. (கல்கி இதழ் 23—5—54)

இவைகளும் பொன்னே போல் எழுதிய வரிகளே; அதுவும் அரசியல் அரங்கில் ராஜாஜியின் மெய்யான ''மெய்க்காவலர்,'' கௌரவப் ''பிரசார அமைச்சர்'' என்று வர்ணிக்கக் கூடிய விதமாகக் கல்கி இருந்து தமது வாழ்நாளின் கடைசி இரண்டு பொன்னாண்டுகளில் வரைந்திட்ட வரிகள்.


(தொடரும்)


பாம்பே டையிங்
அணிந்த ஆடவன்
கண்ணாடியில்
காணும் பிரதிபிம்பம்
ஆயினும் வியப்பூட்டும்
ஆனந்தம்!
பாம்பே டையிங் வழங்கும்
ஆடவர் அணிகள்.
பாலியெஸ்டர்/காட்டன் ஷர்ட்டிங்கு-
களின் ஒப்பற்ற உயர் தரம் 50/50,
67/33, 80/20 மற்றும்
நூற்றுக்கு நூறு பாலியெஸ்டர்
பிரிண்டுகள், பாலியெஸ்டர்
டெனிம்கள் மற்றும்
டெக்ஸ்சரைஸ்ட்
ஸூட்டிங்குகள்.
U. BDM-29-76 Tam
கபித்தான் பாலியெஸ்டர் ஷர்ட்டிங்குகள் வாட்ரீன் பாலியெஸ்டர் ஸூட்டிங்குகள்


பாம்பே டையிங்

அப்பாவின்

வயிறும் பிள்ளையுமாக மருத்துவ விடுதியை நோக்கிப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த ராஜாத்தியைப் பார்த்து, ''மாமனார் படத்துக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போடியம்மா'' என்றாள் சீதாலட்சுமி அம்மாள். அங்கே நின்றிருந்த ரங்கதுரை சட்டென்று தலையைத் திருப்பித் தாயை நோக்கினான். சீதாலட்சுமியின் கண்களில் நீர் வரிவிட்டிருந்தது. அவனுடைய உணர்ச்சிகளை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. ஒரு புகைப்படத்துக்கு அடியில் விழுந்து கும்பிட்டு, உயிரற்ற அந்தப் படத்தில் இருந்த உயிர் பிரிந்த ஒரு மனிதரின் ஆசிகளைப் பெற்றுக் கொள்ளுவதில் எல்லாம் அவனுக்கு என்றைக்குமே நம்பிக்கை இருந்ததில்லை. உயிரோடு இருக்கிற மனிதர்களின் கால்களில் விழுந்து வணங்கி அவர்களின் ஆசிகளைப் பெற்றுக் கொள்ளுவது கூட அவனுக்கு உடன்பாடானதன்று. அப்படியிருக்கையில் என்றோ காலமாகிவிட்ட தன் தகப்பனார் அந்தப் புகைப் படத்தின் சட்டத்துக்குள்ளே இருந்தபடி எவ்வாறு தன் மருமகளை ஆசீர்வதிக்கமுடியும் என்று எண்ணி அவன் தனக்குள் கேலியாகச் சிரித்துக் கொண்டான்.



கடவுள் நம்பிக்கையற்ற அவன் அதற்கு ஓர் உருவம் கொடுத்து அதை வணங்குவதை எந்த அளவுக்குக் கேலி செய்து வந்திருக்கிறானோ, அந்த அளவுக்கு ஒரு புகைப்படத்தை வணங்கி எழுவதையும் கேலி செய்யக்கூடியவன்தான். ஆனால் அந்த நேரத்தில் தன் தாயின் உணர்ச்சிகளைப் புண்படுத்த அவன் விரும்பவில்லை. பி.யூ.சி.வரையில் படித்தவளானாலும் கூடக் கடவுள் நம்பிக்கையும் இது போன்ற சம்பிரதாயப் பிடிப்பும் உள்ள தன் மனைவியின் நம்பிக்கையைக் கேலி செய்வதற்கும் இது உற்ற தருணமாக அவனுக்குப் படாததால், ரங்கதுரை தன் முகத்தில் எவ்வகை உணர்ச்சியையும் காட்டாமல் படத்துக்கு முன் விழுந்து வணங்கி எழுந்த ராஜாத்தியை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றான்.

ராஜாத்தியை அழைத்துக் கொண்டு அவன் கிளம்பினான். அவளது பிள்ளைப் பேற்றில் ஒத்தாசை செய்வதற்காக ஊரிலிருந்து வந்திருந்த அவன் தமக்கை கிருஷ்ணவேணி ஏற்கெனவே. மருத்துவ விடுதிக்கு அவனுடைய நண்பன் ஒருவனுடைய துணையுடன் தேவைப்பட்ட சாமான்களை எடுத்துக் கொண்டு போய்விட்டிருந்தாள்.

''சொல்லியனுப்புடா, ரங்கதுரை... நான் கவலையாய் இருப்பேன்.... ராத்திரி முழுதும் தூங்க மாட்டேண்டா...'' என்ற சீதாலட்சுமியை நோக்கிப் புன்னகை ஒன்றை உதிர்த்த அவன், மனைவியுடன் நகர்ந்தான்.

''போய் வரேம்மா...'' என்ற ராஜாத்தியின் கையை அன்போடு வருடிய சீதாலட்சுமி, ''செக்கச் செவேல்னு ஆம்பிள்ளைக் கொழந்தையாய்ப் பெத்துக்கிட்டுவந்துசேரும்மா'' என்றாள்.

சுமார் இரண்டு மணி நேரத்துக்கெல்லாம் ரங்கதுரை திரும்பி வந்தான். பக்கத்துவீட்டுத் தொலைபேசி இலக்கத்தைத் தமக்கையிடம் கொடுத்து விட்டு வந்திருப்பதாகவும் செய்தி சொல்லுவாள் என்றும் அவன் தாயிடம் தெரிவித்தான்.

''தாய் தகப்பன் இல்லாத பொண்ணைக் கட்டிக்கிட்டா இது ஒரு ரோதனை... முதல் மகப்பேறு மொதக்கொண்டு நாமேதான் செய்ய வேண்டியிருக்கு. ஏதோ அம்மா வூட்டுக்குப் போச்சாம், பெத்துக்கிட்டு வந்திச்சாம்னு இல்லே...'' என்று பெருமூச்சுடன் தாயார் அலுத்துக் கொண்டபோது அவன் பதில் சொல்லவில்லை.

''ஒரே பசிம்மா. இலையைப் போடறீங்களா?'' என்று அவன் கேட்டதும் ''நானே கேக்கணும்னு நெனச்சேண்டா... வந்து ஒக்காரு, வா... மத்தியானம் சாப்பிட்ட

அரிசி உப்புமா எப்பவோ செரிச்சுப் போயிருக்குமே?'' என்றவாறு சீதா லட்சுமி அடுக்களைக்குள் நுழைந்தாள்.

ரங்கதுரை சாப்பிட உட்கார்ந்தான்.... வாழைக்காய்க் கறியை எடுத்து வாயில் போட்ட வண்ணம் தற்செயலாகத் தலைநிமிர்ந்த அவன் பார்வையில் அவனுக்கு எதிரில் மாட்டப்பெற்றிருந்த அவன் தகப்பனார் ராமசாமியின் பெரிய மார்பளவு புகைப்படம் விழுந்தது. கூடத்து விளக்கின் வெளிச்சம் அதன் கண்ணாடியின் மீது பட்டுத் தெறித்து



கண்கள்

ஜோதிர்லதா கிரிஜா

அப்பாவின் முகத்தைப் பளபளவென்று காட்டிற்று. புகைப் படத்துக்குள்ளிருந்து அவர் தன்னைப் பார்த்துச் சிரிப்பதைப் போன்ற பிரமையில் தன்னையும் அறியாமல் அவன்" ஒரு கணம் போல் ஆழ்ந்து போனான்.

கலத்தில் குழம்பை ஊற்றிய சீதா லட்சுமி, ''...உங்கஅப்பாருஇல்லியேடா இப்போ? அப்படியே பூரிச்சுப் போயிடுவாரே இருந்தா?'' என்று கூறிவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவள் குழம்பை ஊற்றிவிட்டு அப்பால் நகர்ந்த பின்னரும் கூட அவன் தகப்பனாரின் புகைப்படத்தின் மீது பதிந்திருந்த தன் பார்வையை நீக்கிக் கொள்ளாமல் — அல்லது நீக்கிக் கொள்ள முடியாமல் போய்க் கட்டுண்டு கிடந்தவன் மாதிரி அப்படியே சில கணங்களுக்கு உட்கார்ந்திருந்தான்.

ராமசாமி இறந்து சுமார் ஒரு வாரத்துக்கெல்லாம் அந்தப் புகைப்படம் அந்தப் பெரிய கூடத்தில் நடு நாயகமாகச் சுவரில் தொங்க விடப்பட்டது. தாயின் வேண்டுகோளின்படி சிறிதாக இருந்த ஒரு படத்தைப் பெரிதுபடுத்திச் சட்டம் போட்டு அவன்தான் அதை மாட்டினான். அன்றிலிருந்து இன்று வரையில் அவன் தற்செயலாகத் தலை நிமிர நேர்ந்த நேரங்களில் அல்லாது அவன் பார்வை அதன் மீது அவன் விரும்பிப் பதிந்தது கிடையாது. அப்பாவின் புகைப் படத்தைப் பார்த்து அவரையே பார்த்த நிறைவை அனுபவிக்கும் எண்ணம் இன்று வரையிலும் அவன் மனத்தில் எழுந்ததில்லை.

ரங்கதுரை தன் பார்வையைப் புகைப் படத்திலிருந்து அகற்றிக் கொண்டு சாப்பாட்டில் கவனத்தைச் செலுத்தலானான்.

மோரை வார்த்துவிட்டுச் சீதாலட்சுமி மறுபடியும் பெரியவர் பற்றிய பேச்சைத் தொடங்கினாள். ''...கொழந்தைங்கன்னா உங்கப்பாவுக்குத்தான் எம்புட்டு ஆசை. எங்களுக்குக் கண்ணாலம் கழிஞ்சு எட்டு வருஷம் வரையிலும் கொழந்தை இல்லேங்கிறதுக்காக அவர் செய்யாத தவம் உண்டா?''

கடைசிக் கவளத்தை வாயில் வீசிப் போட்டுக் கொண்ட ரங்கதுரை, ''தவம் பண்ணினாரா? காட்டுக்குப் போயா? மரவுரி உடுத்திக்கிட்டாம்மா?'' என்று கேட்டுவிட்டுக் கிண்டலாகச் சிரித்தான். சீதாலட்சுமியின் முகம் அவனது சிரிப்பால் கன்றிப் போயிற்று.

'' .... ஆமான்டா ? சிரிக்க மாட்டியா பின்னே! இந்தக் காலத்துலே கொழந்தைங்க வேணாம்னுதான் நினைக்கிறாங்க. கண்ணாலம் கட்டி ஒரு வருஷத்துக்குள்ளே வயித்துலே வந்திருச்சுன்னா பொம்பளை அழகு கெட்டுப் போயிடும்னு அதை அழிக்கிறதிலேயே குறியாய் இருக்கிறானுங்க இந்தக் காலத்து ஆம்பிள்ளைங்க. உங்கப்பா அப்படிப்பட்டவரு இல்லேடா. தெரிஞ்சுக்க மொதல்லே...''

ரங்கதுரைக்குச் சுருக்கென்றது. மருந்து சாப்பிடச் சொல்லி ராஜாத்தியைத் தான் வற்புறுத்திய செய்தி தாயாருக்குத் தெரிந்திருக்குமோ என்ற குழப்பத்தில் அவன் சில விநாடிகளுக்கு ஆழ்ந்தான். ஆயினும், ராஜாத்தி அதற்கு இணங்கவில்லை.

சீதாலட்சுமி பேசிக் கொண்டு போனாள். ''கல்யாணம் கட்டி ரெண்டு வருஷம் ஆற துக்குள்ளாறவே அவரு குழந்தைக்கு ஆசைப்பட ஆரம்பிச்சுட்டாரு. ஆனா அது நடக்கல்லே. ஒரு டாக்டரு கிட்ட என்னையும் காட்டலே. தானும் போக மாட்டேன்னிட்டாரு. ஆனா பூஜை யெல்லாம் நிறையச் செய்தாரு. நிறைய விரதம் இருந்தாரு. கோவில் கோவிலாய்ப் போய் முறையிட ஆரம்பிச்சாரு. நம்ம சொந்தக்காரங்கள் ளாம் கூடச் சிரிச்சாங்க — முப்பது வயதுக் குள்ளாறவே அவர் கொழந்தைக்கு ஆலாய்ப் பறந்ததைப் பார்த்து... கடைசியிலே எட்டு வருசம் கழிச்சு நீ பொறந்தே... நீ பொறந்ததை என்னமாக் கொண்டாடினாரு தெரியுமாடா? உங்கப்பாரு அப்படி யொண்ணும் வசதியுள்ளவரு இல்லே. இருந்தாலும் கடன் வாங்கி ஊரு முழுக்கச் சாப்பாடு போட்டாரு. பெசல் காரு வெச்சு உன்னை உன் ஆண்டு நிறைவன்னிக்கி ஊர்கோலம் விட்டாரு. மனுஷன் வெளிக்கு முரடராய்த் தெரிஞ்சாரே ஒழிய உங்கப்பா பலாப் பழம் மாதிரிடா... நல்ல மனசு...''

''அவனுடைய அப்பாவைப்பற்றி அவனுக்குத் தெரியாதா? என்னமோ புதிதாய்ச் சொல்லுகிறார்களே இந்த அம்மா?'' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

'பலாப் பழமாமே, பலாப் பழம்! கொஞ்சக் கூத்தா அடிச்சிருக்காரு மனுஷன்? எப்பப் பாரு, சன்னுப் புள்ளுன்னுதான் விழுவாரு. வேண்டாததுக்கெல்லாம் தாம் தூம்னு குதிப்பாரு. டாண்ணு மணி ஏழு அடிக்கிறதுக்குள்ளே வீட்டுக்குத் திரும்பிடணும். அந்த கண்டிஷன்லேதான் வெளியே விடுவாரு. நேரம் கழிச்சு வந்தா பெரம்பாலே அடிப்பாரு.' — ரங்கதுரை இலையை எடுத்துக் கொண்டு வாசல் பக்கம் போனான்.

அவன் திரும்பி வந்து உட்கார்ந்த பிறகு சீதாலட்சுமி இலை முன் அமர்ந்தாள். விட்டுப் போன பேச்சை அவள் மறுபடியும் தொடரவே அவனுக்கு எரிச்சலாக வந்தது. ''...ஒரு பொண்ணு வேணும்னு ஆசைப் பட்டாரு உங்கப்பா. அது என்னடான்னா ஒன்னோட நின்னிருச்சு... நீ ஆயுசோட இருக்கணுமேன்னு அவர் வேண்டிக்காத நாள் இல்லே. அதனாலேயே உன்னை வீட்டுக்குள் ளாறவே வெச்சுப் பொத்திப் பொத்தி வளர்த் தாரு. காருக்கு அடியிலே நீ ஒருவேளை மாட்டிக்கிட்டா...... வேறே கொழந்தைங்க இருந்தாக் கவலே இல்லே....''

''ஆமாமா. ஏன்னா, ஒண்ணு காருக்கு அடியிலே மாட்டிக்கிட்டாலும் இன்னொண்ணு இருக்குமில்லே?'' — ரங்கதுரை இப்படிச் சொல்லிவிட்டு இடி இடி என்று சிரிக்கவும் சீதாலட்சுமி அவனை முறைத்துப் பார்த்தாள்.

''உனக்குச் சிரிப்பா இருக்குதில்லே? நீயும் இதோ இன்னிக்கோ நாளைக்கோ ஒரு கொழந்தைக்கு அப்பனாயிடுவே. அதுக்கு அப்புறம் இப்படி யெல்லாம் பேச மாட்டேடா...''— தான் பேசியதை அம்மா தப்பாக எடுத்துக் கொண்டு விட்டாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

சற்று நேரத்துக்கு அவர்களிடையே அமைதி நிலவிற்று. அந்த அமைதியின் இறுக்கத்தைத் தளர்த்து முகமாகச் சீதா லட்சுமிதான் பேசினாள்: ''...உங்கப்பாரு தான் உன் கொழந்தையாய் இந்தக் குடும்பத்திலே வந்து பொறக்கப் போறாரு. நம்மை விட்டுட்டுப் போறதுக்கு அவருக்கு விருப்பமே இல்லே.... ஆனா நீ எங்கே இதையெல்லாம் நம்பப் போறே! நீதான் கடவுள் நம்பிக்கை கூட இல்லாதவனாச்சே?''

ரங்கதுரை ஒன்றும் சொல்லாமல் உட்கார்ந்திருந்தான். பக்கத்து வீட்டுப் பையன் வந்து ரங்கதுரைக்கு ஃபோன் வந்திருப்பதாகச் சொல்லி அழைத்துச் சென்றான். சீதா லட்சுமி அள்ளிப் போட்டுக் கொண்டு கை கழுவினாள்.

மனைவியின் அருகில் கிடத்தி யிருந்த சின்னஞ் சிறு உயிரைப் பார்த்து ரங்கதுரை சொல்லி மாளாத வியப்பிலும் மகிழ்ச்சியிலும் மூழ்கினான். அவனிலிருந்து பிரிந்து அவளுள் வளர்ந்து வெளிவந்துள்ள உயிர் அது என்ற நினைப்பில் அவன் சிலிர்த்துப் போனான். அதன் பிஞ்சு விரல்களை ஒரு பூவைத் தொடுவது போல் அவன் தொட்டான். அது தன் விழிகளைச் சற்று மலர்த்தியபோது அவன் எந்த அடிப் படையும் இன்றித் தன் தகப்பனாரின் விழிகளை நினைவுகூர்ந்தான். அந்தச் சின்னஞ் சிறிய கண்கள் வழியே தன்னைப் பார்த்தது தன் தகப்பனாரின் கண்கள்தாம் என்று அவனுக்குப் பிரமை தட்டியது. அவனது படிப்பு, அதனால் தான் கொண்டிருப்பதாக அவன் நினைத்துக் கொண்டிருக்கும் அறிவு ஆகிய வற்றை வெற்றி கொண்டு அவன் உள்ளம் கணம் போல் அதிர்வு கண்டது.

''அம்மா! அம்மா! அப்பா பார்க்கிற மாதிரியே பார்க்குது...'' என்று ஆர்ப் பரித்த மகனை அவள் வியந்து நோக்கினாள்.

''பின்னே வேறு யாரு மாதிரிப் பார்க் கும்னுடா நெனைச்சே?'' என்ற சீதாலட்சுமி நிறைவுடன் குழந்தையைத் தூக்கித் தன் மடியில் கிடத்திக் கொண்டாள்.

வீட்டுக்குத் திரும்பி வந்த ரங்கதுரை தன்னையும் அறியாமல் நீரில் மிதந்த விழி களால் தன் தகப்பனாரின் புகைப்படத் தைப் பார்த்தபோது, அந்தப் படத்தின் கண்கள் சட்டென்று சிறியவையாகி அன்று பிறந்த குழந்தையின் கண்களைப் போலத் தெரிந்தது. தன் பிரமையாலா அல்லது கண்களைக் கண்ணீர் மறைத்ததாலா என்று அவனுக்குப் புரியவில்லை. 'அப்பா! என்னை மன்னிச்சிடுங்க...' என்று அவன் மனத்துள் முனகிக் கொண்டான்.



அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





பியர்ஸ்— அசல் கிளிசரின் சோப்

கனிவான பியர்ஸ் சோப்பினுல் காத்திடுவீர் உங்கள் மேனி மெருகை, மாணிக்கப் படிகம்போல் மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூறுண்டு கால சோப்-உற்பத்தி அநுபவம் உள்ளிறங்கியுள்ளது. பிஞ்சு மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக் கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப் பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லிண்டாஸ்-PS. 56-140 TH



வாலிப - வயோதிக அன்பர்களே,

வாலிப வயதில் செய்கிற தவறுதல்களே இப்போது உடல் கெட்டு பலவீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலவீனம், உடல்வலி, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி மன வேதனையும் கஷ்டமும் அடைந்து வாழ்கிறார்கள். 78 வருட அனுபவம் பெற்ற நமது மருந்துகள் சாப்பிட்டுவர புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். வி. பி. பி.யில் பெற உடன் எழுதுக.

ஒரு மாத மருந்துகள்

மிக உயர்தரம் செட் ரூ. 90. தங்க பஸ்பம், சிட்டுக்குருவி லேகியம் 60 வேளை – ரூ. 120 30 வேளை ரூ. 60. போஸ்டேஜ் இலவசம். நேரில் ஆலோசனை பெற.

1ந் தேதி நெல்லை : நெல்லை லாட்ஜ், காலை 8 மணி முதல் 12 வரை
1ந் தேதி நாகர்கோவில் : ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன், பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை
2ந் தேதி மதுரை : மணீஸ் கபே, காலை 8 மணி முதல் 2 மணி வரை
2ந் தேதி புதுக்கோட்டை : வஸந்தா லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை
3ந் தேதி காரைக்குடி : A. V. M. P. L. ரெஸ்ட் ஹவுஸ், காலை 9 மணி முதல் 11 மணி வரை
3ந் தேதி பட்டுக்கோட்டை : அசோகா லாட்ஜ், பிற்பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை
3ந் தேதி மன்னார்குடி : மன்னை லாட்ஜ், மாலை 4-30 முதல் 6 மணி வரை
4ந் தேதி திருச்சி : ஹோட்டல் அஜந்தா, காலை 8 முதல் 2 மணி வரை
4ந் தேதி கரூர் : பெரியார் லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 வரை
5ந் தேதி தஞ்சாவூர் : ராஜா ரெஸ்ட் ஹவுஸ், காலை 10 மணி முதல் 12 மணி வரை
5ந் தேதி திருவாரூர் : அபூபக்கர் பில்டிங், மாலை 2 முதல் 4 மணி வரை
5ந் தேதி நாகப்பட்டினம் : தினகர் விலாஸ், மாலை 5 முதல் 6 மணி வரை
6ந் தேதி காரைக்கால் : அசோக் லாட்ஜ், காலை 8 முதல் 10 மணி வரை
6ந் தேதி கும்பகோணம் : தாஜ்மஹால் லாட்ஜ், பகல் 12 மணி முதல் 2 மணி வரை
6ந் தேதி மாயவரம் : காளியாகுடி லாட்ஜ், மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை
6ந் தேதி சிதம்பரம் : ஜெயராம் லாட்ஜ், மாலை 5-30 மணி முதல் 7 மணி வரை
7ந் தேதி பாண்டிச்சேரி : அருணா லாட்ஜ், காலை 8 மணி முதல் 9-30 மணி வரை
7ந் தேதி கடலூர் N. T. : ஹோட்டல் பிருந்தாவனம், காலை 10-30 மணி முதல் 12 மணி வரை

கிளை : **41, நைனியப்பன், தெரு, மண்ணடி, சென்னை - 1** போன் : **21448**

வைத்திய திலகம், வைத்தியராஜ் : **டாக்டர் எஸ். காளிமுத்து** R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.) பழனி - 624 601

போன் : 316, 316A, வீடு : 420. பழைய தாராபுரம் ரோடு, பழனி. தந்தி : "சித்தர்"

கிரகப்பிரவேசம்

ஒரு குடும்பத் தலைவன் தன் ஒரே தம்பிக்காக, அவன் முன்னேற்றத்துக்காக, இரவு பகல் பாராமல் உழைக்கிறான்; அவனது பாக்கியம் அவனை அறிந்து, அவன் எண்ணங்களை அநுசரித்து ஒத்துழைக்கும் உத்தமி அவனுக்கு மனைவியாகக் கிடைத்திருக்கிறாள். தம்பி, அண்ணனையும் அண்ணியையும் தாயும் தந்தையுமாகவே நினைக்கிறான். அவன் படித்து முன்னேறி ஓர் என்ஜினீயராகிறான். ஒரு பெரிய தொழில் அதிபரின் மகளின் காதலும் கிடைக்கிறது; அவன் கருத்துக்கு ஏற்பத் திருமணமும் நடந்துவிடுகிறது. இப்படியெல்லாம் ஒழுங்காக நடந்துவிட்டால் படத்தில் சுவை என்ன இருக்கிறது என்கிறீர்களா? இருக்கிறது. நிறைய இருக்கிறது. இப்படி மளமளவென்று முன்னேறிய திரைக்கதையில் பல திருப்பங்கள், எதிர்பாராத அதிர்ச்சிகள் ஏற்பட்டு விடுகின்றன.

இம்மாதிரி லட்சியக் கதாநாயகனுக்கு நடிகர் திலகம் கணேசனை விட்டால் யார் இருக்கிறார்கள்? லாரி டிரைவராக வேலை பார்த்துக் கடும் உழைப்பில் தன் தம்பியின் நினைவாகவே, அவனுக்காகவே பணம் சேர்க்கும் போது அவர் முகத்தில்தான் எத்தனை குதூகலம்! தம்பி என்ஜினியரிங் வகுப்பில் கடைசிப் பரீட்சை எழுதப் போகிறான் என்று அறியும்போது, ஏழை, பாமர அண்ணனின் மனத் துடிப்பு நம் மனத்தை நெகிழ்விக்கிறது. தம்பி ஒரு பணக்காரப் பெண்ணைக் காதலிக்கிறான் என்றறிந்ததும் முதலில் வெகுண்டு சீறி, பிறகு அவனுக்காகப் பெண் பார்க்கப் போனபோது எத்தனை பாமரத்தனம், எத்தனை நடுக்கம், எத்தனை குழைவு! அப்பப்பா! கடைசியில் விபத்தில் காலில் ஊனமுற்ற நிலையில் அவன் பேச்சும் நடவடிக்கைகளும் உருக்கமாயிருக்கின்றன. ஒவ்வொரு கட்டத்திலும் சிவாஜி தம் முத்திரையைப் பதிக்கத் தவறவில்லை.

கே. ஆர். விஜயா அடக்கமாக, நிறைவாக, பொறுப்புணர்ந்த மூத்த மருமகளாக வருகிறார். பதிக்கேற்ற பத்தினியாக வரும் அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடிப்பில், நடிகர் திலகத்துக்குக் கொஞ்சமும் சளைக்காமல் ஈடு கொடுத்து நடிக்கிறார். எல்லாக் கட்டங்களிலும் அவர் நடிப்பு நமக்கு மன நிறைவைத் தருகிறது.

தம்பியாக வரும் சிவகுமார் அண்ணனிடமுள்ள பாசத்தையும், அண்ணியிடமுள்ள அன்பையும் வைத்தே தம் பாத்திரத்தைச் சுலபமாக ஒப்பேற்றி விடுகிறார்.

பணக்காரப் பெண்ணாக வந்து ஏழைக் குடும்பத்தின் இரண்டாவது மருமகளாக மாறும் பாத்திரத்தை ஜெயா ஏற்று மிக நன்றாக நடித்திருக்கிறார். அதிலும் அந்தப் பெண் மன நோய் உள்ளவள் — ஏதாவது அவள் கருத்துக்கு மாறாக நடந்துவிட்டால் பயங்கரமாக மாறி விடுவாள். இந்தச் சிரமமான பாத்திரத்தை அநாயாசமாக ஏற்றுப் பாராட்டைப் பெறுகிறார், ஜெயா.

பெரிய தொழிலதிபராக வந்து மகளின் மன நோய்க்காக வருந்தி வாடும் தகப்பனார் பாகத்தில் மேஜர் சுந்தரராஜன் ஜமாய்க்கிறார். இது அவருக்குப் பழகிய பாத்திரம்.

நன்னு சந்திராவின் கதைக்கு வியட்நாம் வீடு சுந்தரம் வசனம் எழுதியிருக்கிறார். ஆனால் ''சோட்டி பஹு'' என்ற ஹிந்திப் படத்தின் தமிழாக்கம் இப்படம் என்று அறியும்போது நமது உற்சாகமெல்லாம் குன்றிப்போய் விடுகிறது. ஒரு சாதாரணத் திரைக் கதைக்குக்கூட வட நாட்டுக்குத்தான் ஓட வேண்டுமா?

யோகானந்த் தாம் அனுபவம் மிகுந்த டைரக்டர் என்பதைக் காட்சிக்குக் காட்சி நிரூபிக்கிறார்.

ஒளிப் பதிவு பாலகிருஷ்ணனின் கைவண்ணத்தில் வண்ணப் படம் ஒளிர்கிறது.

நடிப்பாற்றலினால் நிறைவைத் தரும் ''கிரகப் பிரவேசம்'' புதிய பாத்திரத்தில் காணும் பழைய சோறு.

—காந்தன்



நேச நெஞ்சம்

வி.ஸ.காண்டேகர்



கண்ணனுக்குப் பிரியமான கோபி அவள். என்றாவது ஒரு நாள் அவனைக் காணவிட்டால் அவளுக்கு உணவு இனிக்காது.

யமுனைக் கரைக்கு அவள் சென்றால், முன்னமே புன்னை மரத்தின் அடர்ந்த கிளைகளில் பதுங்கி அமர்ந்த கண்ணன் குழலூதுவான். அவள் கால் அங்கேயே தயங்கிப் பின்னித் தடுமாறும். இடுப்பில் உள்ள பானையில், அமுதினுமினிய இசை வெள்ளம் அலைஅலையாக நிரம்பித் துளும்புவதாகத் தோற்றும்.

சில சமயம் அவன் ஊமையாக இருப்பான். உவகை மங்கி, அவள் மெல்ல மெல்ல அடியிட்டு நகருவாள். கண் இமைக்கும்பொழுதில் 'டக்' என்று ஒரு கல், குறி தவறாமல் அவளது பானையைத் தாக்கும். பானை உடையும்.

''இதோ நேரே யசோதையம்மாவிடம் போய்ச் சொல்லுகிறேன்!'' என்று வீருப்புடன் பேசிவிட்டு, அவள் தரதரவென்று நடப்பாள். கையில் உடைந்த ஐந்தாறு பானையோடுகள் இருக்கும். ஆனால் நந்தனுடைய அரண்மனைக்கு வரும்போது அவற்றுள் ஏதாவது ஒரு துண்டுதான் அவளிடம் மிஞ்சும். அதை வீசி எறிய மனம் வராது. தலைப்பில் அதை முடிந்து மறைத்துக் கொண்டு அரண்மனைக்குள் புகுவாள்.

யசோதையிடம் அவள் பேச்சுக் கொடுப்பாள்; கண்ணனுடைய சாமர்த்தியத்தையும் வீரத்தையும் புகழ்வாள்; நேரம் போவது தெரியாது. பேச்சுப் பராக்கில், யமுனை ஆற்றிலிருந்து இன்னும் தண்ணீர் கொண்டு வரவே இல்லையே என்ற நினைவு எழும். சடக்கென்று எழுந்து வீட்டுக்கு வருவாள். தாய்க்குத் தெரியாமல் இன்னொரு பானையை எடுத்துக்கொண்டு புறப்படுவாள். காதில் ஒலிக்கும் குழலோசை துணை வர, கொதிக்கும் வெயிலும் தண்ணிலவாகக் குளிரும்.

இப்படி நாலைந்து இளவேனில்கள் வந்தன, போயின.

உலக வழக்கப்படி ஆய்ப் பெண்ணுக்குத் திருமணம் நிகழ்ந்தது. உயர்ந்த நிலையிலுள்ள கணவன் கிடைத்தான் என்று





ணரார் போற்றினர். மாமன்னன் கம்ஸனது மடைப்பள்ளியில் அவன் ஓர் அதிகாரி.

தினமும் இனிய பண்டங்கள் அவனுக்கு உண்ணக் கிடைத்தன. பசைப் பூச்சினால் மிருதங்கம்கூட மதுரமாக ஒலிக்கிறது; மாந்தருக்குக் கேட்க வேண்டுமா? கணவன் வாயிலாகக் கம்ஸனைப் பற்றிக் காதில் விழுந்த புகழ் மொழிகள் மெல்ல மெல்ல அவளுக்கும் பாடமாயின. விழித்திருக்கையில் குழலோசை அவள் காதில் ஒலிக்காத நிலை வந்தது.


கண்ணனுடைய குறும்புகள் ஓயாமல் வளர்வதாக மதுரைக்குச் செய்திகள் விரைந்த வண்ணம் இருந்தன. அஞ்சி நடுங்கிய கம்ஸன், கண்ணனை அழைத்து வர அக்ரூரரை அனுப்பினான். கண்ணனும் பலராமனும் மதுரைக்கு வந்ததுமே, கண்ணன் சாணூரனுடனும், பலராமன் முஷ்டிகனுடனும் மற்போர் நிகழ்த்த வேண்டும் என்ற ஏற்பாடு. மதுரை மாநகர் முழுவதும் அந்தப் பெரு விழாவைக் கண்டு களிக்க ஆர்வமுற்று, கண்ணில் உயிரைத் திரட்டிக் கொண்டு அந்த நாளை எதிர்பார்த்திருந்தது.

ஆகா! அந்தப் பொன்னான நாள் ஒரு வகையாக உதித்தது. அன்றைக்கு ஆய்மகள், காட்சிச் சாலையில் சாமானிய மக்களுடன் கூட்டத்தில் மோதி இடிபட்டுக் கொண்டு உட்காருவதாக இல்லை. யாரும் எளிதில் கவனிக்கக் கூடிய, முக்கியமான இடத்தை, அவளுக்காக அவள் கணவன் பிடித்து வைத்திருந்தான்.

பொழுது விடிந்ததிலிருந்தே அவள் எந்தச் சேலையை உடுப்பது, எந்த எந்த நகைகளை அணிவது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். தான் பாடப்போகும் பெருங் காப்பியத்தைப் பற்றி ஒரு மகா கவிகூட அப்படிக் கவலைப்படமாட்டான்; அவ்வளவு கவலை அவளுக்குத் தன் சிங்கார ஆடை. அணிகளைப் பற்றி! என்ன செய்தும் அவளுக்கு எதுவுமே திருப்தியாக அமையவில்லை.

மற்போர் நிகழ வேண்டிய வேளை நெருங்கி நெருங்கி வந்தது. ஆனால் கோபியின் அலங்கரிப்பு முடிந்த பாடில்லை. இன்னும் சில நகைகளை அவள் அணிய வேண்டியிருந்தது. நேரம் கடக்கக் கடக்க அவளது ஒய்யாரமும் சொகுசும் கணவனுக்குப் பிடிக்கவில்லை. ''விழா முடிந்த பிறகு அங்கே போய் நீ என்ன, குப்பை கூட்டப் போகிறாயா?'' என்று எரிந்து விழுந்தான்.

ஒரு கடைக்கண் வீச்சினால் அவன் சினத்தை அடக்கிய அவள், ''இங்கே கொஞ்சம் உதவிதான் செய்யுங்களேன்! கருவூலத்தில் வைத்துள்ள என் நகைப்





முதல் பக்கம்:
- ஞான பீடப் பரிசு பெற்ற காண்டேகர்.

மேலே:
- காண்டேகரைத் தமிழ் நாட்டினருக்கு அறிமுகப்படுத்திப் பிரபலமடையச் செய்த கா. ஸ்ரீ. ஸ்ரீ.



பிரிட்டிஷ் இளவரசி மார்கரெட் இப்பொழுது தன் கணவரை விட்டுப் பிரிந்து விட்டாள். அந்தக் கணவர் ஸ்நோடவுனுக்கு உகாண்டா ஜனாதிபதி இடி அமின் அனுப்பிய செய்தி:

"பெரிய இடத்துப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று எல்லா ஆண்களுக்கும் ஒரு பாடமாக உங்கள் திருமணம் இருக்கும்."

நிம்மத் - பாபு

பேழையை எடுத்து வாருங்களேன்!'' என்று கட்டளை யிட்டாள்.

கணவன் பேழையைக் கொண்டு வந்தான். காதணிகள், கழுத்தணிகள், தோளணிகள்—அனைத்தையும் அவன் வெளியே எடுத்தான். கடைசியில் பேழை அடியில் ஒரு சிறு பானைச் சுக்கல் அவன் கைக்குத் தட்டுப்பட்டது. அதை எடுத்துப் பார்த்து அவன் கலகல வென்று நகைத்துக் கொண்டே, ''பெண்களின் நகைகளைப் பற்றி எனக்கு என்ன தெரிகிறது? இந்த நகையின் பெயர் என்னவோ? இதை எங்கே அணிந்து கொள்வாயோ?'' என்று மனைவியைக் கேட்டான்.

அவன் கையிலிருந்த ஓட்டாஞ்சல்லியைக் கண்டு அவள் கண்ணை ஒரு சுழற்றுச் சுழற்றினாள்; முகத்தைச் சிணுக்கிக் கொண்டே, ''இதுஎன்ன வேடிக்கை வேண்டிக் கிடக்கிறது! எனக்கு இந்த விஷமமெல்லாம் பிடிக்காது. நீங்கள்தாம் குறும்புக்காக இந்த ஓட்டாஞ்சல்லியை நகைப் பேழையில் வைத்திருப்பீர்கள்!'' என்றாள்.

அவனது கையிலிருந்து அவள் அந்தத் துண்டை வெடுக்கென்று எடுத்து, அசட்டையுடன் வாசலில் வீசி எறிந்தாள். மதுரையில் பிரபலமான ஒரு காதல் கீதத்தை இனிமையாக இசைத்தபடி நகைகளை அணியலானாள்.

நள்ளிரவு கடந்து விட்டது. ஆய்மகளின் கணவன் கால் எழும்பாமல் வீட்டுக்குத் திரும்பி நடந்தான். அரண்மனையில் குழம்பிக் கொண்டு கிடந்தால் மட்டும் அவனால் என்ன செய்துவிட முடியும்? மாமன்னன் கம்ஸனுடைய உயிரற்ற உடலில் உணர்வை மீட்கும் வல்லமை யாருடைய கண்ணீருக்கும் இல்லை. எவருடைய புலம்பலுக்கும் இல்லை.

நினைத்தது ஒன்று; நடந்தது வேறு! மற்போரில் கண்ணனையும் பலராமனையும் கொன்று தீர்க்கத் திட்டமிட்டிருந்தான் கம்ஸன். ஆனால், மாயக் கண்ணன், அந்தத் திட்டத்தைக் குலைத்து எய்தவன் மீதே அம்பு பாயச் செய்து விட்டான்! 'கம்ஸன் கொலையுண்ட செய்தி இவ்வளவு நேரத்தில் ஜராஸந்த மகாராஜாவின் காதுக்கு எட்டியிருக்கும். அவன் பிரம்மாண்டமான சேனையுடன் வாயு வேகமாக மதுரைக்கு வருவான்; இந்தத் துஷ்டப் பயல் கிருஷ்ணனைக் கடுகு கடுகாகத் துளைத்துத் துண்டமாக்கி எல்லாத் திசைகளிலும் எறியப் போகிறான்!'—இந்த ஒரே ஆறுதல்தான் இப்போது மதுரை மாநகரில் மிஞ்சி யிருந்தது.

தன் வீட்டை அணுகி விட்டதுகூடச் சிந்தனை மயக்கத்தில் கோபியின் கணவனுக்குத் தெரியவில்லை. எதிரே கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. கையில் விளக்குடன் யாரோ வாசலில் குறுக்கும் நெடுக்குமாக நடப்பது தெரிந்தது. 'பயங்கரமான இந்த யமராத்திரியில் எதுவும் நடக்கலாம். இது யார், திருடனா, பிசாசா?' என்று அவன் திகைத்தான்.

தயங்கித் தயங்கி முன்சென்று அவன் அந்த உருவத்தின் அருகில் வந்தான்; நன்றாகக் கவனித்துப் பார்த்தான். கையில் விளக்கை வைத்துக் கொண்டு கோபிதான் எதையோ தேடினாள்!

அவன் கொதிப்புடன், ''அடி அசடே! உன் உயிர் உனக்கு வேண்டாததாக இருக்கலாம். எனக்கு அது வேண்டும். பேசாமல் வீட்டுக்குள் வா!'' என்றான்.

''நீங்கள் போங்கள் உள்ளே! இன்றைக்கு மிகவும் களைத்து வந்திருப்பீர்கள். இதோ உங்கள் பின்னாலேயே வருகிறேன்!''

''வாசலில் எதைத் தேடுகிறாய், பைத்தியம் மாதிரி?''

''ஒரு நகையை.''

''நகையா? போனால் மற்றொன்று செய்து கொள்ளலாமே!''

''ஒவ்வொரு நகையிலும் பெண்கள் எப்படி உயிரை வைத்திருக்கிறார்கள் என்பது ஆண்களான உங்களுக்கு எப்போதும் தெரிய முடியாது! 'கணவனே பெண்ணுக்கு அணிகலன்' என்று நாங்கள் சும்மாவா சொல்கிறோம்?''

''அப்படி என்ன விலை உயர்ந்த நகை போய் விட்டது?''

''என் வங்கி! இன்று பகலில் எல்லாமே விபரீதமாக நடந்தது. நான் வீடு திரும்பிய போது என் மனம் ஒரு நிலையிலே இல்லை. பாழாய்ப்போன அந்த வங்கி, இங்கேதான் எங்கோ நழுவி விழுந்திருக்க வேண்டும்!''

சிரித்துக் கொண்டே அவன் வீட்டினுள் சென்றான். ஆய்மகள் குனிந்து மீண்டும் தேடலானாள். பகலில் கண்ணன் அவளை யதேச்சையாகப் பார்த்தான்; அவளும் அவனைப் பார்த்தாள். அந்தக் கண்ணியின் நோக்கு, கோகுலத்து இனிய நினைவுகளை எழுப்பி அவளை மயக்கி மகிழ்விக்கலாயிற்று.


காலையில் அவள் வாசலில் வீசி எறிந்தாளே ஒரு பானைச் சுக்கல் — அது ஓட்டாஞ்சல்லியல்ல; அவளுடைய நெஞ்சமே அப்படித் தெறித்து விழுந்திருந்தது! அது கிடைத்தாலன்றி அவள் அமைதியாகத் தூங்க முடியாது. நெடு நாட்களாகப் பாடாமலிருந்த கோகுலத்துப் பழம் பாடலொன்றை உருக்கமாக இசைத்துக் கொண்டே — அவள் அந்த உடைசல் துண்டைத் தேடலானாள்.

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

1898
முதல் பிரசித்தி பெற்றது
பண்டிட் D.கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட் - சென்னை-17.

ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்


ARAVIND LABORATORIES MADRAS-600 033



TN3CB : 112.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."

மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.



குட்மார்னிங் டாக்டர்: பழி ஒரு பக்கம் பாவம் ஒரு பக்கம்!

அந்த இளைஞனை அவனுடைய பெற்றோர் என்னிடம் அழைத்து வந்தபோது அவனுடைய உடலில் வெளிப்படையாக எவ்விதக் கோளாறும் தென்படவில்லை. நான் இளைஞனைப் பரிசோதனை செய்யத் தொடங்கும் முன் அவன் தாயார் கூறினார்: ''படிக்கப் பட்டம் வாங்கியிருக்கான் டாக்டர்! மூணு வருஷமா ஒழுங்கா வேலை பார்த்துக்கிட்டுத்தான் இருந்தான். இப்போ மூன்று மாசமா திடீர்னு எதையோ நினைச்சுக்கிறான். சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசறான். மூளைக் கோளாறு இருக்குமோன்னு சந்தேகமாகவும் இருக்கு. ஆனால் சில நேரங்களில் மட்டும்தான். மற்ற சமயங்களில் தெளிவாகப் பேசறான்.''

இளைஞனைப் பல விதத்தில் சோதனைகள் செய்துவிட்டு, இரத்த அழுத்தம் எப்படி இருக்கிறது என்று அதற்குரிய கருவி கொண்டு பார்த்தேன். பாபுவின் இரத்த அழுத்தத்தைக் குறைக்க மருந்து எழுதிக் கொடுத்து விட்டு ஒரு மாதம் கழித்து மீண்டும் அழைத்து வரச் சொன்னேன். ஒரு மாதம் மருந்து சாப்பிட்ட பிறகு பாபு பழைய பாபு ஆகிவிட்டதாக அவனுடைய பெற்றோர் கூறினர்.

இரத்த அழுத்தம் கூடுதலாக இருந்ததால் தான் பாபுவுக்கு மூளையும் சற்று பாதிக்கப் பட்டிருக்கலாம் என்ற என் முடிவு சரியாகி விட்டது. மூளைக்குப் போதிய இரத்தம் போகாததால் ஏற்பட்ட கோளாறு இது. பழி ஒரு புறம் பாவம் ஒரு புறம் என்பது போல் பாபுவுக்கு மூளைக் கோளாறு என்றே நினைத்து விட்டார்கள்!

''மூளையைப் பாதிக்கிற அளவுக்குக் கொடிய வியாதியா டாக்டர், இந்த இரத்த அழுத்தம்?''

''இரத்த அழுத்தம் பல வியாதிகளுக்கு மூல காரணமாய் அமைகிறது. இரத்த அழுத்தமே ஒரு வியாதியாகி விடாது. இரத்த அழுத்தம் அதிகமாவதன் விளைவாக உடல் முழுவதும் வீக்கம் ஏற்படலாம். வலிப்பு (Fits) வருவதுண்டு. சிலருக்குக் கண் பார்வை பாதிக்கப்படுவதும் உண்டு. பேசும் சக்தியை இழக்கும்படியும் நேரிடலாம். மார்பில் வலி ஏற்படவும் ஏதுவாகும். தனக்கு இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறது என்பதே பல நோயாளிகளுக்குத் தெரிவதில்லை. ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் இரத்த அழுத்தத்தைக் கட்டுப் படுத்துவது எளிது. நாள்பட்ட நோயாக இருந்தால் குணப்படுத்த முடியாமல் போகக் கூடும்.''

''பொதுவாக இது நாற்பது ஐம்பது வயதுக்கு மேல்தான் வரக் கூடும் இல்லையா?''

''அப்படி ஒன்றும் நியதி இல்லை. சில சமயம் ஒரு வருடக் குழந்தைக்குக்கூட ஏற்படலாம்.''

''இரத்த அழுத்தம் ஏன் மிகுதியாகிறது?''

''ஆரோக்கியநிலையில் அழுத்தம் 80/120 என்று கொள்ளலாம். இது 90/140 என்ற அளவுக்கு உயர்ந்தால் குற்றமில்லை. அதற்கு மேல் உயர்ந்தால்தான் மருந்துகளின் மூலம் அழுத்தத்தைக் குறைக்க வேண்டியது அவசியமாகும். பல்வேறு காரணங்களால் இரத்த அழுத்தம் அதிகமாகிறது. உதாரணமாக பிட்யூட்டரி அல்லது அட்ரினல் சுரப்பிகளின் இயக்கம் அதிகரிக்கும்போது இரத்த அழுத்தம் கூடுதலாகக் கூடும். சிறு நீரகங்களில் ஏற்படும் கோளாறுகளால் அழுத்தம் கூடுதலாகும். பரம்பரையாகவும் இது வரக் கூடும்.''

''இரத்த அழுத்தம் அதிகமாகாமலிருக்க முன்னெச்சரிக்கையாக என்ன செய்யலாம்?''

''அதிகப் பருமனாக உள்ளவர்கள் எடையைக் குறைப்பது நலம். கொழுப்பு, மாவுச் சத்து (Starch) உள்ள உணவை அதிகம்

□ □ □ □ □ □ □ □ □ □

''என் கணவருக்கு மின்சார வேலை எதுவும் தெரியாது: தச்சு வேலை கொஞ்சமும் தெரியாது: குழாய் ரிப்பேர் செய்யத் தெரியாது. ரேடியோ ரிப்பேரானால் பழுது பார்க்கத் தெரியாது.''

''அதிலென்ன உனக்கு இவ்வளவு சந்தோஷம்?''

''அவர் கை படாமல் வீட்டில் இருக்கும் ரேடியோ, நாற்காலி, மின்சார சாதனம் எல்லாம் உருப்படியாக இருக்கின்றனவே!''

-முத்து



உட்கொள்ளாமல் இருக்க வேண்டும். முக்கியமாக உணவில் உப்பு சேர்ப்பதைக் குறைக்க வேண்டும். புகை பிடிப்பவர்கள் அந்தப் பழக்கத்தைக் கைவிட வேண்டும். மன உளைச்சலுக்கும் கோபத்துக்கும் இடந் தரலாகாது.''

''இரத்த அழுத்தத்தை மருந்துகளின் மூலம் குணப்படுத்திவிட முடியுமா?''

''அழுத்தம் சிறிதளவு மட்டுமே அதிகரித்தால் எளிதில் கட்டுப்படுத்திவிடலாம். என்ன காரணத்தால் அழுத்தம் அதிகரித்துள்ளது என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப மருந்து உட்கொள்ள வேண்டும். நாள்பட்ட 'கேஸ்' என்றால் அழுத்தம் கட்டுப்பாட்டுக்குள் அடங்க நாளாகும். பொதுவாக இதற்கு மாத்திரைகள் சாப்பிட்டால் போதும். மிகவும் ஆபத்தான கட்டத்தில்தான் இஞ்செக்ஷன் போட்டு உடனடியாகக் குறைக்க வேண்டியிருக்கும். சிலருக்கு ஓரளவு (Maintenance dose) மருந்து நிறுத்தாமல் சாப்பிட்டுக் கொண்டே இருக்க நேரிடலாம். இரத்த அழுத்தத்துக்கான மருந்து உள்நாட்டில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டே தயாரிக்கப்படுகிறது.''

டாக்டர் கே. ராமச்சந்திரா கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி.



(பிச்சை எடுப்பதை ஒழிக்கும் சட்டம் தீவிரமாக அமுலானால்.,..)

☐ பிச்சை எடுப்போர் சங்கத் தலைவர்: அன்பர்களே ! நண்பர்களே! பிச்சை எடுப்பதை ஒழிக்கப் போவதால், நாம் இனி 'சிறு நன்கொடை பெறுவோர்'களாக மாறுவோம் என வேண்டுகிறேன்.


☐ கருமி கைலாசத்தின் சிந்தனை: அப்பாடா! ஒரு வழியா பிச்சை எடுப்பது ஒழியப் போவுது! இனி எந்தப் பிச்சைக்காரப் பயல் என்னைக் 'கருமி கைலாசம்'னு சொல்லுவான்?

☐ துப்பறியும் நிபுணர் (போலீஸ்காரரிடம்): ஐயோ! நான் பிச்சைக்கார வேஷத்தில் அந்தத் திருடனைப் பிடிக்க அல்லவா போய்க் கொண்டிருந்தேன். என்னை வந்து பிடிக்கிறீர்களே!


☐ ஒருவர் (போலீஸ்காரரிடம்) : என் உண்மையான பேரு அல்லாபிச்சைங்க. 'ஏ. பிச்சை'ன்னு கூப்பிடுவாங்க. மற்றபடி நான் பிச்சையெல்லாம் எடுப்பது கிடையாதுங்க!

☐ திருமால் (லட்சுமியிடம்): யாராவது என்னைத் தேடி வந்தால், இல்லையென்று கூறிவிடு. ஏனென்றால் என்னைப் பிச்சை எடுத்தான் பெருமாள்னு குறிப்பிட்டதாலே போலீஸ் வந்துப் பிடிச்சாலும் பிடிச்சுடுவாங்க !

— செங்கைக் சுந்தரம்



உங்கள் குழந்தையை இந்தக் கோடையில் வேர்க்குரு எங்கு தாக்கும்?



வேர்க்குரு எங்கு தாக்கினாலும், அதை முறியடிக்க உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரில் மட்டுமே நிருபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது. அது மூன்று வழிகளில் செயலாற்றுகிறது.

- வியர்வையை உறிஞ்சுகிறது; சருமத் துவாரங்கள் அடைபடுவதைத் தடுக்கிறது.
- பாக்டீரியா கிருமிகள் பெருகுவதைத் தடுக்கிறது.
- சுகமும் குளுமையும் தந்து, உடனடி நிவாரணம் அளிக்கிறது. ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரைக் குளித்தவுடனும், படுக்கும் முன்பும் உடம்பின்மீது தாராளமாகத் தூவுங்கள். உடனடியாக வேர்க்குருவைத் தடுக்கத் தாய்மார்கள் நம்பும் மருந்து கலந்த வேர்க்குரு பவுடர் இது ஒன்றுதான்!



சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

ஜான்ஸன்ஸ்* ப்ரிக்லி ஹீட் பவுடர் மட்டுமே உடல் எரிச்சலை நிறுத்துகிறது, அரிப்பிலிருந்து நிவாரணமளிக்கிறது உடனடியாக.

Johnson & Johnson

* Trademark © J&J 75

OBM-4316/R TAM



சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே !....
சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா
சூரிய சந்திரரோ ?....
உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா
உன்மத்தமாகுதடி !....

— பாரதியார்

— புகைப்படம் : பி. வி. சுப்பிரமணியம்

ஃபோட்டோ பேஜ்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



மின்னலடிக்குது ஸூப்பர் ரின்... வெண்மை
ஓங்குது மேன் மேலும் !
~~ரூ. 1.60~~
இப்போது ரூ. 1·48 தான்
SUPER
RIN
DETERGENT CAKE
PRICE REDUCED ~~Rs. 1.60~~ Rs 1.48 ONLY
(TAXES EXTRA)
MADE IN INDIA
ஸூப்பர் ரின் டிட்டர்ஜெண்ட் வில்லை: நீங்கள் இதுவரை உபயோகித்த எந்த டிட்டர்ஜெண்ட் வில்லையையும் விட, எந்த சோப்பையும் விட அதிக வெண்மை... ஒரே சலவையில் காண்பீர்கள் அந்த உயர்வை. அதோடல்ல, மின் வெண்மை மயமான ஸூப்பர் ரின் வெண்மை... சலவைக்கு சலவை அதி வெண்மை. செழிப்பான நுரை கொழித்து அதிக வெண்மையூட்டுவதற்கான பொருள்கள் அடங்கியது ஸூப்பர் ரின் ஒன்றுதான்—காத்திருந்த வெண்மையினைக் கைக்கெட்டச் செய்கிறது உங்களுக்கு.
கொடுக்கும் பணத்திற்குக் கூடுதலான வெண்மை-தருவது ஸூப்பர் ரின்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
லின்டாஸ்-RIN. 19A-140 TH

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியா காசு

